கல்கி

KALKI 22-9-1974 60 காசு



மர்மச் சிறப்பிதழ்

வாழ்க்கை ஒரு கண்டுபிடிப்பு



'க்ளிக்' அடித்துவைப்பீர் - நீங்காத நினைவுக்கே

விலை
ரூ. 70.25
(எக்சைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



எப்போதுமே உங்கள் கைவசமிருக்கட்டும், தப்பாதத் துணையான க்ளிக் III. மின்னலெனத் தோன்றி மறையும், வாழ்வின் அந்த மகோன்னதமான கணங்களைப் பிடித்துக் காத்திடுவீர், என்றென்றும் நீங்காத நினைவுக்கே. 'குறிவைத்ததும் கப்பென' தப்பாமலே எடுப்பதற்கு ஏற்றது ஆக்பா க்ளிக்; நடைமுறைக்குகந்தது. உள்ளது உள்ளபடியே எடுப்பது, கையாளச் சுலபமானது, சிக்கனமானது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் 12 பெரிய (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறந்த தயாரித்த தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஆகியவை தனியாக விலைக்குக் கிடைக்கும்.

துல்லியமான பிரிண்டுகளையும், என்லார்ஜ்மெண்டுகளையும் பெறுவதற்கே ஆக்பா-கேவார்ட் போட்டோ தாள்களையே வற்புறுத்திப் பெறுங்கள்.
அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.
ஆக்பா-கேவார்ட் ஏ. ஜி. லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

ஆக்பா க்ளிக்
இந்தியாவின் மிகப்
பிரபலமான காமிரா.

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
பம்பாய் · புது டெல்லி · கல்கத்தா · சென்னை
புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட் ஆண்ட்வெர்ப்/லீவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

துணிகரக் குற்றத்தையும் துப்பறியும் நிறுவனம்!



சிவில் எஞ்சினியரிங்பயின்று பட்டம் பெறும் பொருட்டு 1956ம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்ற இளைஞன் பிரேம்குமாருக்கு அப்போது 18 வயதுகூட நிரம்பவில்லை. அமெரிக்காவில் பொறியியல் பயிலுங்கால், ஒரு ஹோட்டலில் கண்காணிப்பாளராகப் பகுதி நேர வேலையும் கிடைத்தது. அப்போது கிடைத்த தாற்காலிகத் துப்பறியும் வேலைதம்முடைய எதிர்கால வாழ்வில் நிரந்தரமான தொழிலாகிவிடப் போகிறது என்று குமார் கனவுகூடக் கண்டிருக்க முடியாது! சிகாகோ போலீசார் நீண்ட காலமாகச் சல்லடை போட்டுச் சலித்துக் கொண்டிருந்த இரு அழகிய சகோதரிகள் அதே ஹோட்டலில் தானு வந்து தங்கியிருக்க வேண்டும்? அருகிலிருந்த ஒரு பாங்கில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருந்த அந்த அழகிகள் குமாரையே தங்களுடைய கூட்டாளியாகச் சேர்த்து கொள்ளுமாறு அழைத்தார்கள்! அதன் விளைவாகக் குமாருக்கு அடித்தது யோகம்!

சதிகாரச் சகோதரிகள் இருவரையும் பிடிப்பதற்குப் போலீசுக்கு உதவினார் என்ற காரணத்தினால் துப்பறியும் துறையில் பயிற்சி பெறும் வாய்ப்பினைப்பெற்றார், பிரேம்குமார். பிறகு, இங்கிலாந்திலும் துப்பறியும் துறையில் கடுமையான பயிற்சியினைப் பெற்றுத் தாயகம் திரும்பினார்! இந்தியா வந்தவுடன் சுங்க அதிகாரிகள் அவர் கொண்டு வந்திருந்த கைத் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு விட்டனராம். 'குளோப் டிடெக்டிவ் ஏஜென்ஸி'யின் நிர்வாக இயக்குனராக இன்று ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டு சுமார் 2000 பேர்களுக்கு மேல் அந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பும் அளித்துள்ள பிரேம்குமாருக்கு அன்று தாயகம் திரும்பி வந்தபோது ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வேலை கூடக் கிடைக்கவில்லை!

இன்று இந்தியாவிலேயே 'குளோப் டிடெக்டிவ் ஏஜென்ஸி' ஒன்றுதான் (டெல்லியை மத்திய கேந்திரமாகக் கொண்டு) பம்பாய், கல்கத்தா, சென்னை, பெங்களூர் ஆகிய இடங்களில் அலுவலகங்களை அமைத்து நாடு தழுவிய துப்பறியும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. விரைவில் ஐதராபாத்திலும் ஒரு கிளை நிறுவனம் அமையவிருக்கிறதாம். சுமார் 180 பேர பணியாற்றும் சென்னைக் கிளையின் மானேஜர் திரு முல்க் (டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்) நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். 'சென்னை நகரில் எந்த மாதிரியான வழக்குகள் உங்களிடம் வந்து சேருகின்றன?' என்று கேட்கிறேன்.

''பெரிய தொழில் நிறுவனங்களில் பாதுகாப்புப் பணிக்கு எங்கள் உதவி கோரப்படுகிறது. தொழிற்சாலைகளில் பொருட்கள் திருட்டுப் போகாமல் தடுக்க அனுபவமிக்க எங்கள் செக்யூரிட்டி கார்டுகளை அனுப்பி வைக்கிறோம். வாகனங்களில் அனுப்பிவைக்கப்படும் பொருட்கள் களவு போகாமல் தடுக்கவும் களவு போனவற்றைத் தேடிக் கண்டு பிடிக்கவும் எங்கள் சேவை பயன்படுகிறது. மருந்துகளில் கலப்படம் செய்வதைக் கண்டு பிடிக்கவும் எங்கள் உதவியைப் பல வர்த்தக நிறுவனங்கள் நாடுகின்றன. கொலை, கொள்ளை முதலியவற்றை விசாரணை செய்யும் பொறுப்பு போலீசாருடையது. போலீசாரின் பணியில் நாங்கள் குறுக்கிடுவதில்லை. அவர்களுக்கு உதவும் வகையிலேயே எங்கள் சேவையைப் பயன்படுத்துகிறோம்.''

''உங்களது புதுதில்லி அலுவலகமும் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள கிளைகளும் கையாண்டுள்ள முக்கியமான வழக்குகள் பற்றிக் கூற முடியுமா?''

திரு குமார் கூறுகிறார்:

''அஸ்ஸாம் தேயிலைத் தோட்ட அதிபர் ஒருவர் தமது தேயிலைத் தோட்டத்திலிருந்த தொழிற்சாலையை எரித்து விட்டார். ஒரு பாங்கை உட்கையாக அமர்த்திக் கொண்டு அவர் நடத்திய சூழ்ச்சி இது. இன்ஷியூரன்ஸ் கம்பெனியை மோசடி செய்து பணம் பறிக்கத்





1. பல நிறுவனங்களில் பாதுகாப்புப் பணியைக் குளோப் துப்பறியும் நிறுவனம் ஏற்கிறது. மானேஜிங் டைரக்டர் பிரேம்குமார் தம் அலுவலகத்தைச் சேர்ந்த பாதுகாப்பாளர் ஒருவருக்குச் சட்ட நுணுக்கங்களை விவரிக்கிறார்.
2. துப்புத் துலக்கும் பணி தொடருகிறது.
3. சென்னை பிராந்திய மானேஜர் மிஸ்டர் மூல்க் போலி மருந்துகளைப் பற்றித் தம் உதவியாளருக்கு விளக்கிச் சொல்கிறார்.

திட்டம். சம்பந்தப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலிருந்து எங்கள் கல்கத்தா கிளைக்கு டெலிபோனில் அழைப்பு வந்தது. எங்கள் துப்பறியும் நிபுணர் அஸ்ஸாமில் தொலைபேசி நிறுவனம், தேயிலைத் தோட்டம், தொழிற்சாலை முதலியவைகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டுப் பல விவரங்களைச் சேகரித்தார். இதில் முக்கியமான விஷயம், தேயிலைத் தோட்டம் எரியத் தொடங்கி இருபது நிமிடங்களுக்குப் பிறகுதான் தீயணைப்புப் படைக்கு டெலிபோன் வந்தது. இருபது நிமிடத் தாமதம் சந்தேகத்தைக் கிளப்பியது. மேலும் தொழிற்சாலையின் கொதிகலன் வேண்டுமென்றே நீண்ட நேரம் ஓயாமல் இயக்கப்பட்டிருந்த உண்மையும் புலனாயிற்று! மோசடி வெளியாயிற்று.''


பிரேம் குமார் தொடர்ந்து கூறுகிறார்: ''துணிகளைச் சோப்புப் போட்டுத் துவைத்த பிறகு நன்றாக வெளுப்பதற்காக நீலப் பவுடர் கரைத்த தண்ணீரில் துணிகளை நனைப்பது வழக்கமல்லவா? அந்த நீலப் பவுடர் கம்பெனி ஒன்று எங்கள் உதவியை ஒரு தடவை நாடியது. அவர்களது விற்பனை திடீரென்று நாலில் ஒரு பங்காகக் குறைந்து விட்டது என்று அறிந்தோம். போலியாக அதேமாதிரி லேபிள்கள் தயாரித்துப் போலியான மலிவுச் சரக்கை விற்பனை செய்து வந்தார்கள் சிலர். அந்த ரகசியச் சூழ்ச்சியைக் கண்டுபிடிக்க எங்கள் நிறுவனம் உதவியுள்ளது. அம்மாதிரியே இந்தியாவில் தையல் மெஷின்கள் தயாரிக்கும் கம்பெனி ஒன்று அதன் வியாபாரம் திடீரென்று மந்தமாகிவிட்டதாகத் தெரிவித்தார்கள். குளோப் நிறுவனம் தீவிரமாகச் சோதனைகள் நிகழ்த்தியதன் விளைவாகச் சிறிய கடைகளில் கூட செக்கோஸ்லவேகிய ஊசிகளும், மேற்கு ஜெர்மனி ஊசிகளும் சீனத் தையல் ஊசிகளும் சில்லறையாக மட்டுமின்றி மொத்தமாகவும் விற்பனை செய்யப்பட்டதைக் கண்டுபிடிக்க முடிந்தது.''

எல்லாம் கள்ளக் கடத்தல் சரக்குகள். கல்கத்தா சுங்க இலாகா இக்கள்ளக் கடத்தல் பற்றிய தகவல்களைத் தேடித் தந்ததற்காகக் குளோப் துப்பறியும் நிறுவனத்துக்கு ரொக்க வெகுமதி அளித்தது.

திரு குமார் தமது நிறுவனம் ஈடுபட்ட சில நூதன கொலை, திருட்டு வழக்குகளை விளக்கக் கேட்டபோது ஒவ்வொன்றும் சுவை மிக்க துப்பறியும் நவீனம் போன்று இருந்தன. பாட்டியாலா கொலை வழக்கு மிகப் பிரபலமான ஒன்று. அதிகாரிகள் அதனைக் கைவிட்ட பிறகு அதில் நேரிடையாக ஈடுபட்டுக் குமார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார். அவர்களுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. அந்த வழக்குக்குப் பிறகு இவர்கள் ஏஜன்ஸி பற்றிப் பாராளுமன்றத்தில் கூடப் பேசப்பட்டது. குமார் இந்தியா திரும்பியபோது சுங்க அதிகாரிகள் அவரிடமிருந்து பறித்துக் கொண்ட கைத் துப்பாக்கியையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்!

'கல்கி' மர்மச் சிறப்பிதழுக்கு இந்தத் துப்பறியும் நிறுவனம் பற்றிய கட்டுரை எழுத நினைத்தபோது தற்செயலாக அதன் தலைவர் குமார் புதுதில்லியிலிருந்து சென்னைக்கு வந்தது ஓர் அரிய வாய்ப்பு. ஆனால், மௌண்ட் ரோடில் இவர்கள் அலுவலகம் அமைந்துள்ள ஆறுமுக நாயக்கன் தெருவைக் கண்டுபிடிக்க நானே துப்பறிபவனாகச் செயல்பட வேண்டியிருந்தது!

— 'பாணன்'



கல்கி

மர்மச் சிறப்பிதழ்

இந்தச் சிறப்பிதழில் சேகரித்துத் தரப்பட்டுள்ள சுவையான தகவல்கள் பற்றி நாங்கள் மகிழ்ச்சி அடையும்போதே எழுத முடியாமல் போன தகவல்கள் குறித்து விசனிக்கவும் செய்கிறோம்!

பங்களா தேச விடுதலைப் போரின் போது அசகாயசூர சாமர்த்தியத்துடன் நடந்த சில ஒற்றாடல்கள், பாதுகாப்புத் துறையின் சில சாகசங்கள் பற்றியெல்லாம் அதிசயமான தகவல்கள் கிடைத்தன. அவற்றை எழுத அனுமதி கோரியபோது, "ஐயோ! வேண்டாம்! ஆளை விடுங்கள்!" என்ற அலறல் புறப்பட்டது. "உயர் பதவியிலுள்ள ஒரு கடற்படை அதிகாரி இப்படித்தான் சில ரகசியங்களை வெற்றிப் பெருமிதத்தால் கூறப் போக, அவை பிரசுரமாகிப் பிரதமரின் பார்வைக்கும் எட்டி... பிறகு, அதையேன் கேட்கிறீர்கள்! அவரை வாங்கு வாங்கு என்று வாங்கி விட்டார்! அந்த அதிகாரியின் உத்தியோக உயர்வு பாதிக்கப்பட்டுவிட்டது" என்றார் ஒரு நண்பர். பாதுகாப்புத் துறையின் ரகசியத் தஸ்தாவேஜுகளை ரொம்ப காலம் கழித்துத்தான் 'இனி பொது மக்கள் பார்வைக்கு வைக்கலாம்' என்று தீர்மானிப்பார்களாம். அதுவரை நாம் காத்திருக்க வேண்டியதுதான்!

பல்வேறு விளையாட்டுக்களைப் பற்றியும், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பற்றியும் எழுதுகையில் "**குண்டுமணி**" யாகத் திகழும் நமது உதவி ஆசிரியர் இந்த மர்மச் சிறப்பிதழை உருவாக்குகையில் **பி. எஸ். எம்.** ஆகவே செயல்பட்டிருக்கிறார். புகுந்து விளையாடியிருக்கிறார் என்றுகூடச் சொல்லலாம்; அத்தனை சுவையாக இருக்கிறது சிறப்பிதழ் ... ஆனால், அதை நீங்களல்லவோ சொல்ல வேண்டும்!

— ஆசிரியர்

ஆனந்த, புரட்டாசி 6
செப்டம்பர் 22, 1974

*



ஒரு சமஸ்தானத்தின் திவான் பதவியை நிகர்த்தது ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியாள் மடத்தின் 'ஸ்ரீகாரிய'ப் பதவி. கும்பகோணம் மடத்தில் இப்பதவியில் இருந்து பல்லாண்டு பொற்பணி புரிந்து 'மந்திரி ரத்னம்' என்று புகழ் கொண்டவர் **ஸ்ரீ ஏ. ஆர். சேஷய்யா சாஸ்திரிகள்**. இவரது சஷ்டியப்த பூர்த்தி சமீபத்தில் சின்ன காஞ்சியில் சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜனித்த இல்லத்தில் கோலாகல வைபவமாக நடைபெற்றது. அச்சமயம் 61 காமாக்ஷியம்மன் காசுகள் கொண்ட ஹாரம் ஸ்ரீ ஜகத்குருவால் அவருக்கு அனுக்கிரஹிக்கப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் அன்று தமது இருக்கையான ஸ்தானத்திலும் இவ்விழாவை பக்தர் அனைவரும் கொண்டாடச் செய்ததிலிருந்து ஸ்ரீ சேஷய்யா சாஸ்திரிகளின் ஆசாரிய சேவை எத்துணை உயர்வானது என்று தெரிந்தது. இவ் வுத்தம தம்பதியர் இன்னும் பல்லாண்டு வாழி, வாழியவே!



சென்னை, இந்தியன் ஏர்லைன்ஸ் ஸ்ரீ கே. ஏ. சுப்ரமணியன் அவர்களின் குமாரத்தி ராஜி என்கிற சௌபாக்யவதி K. S. மீனாட்சிக்கும், சென்னை V. D. சுவாமி & கம்பெனியில் பணிபுரியும் சிரஞ்சீவி K. J. K. கிருஷ்ணன் B. Sc.,க்கும் சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



நினைவில் நிற்கும் நேரங்கள்
பின்னி அறிந்திடும், நீங்கள் எப்படித் தோற்றமளிக்க விரும்புவீர் என்பதை
Interpub/BB/47/74 tam
பின்னி வழங்கும் 'டெரீன்' கலந்த, அணியத் தூண்டும் துணிவகைகள் நீங்கள் விரும்பும் தோற்றம் தந்திட துணை புரிகின்றன. குறிப்பாக, நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளில்.
நாங்கள் பெருமளவில் மாறிவிட்டோம்—
உங்களைப் போலவே!
பின்னி
TERENE® இழைந்தது
® இது கை:.பியின் பதிவுபெற்ற ட்ரேட்மார்க்

கல்கி

மலர் 34

இதழ் 8

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

பீமனை வாழ்த்துகிறோம்!

பார்ப்பதற்குப் பீமசேனன் போன்று தோற்றமளிக்கும் திரு பிலூமோடி தம்மைப் போன்ற இரட்டை நாடிச் சரீரக்காரர்களுக்கென்றே பாராளுமன்றத்தில் 'பீமசேனன் கிளப்' ஆரம்பித்தார். அவரது உடல் பலம் எப்படியோ; ஆனால் மனோபலத்தில் பீமசேனனுக்கு நிகரானவர்தாம்! பாராளுமன்றத்தில் அவர் பேச்சுக்களில் ஆணித்தரமான தர்க்க வாதம் இருக்கும். அத்துடன் அசாதாரணத் துணிச்சலுடன் கூடிய நையாண்டியும் இருக்கும்.

திரு பிலூமோடி அண்மையில் செய்த காரியம் ஒன்று பாராளுமன்றத்தை ஒரு கலக்குக் கலக்கியதுடன் ஆட்சியிலுள்ளோரைக் கதிகலங்கவும் அடித்து விட்டது. பாரத மக்களோ இத்தனை விழிப்புணர்ச்சியுடனும் சாமர்த்தியமாகவும் செயல்படும் 'பீமனை' மனமாரப் பாராட்டுகிறார்கள்.

யானம், மாஹி, காரைக்கால், பாண்டிச்சேரி ஆகிய பிரதேசங்களில் இயங்கும் ஏழு நிறுவனங்களுக்கு அரசு சுமார் முப்பது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை இறக்குமதி செய்ய லைசென்ஸ் வழங்கியது. இதைச் சிபாரிசு செய்து இருபத்தொரு ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிறுவனங்களோ அரசின் கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அதாவது இந்த நிறுவனங்களில் தில்லுமுல்லுகள் நிலவுகின்றன, புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதாக அர்த்தம். 'இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு எவ்வாறு இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்யலாம்?' என்ற கேள்வி எழுந்தபோது அந்நிறுவனங்கள் உண்மையில் கறுப்புப் பட்டியலில் இல்லை என்றும் ஏதோ தவறு நேர்ந்துவிட்டதாகவும் அரசு மழுப்பியது. இதை உண்மை என்றே கொள்வோம். பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் போன்ற பகுதிகளிலிருந்து வந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எங்கோ காரைக்காலில் உள்ள நிறுவனத்தின் மீது ஏற்பட்ட கரிசனத்தையும் தேசிய ஒருமைப்பாடு என்ற நோக்கில் ஒப்புக்கொள்வோம். ஆனால்—

அந்த அங்கத்தினரில் ஒருவரைத் தவிர மற்ற இருபது பேரும் 'நாங்கள் கையெழுத்துப் போடவில்லை. அவை பொய்க் கையெழுத்துக்கள்' என்று கூறிவிட்டார்களே, அதுதான் சமாதானங்களையெல்லாம் அடித்து விரட்டிச் சந்தேகப்பேயை விசுவரூபமெடுக்க அனுமதித்திருக்கிறது. அத்துடன் முடிந்ததா கதை?

இதையொட்டி திரு ஃபர்னாண்டஸ் தமது ஹிந்திப் பத்திரிகை 'ப்ரதி பக்ஷா'வில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தாறுமாறாகத் தாக்கி எழுதினார். திரு பிலூமோடியின் திறமை இந்தக் கட்டத்தில்தான் பளிச்சிட்டது. பாராளுமன்றத்தின் உரிமைகளில் தலையிட்டதாக ஃபர்னாண்டஸ் மீது அவர் கண்டனத் தீர்மானம் கொணர்ந்தார். இதனைத் தங்களுக்கு வைக்கப்பட்ட கண்ணி என்று உணராத ஆளும் கட்சி அங்கத்தினர்கள், பிரமாதமாக வரவேற்றனர். மந்திரி ரகுராமையா தீர்மானத்தை எதிர்த்ததும் விழித்துக்கொண்டு எல்லா இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் எதிர்க்க ஆரம்பித்தனர். சந்தேகாஸ்பதமான நிலை என்பது மாறி, சாக்கடை, துர்நாற்றம் என்ற நிலைக்கு வந்துவிட்டது நிலவரம்.

பாராளுமன்ற உரிமைகள் காக்கும் கமிட்டி இந்த மோசடிகளை ஆராய வேண்டும் என்ற எதிர்க் கட்சியின் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது. ஸி. பி. ஐ.யிடம் புலன் விசாரணையை ஒப்படைத்துள்ளது. உண்மைகள் முழுமையாக வெளிப்படுமா என்ற ஐயம் மக்களுக்கு இதனால் ஏற்பட்டுள்ளது.

ஊர் சிரித்து, நாடு சிரித்து, உலகம் சிரிக்கும் இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் என்ன? சோஷலிஸ மாயையும் பெர்மிட் லைசென்ஸ் பொருளாதாரக் கொள்கையும்தான்.

நோய் உள்ளவரை ஜுரம் இறங்காது.



தேநீரின் பல சுவைகளும்
மிளிர்ந்து மணப்பது
ஒரு கோப்பை
லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட்
டீயிலே!
HIMALAYAN
GOLDEN DUST TEA
LIPTON'S
FINEST
GOLDEN DUST TEA
லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன் டஸ்ட்
மனதை
மகிழ்விக்கும்
தேநீர்
LHGC-13 TAM

என்ன சேதி?

அறுந்த டேப் ரேடியோ!

இம்மாதம் ஏழாம் தேதி சனிக்கிழமை அகில இந்திய ரேடியோவின் அகில பாரத நிகழ்ச்சியில் திரு. டி. கே. ஜெயராமனின் பாட்டுக் கச்சேரி கேட்கலாம் என்று ஆவலுடன் ரேடியோவைத் திருப்பியவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

'இது என்ன, ஆல் இந்தியா ரேடியோவா? அல்லது அறுந்த டேப் ரேடியோவா?' என்று கேட்குமளவுக்கு ரிகார்டிங் அவ்வளவு மோசமாய் இருந்தது. சென்னை வானொலி நிலையத்துடன் தொடர்பு கொண்டுள்ள ஒருவரை விசாரித்த போது ''இங்கே கச்சேரி ரிகார்ட் ஆகும்போது எல்லாம் சரியாகத்தானிருக்கும். டேப் தில்லிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே ஹிந்தி ஆங்கில அறிமுகங்கள் சேர்க்கப்படுகின்றன. அதனை நகல்கள் எடுத்துப் பல்வேறு முக்கிய நகரங்களுக்கு அனுப்புகிறார்கள்'' என்றார். தவறு சென்னையில் நேர்ந்ததோ, தில்லியில் நேர்ந்ததோ கச்சேரி, ரசிகர்களுக்குத் தண்டனையாக முடிந்தது!

நேஷனல் புரோகிராம் என்பதாகக் கௌரவம் அளித்து ஒரு பாடகரைக் கச்சேரி செய்ய அழைத்த பின் அவரை அவமதிப்பது போல் காரியம் பண்ணலாமா? ஆண்டு தோறும் பதினைந்து ரூபாய் கட்டி ரேடியோ லைசென்ஸ் பெறும் கோடிக்கணக்கான மக்களைக் கிள்ளுக்கீரை என நினைத்து விட்டதா அகில இந்திய ரேடியோ?

மறுநாள் எம். டி. ராமநாதனின் காபி, குறிஞ்சி ராகங்களைக் கேட்ட பிறகுதான் அ. இ. ரே. மீது ஏற்பட்ட கோபம் சற்றுத் தணிந்தது!

நிக்ஸனுக்கு மன்னிப்பு!

வாட்டர்கேட் விவகாரம் பற்றி அமெரிக்காவில் பள்ளி மாணவ மாணவியருக்குக் கூடப் போதிக்கப் போகிறார்கள் என்ற செய்தியைப் படித்த போது அந்நாடு நமது மதிப்பில் மேலும் உயர்ந்தது. அடடா! உள்ளதை உள்ளபடி கூறும் துணிச்சல் இந்த அளவுக்கு அமெரிக்கருக்கு இருக்கிறதே என்று வியந்தோம். அமெரிக்க இளைஞர் சமுதாயம் படிப்பினை பெறும் என உணர்ந்தோம்.

ஆனால் நிக்ஸனுக்கு அமெரிக்க ஜனாதிபதி மன்னிப்பு வழங்கி விட்டார் என்ற செய்தி நமது உற்சாகத்தைக் குலைத்து விட்டது. நிக்ஸனுக்கு மன்னிப்பாம்; ஆனால் அவர் எந்தச் செயல்களைப் பூசி மெழுகி மழுப்பப் பார்த்தாரோ அவற்றைச் செய்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடருமாம்! நிக்ஸன் தமது பதவியைத் துறக்கும்படி செய்ததே அவருக்குப் போதிய தண்டனையாகும் என்று ஃபோர்டு கருதியிருக்கலாம். ஆனால் அமெரிக்காவில் பொறுப்புமிக்க பதவியில் உள்ள வேறு பலர் அவ்விதம் எண்ணவில்லை. வாட்டர்கேட் ஊழலில் ஈடுபட்ட பலர் விசாரணைக்குள்ளாகும் போது அதை மூடி மழுப்பப் பார்த்த நிக்ஸனும் விசாரணைக்குள்ளாக வேண்டும் என்றே கருதுகின்றனர்.

கதிர் தர் ஹிந்துஸ்தான் டைம்ஸில் வரைந்துள்ள கார்ட்டூனில் இரு காங்கிரஸ்காரர்கள் ஜனாதிபதி ஃபோர்டின் பெருந்தன்மையைப் பெருமகிழ்ச்சியோடு பாராட்டுகின்றனர்!

வந்தார், பேசினார், சென்றார்!

'வந்தான், பார்த்தான், வெற்றி கொண்டான்!' என்று ஜூலியஸ் ஸீஸர் பற்றிச் சொல்வார்கள். நமது பிரதமர் தமிழகம் வந்தார், பேசினார், திரும்பிச் சென்றார்! அவ்வளவுதான். பேச்சிலே நம்பிக்கை தரும் ஒரு வார்த்தை இல்லை.

நமது ஆசார்யாளைப் பார்க்கக் காஞ்சிக்குச் சென்ற பிரதமர் எண்பது நிமிஷ நேரம் தியானத்தில் இருந்தாராம். நல்லதுதான். ஆனால் கூடவே செயல் திறனும் செயலூக்கமும் வேண்டும். 'நன்கு சிந்தனை செய், பிறகு செயலில் இறங்கு' என்று நாடாள்பவருக்குக் குறளும், கீதையும், இதிகாச புராணங்களும் கூறுகின்றன. அத்தகைய வாய்ப்பு நமது பிரதமருக்குக் காஞ்சியில் கிடைத்திருக்கிறது. ஆசார்யாளின் அனுக்கிரகமும் கிடைத்திருக்கிறது.

இந்த நாட்டை ஆள இதுவரை நம் தலைவர்கள் மேற்கொண்ட அரசியல் சித்தாந்தம் பலன் தரவில்லை என்பது கண்கூடு. மாற்றுப் பாதையில் பிரதமர் தைரியமாக அடியெடுத்து வைக்க வேண்டும். தக்க ஆலோசகர்களை இதற்கு அவர் தேடிப் பெற வேண்டும்.

ராஜாஜி சிந்தனை

அன்பே வெல்லும்!

இந்தியா பாகிஸ்தான் நட்புறவை அடிக்கோடிட்டுக் காட்டுதல் அவசியம். நமது கர்வமோ கோபமோ இதற்கு இடையூறு விளைவிக்க அனுமதிக்கலாகாது. எந்த விலை கொடுத்தேனும் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்பது அகௌரவமான செயல். ஆனால் எந்த விலை கொடுத்தேனும் நட்புறவை வளர்த்துக் கொள்வோம் என்பது கண்ணியமான தீர்மானம். இதற்குப் பேச்சு வார்த்தைகளும் பேரம் பேசுவதும் மட்டும் போதாது. முதன்மையான விஷயம் மனமாற்றம். ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுத்து நமது அன்பை வெளிப்படுத்தினாலேதான் நட்புறவு வளரும்.

- ஸ்வராஜ்யா, ஜூன் 13, 1964



மௌனம் பேசியது; பேச்சு மௌனமாகியது!



பேச்சு! லோக சபையில் பேச்சு! ராஜ்ய சபையில் பேச்சு! சென்னையில் பேச்சு! போன இடங்களில் எல்லாம் பேச்சு! இப்படிப் பேசியபடியே வந்த பிரதமர் குறிப்பிட்ட நேரத்துக்குக் கால் மணி முன்பாகவே காமாட்சி கோவிலுக்கு வந்து விட்டார்!

அவரோடு சென்ற நான் கவனித்தேன். இந்திரா காந்தியின் நடையில்தான் என்ன தளர்ச்சி! 'வயது ஆகிவிட்டதோ, இல்லையோ?'

இப்படி எண்ணிய பின்தான் என் தவறு எனக்குப் புரிந்தது. 'அரசியல் சகதியில் உழன்று மன நிம்மதி இழந்து விட்டார்; உடல் தளர்ந்து விட்டார். மன அமைதி பெற ஆன்மிகத்தை விட்டால் வேறு மாற்று மருந்து கிடையாது என்பதை உணர்ந்து, அன்னை காமாட்சியைச் சரண் அடைய வந்துள்ளார். அது தளர்ச்சி அல்ல; மன நெகிழ்ச்சி!'

அதற்கேற்றாற்போல் அன்னை காமாட்சியின் சந்நிதியில், அர்ச்சகரும் மற்றோரும் சொன்னபடி யெல்லாம் கேட்டு, மாலை மரியாதைகளை ஏற்றார்.

அப்புறம் பெரியவர்களின் குடிலை அடைந்தவர், அறி முகத்துக்குப் பின் அமரச் சொல்லியும் அப்படியே மெய்ம் மறந்து நின்று பெரியவர்களைத் தியானிக்கலானார். 'என்னைச் சந்நிதானத்தில் தனியே இருக்க விடுங்கள்!' என்று கூறிய பின் தியானத்தில் லயித்து விட்டார்.

அவர் அங்கே அரை மணி நேரமே இருக்கப் போவதாக முன்னேற்பாடு. எனவே, ஸ்ரீகாரியம் ஜானகிராமையர் அதை நினைவுபடுத்துகிறாற்போல், ''பெரியவர்களிடம் ஏதாவது விக்ஞாபித்துக் கொள்ள வேண்டுமானால் விக்ஞாபித்துக் கொள்ளலாம்!'' என்றார்.

''நாடும் மக்களும் நலமுற்று வாழப் பெரியவர்கள் அநுக்கிரகம் புரிய வேண்டும்!'' என்று நெக்குருக வேண்டினார்.

இவ்வையம் கலி தீரவே நடமாடும் தெய்வமாகத் திகழும் மௌன குரு புன்னகை புரிந்து கையமர்த்தினார்.

சிவாஸ்தானம் பிரும்மபுரீசுவரர் ஆலயத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி சொரூபம், ஒரு கை அபய முத்திரை காட்ட, இன்னொரு கை காலடிகளைக் காட்ட இளநகை புரிந்து நிற்கும் அற்புதமான காருண்ய மூர்த்தி. அதுவே, உயிர்ச் சிலையாக என்னை அபயம் என்று சரண் அடைந்தவர்களுக்கு அபாயம் இல்லை என்று கூறுகிறாற் போலத் தோன்றும்.

பெரியவர்களிடத்தில் அம் மூர்த்தத்தைக் கண்டோ என்னவோ, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார். ஏறக்குறைய எண்பது நிமிஷங்கள் இப்படி. இவ்வுலக நினைவே இல்லாமல் அடித்துவிட்ட பெரியவர்களது சாந்நித்தியத்தில் மன நிறைவு பெற்ற பிரதமருக்கெதிரே பெரியவாளின் மௌனம் பேசியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரதமரின் பேச்சு அப்படி மௌனமாகி யிருக்குமா?

வெளியே இருநூறு கஜ தூரத்தில் இக்காட்சியைக் கண்டு களிக்க வந்திருந்த மக்கள் கூட்டமும் அல்லவா மௌனத்தைக் கடைப்பிடித்து ஒரே சிந்தனையில் லயித்திருந்தது! அது:

''ஆன்மிகத் தூய்மை அரசியலிலும் பரவ ஆசார்யாள் அநுக்கிரகம் வேண்டும். இந்திராவின் இந்தச் சந்திப்பு அத்தகைய மனமாற்றத்தை அரசியலில் ஏற்படுத்தினால் பாரதம் பழையபடி உலகத்துக்கே வழிகாட்டியாகத் திகழும்.'' - ரா.வி.

படங்கள்: விசுவநாதன்

விசித்திர விநாயகர்கள்!

கணேசனி

சுசீந்திரம் தாணுமாலையர் ஆலயத்திலுள்ள விநாயகர் பெண் திரு உருவம் கொண்டது. இவ்விநாயகப் பெருமான் 'கணேசனி' எனப் பெயர் பெற்றுள்ளார். துதிக்கையும், முகமும் சாதாரண விநாயகரைப் போன்றும், கழுத்தின் கீழ் உடல் பெண் உருவோடும் உள்ளது. வீற்றிருக்கின்ற திருக் கோலத்தில் காட்சி தருகிறார்.

வண்ணம் மாறும் விநாயகர்

நாகர்கோவிலிலிருந்து மேற்கே பத்து மைல் தொலைவில் கேரளபுரம் என்னும் தலம் உள்ளது. இங்குள்ள புராதன மகாதேவர் சிவாலயத்தில் வண்ணம் மாறும் அதிசய விநாயகர் எழுந்தருளியுள்ளார். ஆவணித் திங்களிலிருந்து, தைத்திங்கள் முடிய ஆறு மாதங்கள் வெள்ளை நிறமாகவும், மாசித்திங்கள் முதல் ஆடித் திங்கள் முடிய ஆறு மாதங்கள் கறுப்பு நிறமாகவும் இவ்விநாயகர் பெருமான் தோற்றமளிக்கிறார். இது விஞ்ஞானிகளுக்கும் ஒரு பெரும் புதிராகவே உள்ளது.

- க. ராமநாதன்



கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக் கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும்போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய் நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி நவீன பராமரிப்பு முறையில், உங்கள் பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது; மற்றும் வாய் நாற்றத்தையும் உடனே நிறுத்துகிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!





உங்கள் குடும்பத்திற்கு எகானமி சைஸ் கால்கேட் பற்பொடியை இன்றே வாங்குங்கள்! ஒரு டப்பா மாதக் கணக்கில் வரும்!



...பூரணமான பல் பராமரிப்பிற்கு விஞ்ஞான முறையில் உருவாக்கப்பட்ட கால்கேட் டூத் ப்ரஷ் உபயோகியுங்கள்.


TP.G.21 TM


கட்டில் அளவு சரியாக இல்லையே
காஷ்மீர் பேச்சுக்கள்


ஜன்னல் மெம்பர்
லோக் சபா
சிக்கிம்

சிறுதரத் தொழிலதிபர்களுக்கு

பெருமளவு உதவி!



நீங்கள் ஒரு சிறுதரத் தொழிலதிபராயிருந்தால் அல்லது அவ்விதம் ஆவதற்கு விரும்பினால், விரைந்து வந்து உங்கள் திட்டங்கள் பற்றி யூகோபாங்க்கின் எந்த ஒரு கிளையுடனாவது கலந்தாலோசியுங்கள்.

ரூ.10,000 வரையிலான கடன்களுக்கு 8% வருட வட்டியும், ரூ.10,000 லிருந்து ரூ. 25,000 வரை 9% வருட வட்டியும், ரூ. 25,000 முதல் 1,00,000 வரை 10% வருட வட்டியுமே நீங்கள் கொடுக்க வேண்டி வரும். ரூ. 1,00,000க்கு மேலான கடன்கள் பற்றிய விவரங்களுக்கு அருகிலுள்ள எங்களது கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு
லாபகரமாக உதவுகிறது

UNITED COMMERCIAL BANK

யூனைட்டெட் கமர்ஷியல் பாங்க்



ஆசான் அவிழ்க்கும் ஆன்மிக மர்மங்கள்!



நமக்கு மர்மப் புதிராக விளங்குவனவற்றுக்குக் காஞ்சிப் பெரியவர்கள் அளிக்கும் தெளிவான விளக்க உரைகள்:

1. உபநிஷதங்களுள் மிகச்சிறியதான 'மாண்டூக்யம்' ஒன்றே முக்திக்குப் போதுமானது என்பது ஆன்றோர் வாக்கு. மண்டூகம் என்றால் தவளை. இவ்வுபநிஷத்துக்கு ஏன் 'தவளை - உபநிஷத்' என்று பெயர் வந்தது?

1. இப்பொழுது நான் சொல்லப் போவது பழைய புஸ்தகங்களில் இருக்குமோ என்னவோ, தெரியாது. 'மண்டூகம்' என்பது தவளை. தவளை நடந்தோ, ஊர்ந்தோ செல்வதில்லை. தத்திக் குதித்துத் தாவியே செல்லும்.

ஓர் இடத்தைச் சுற்றி அடைப்புப் போட்டிருந்தால் வெளியே செல்ல விரும்பும் பிராணி நடந்தோ, ஊர்ந்தோ போகுமாயின் அடைப்புக் குறுக்கிட்டதும் அதன் போக்குத் தடைப்பட்டு விடும். ஆனால் தவளையோ ஒரே உத்தலில் அடைப்புக்கு மேலாகப் பாய்ந்து வெளியேறிவிடும். ஸம்ஸார பந்தம் நம்மை அடைத்துப் போட்டிருக்கிறது. மற்ற சாதனைகள் நடக்கிற மாதிரி, ஊர்கிற மாதிரி என்றால் இந்த உபநிஷத்தை அப்பியசிப்பது இந்தத் தடையை ஒரே தாண்டலில் குதித்துக் கடக்கிற மாதிரி என்று கொள்ளலாம். அதனாலேயே, 'மாண்டூக்ய உபநிஷத்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இது என் ஊகம்தான்.

2. ஒன்றாகவே உள்ள பிரம்மத்தை ஒன்றுமே இல்லாத மாயை பல்பலவாக வகுத்துக் காட்டுகிறது என்கிறார்கள். இது எப்படி முடியும்?

2. ஒன்றாகவே உள்ள பிரம்மம் 1 என்று வைத்துக் கொள்ளலாம்; ஒன்றுமே இல்லாத மாயை ஸைபர், 0.

வகுக்கிற எண் சிறிதாக ஆக, ஈவு பெரிதாகும். ஒன்றை அரையால் வகுத்தால் ஈவு இரண்டு. அதே ஒன்றைக் காலால் வகுத்தால் ஈவு நாலு; அரைக்காலால் வகுத்தால் ஈவு எட்டு. இப்படியே போய் ஸைபரால் வகுத்தால் ஈவு எல்லையில்லாததாக இருக்கும் அல்லவா? அதைத்தான் 'இன்ஃபினிடி' என்றும், 'அனந்தம்' என்றும் கணித சாஸ்திரம் சொல்கிறது. ஒன்றேயான பிரம்மத்தை ஒன்றுமேயில்லாத மாயை எல்லையில்லாத பலவாக வகுத்துக் காட்டுவது என்பது இந்த விதிக்குப் பொருத்தம்தான்.

3. ஸம்ஸாரம் என்ற விருட்சத்துக்கு வேர் மேலே இருக்கிறது, கிளைகள் கீழே உள்ளன என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. இது என்ன விநோதம்?

3. சிருஷ்டியில் எல்லாமே வளைவாக இருக்கும் என்கிறார்கள். இகம் ஒரு வளைவு; பரம் ஒரு வளைவு. இரண்டும் பாதிப் பாதி வட்டம் என்று வைத்துக் கொள்ளலாம். இரண்டும் சேர்ந்து வாழ்க்கை முழு வட்டமாகிறது.

இது ஒரு நிலையில். இன்னொரு நிலையில் பரம்தான் எல்லாம். அதுதான் இகத்துக்கும் காரணமாகிறது. அதாவது ஸம்ஸார விருட்சம் அதனிடமிருந்துதான் பிறக்கிறது. இந்த மரத்தின் வேர் அதற்குள்தான் இருக்கிறது.

நாம் வட்டத்தில் ஒரு பாதியில் இருக்கிறோம் என்றால், எதிர்ப் பாதியில் ஸம்ஸார விருட்சம் பிறக்கிறது.

வாஸ்தவத்திலேயே நாம் வட்டமான உருண்டையான பூகோளத்தில்தான் இருக்கிறோம். நமக்கு நேர் எதிர் பாதியில் அமெரிக்கா இருக்கிறது. ஒரு 'குளோபை' நினைத்துக்கொள்ளுங்கள். அதில் இந்தியாவை உச்சியில் இருக்கிற மாதிரி பிடித்துக் கொண்டால் அப்போது அமெரிக்கா அடியில் போகும். அமெரிக்காவில் முளைத்த ஒரு விருட்சம் இப்போது எப்படித் தெரிகிறது? தலைகீழாகத் தொங்குகிற மாதிரி தெரிகிறது. நம் பார்வையில் அதற்கு வேர் மேலேயும் கிளைகள் அடியிலேயும்தானே இருக்கின்றன? இப்படித்தான் உலக வாழ்க்கைக்கு மறு பாதியாக பரத்தை வைத்துக் கொண்டு, அதே சமயத்தில் ஸம்ஸாரம் அந்தப் பரத்திலிருந்து பிறப்பதாகப் பார்க்கிறபோது பகவான் சொன்னபடி 'வேர் மேலே, கிளை கீழே' என்றாகிறது.

மர்ம முடிச்சுக்கள்

வீட்டு நாய்க்கு விஷம் கலந்த மாமிசத்தைப் போட்டது முதல், தொழுவத்திலிருந்த மாட்டின் வாய் நிறையத் துணியைத் திணிப்பது வரை எல்லாவற்றிலும்தான் உன்னிப்பாகக் கவனம் செலுத்தினான். வீட்டின் சொந்தக்காரரான நாட்டுக் கோட்டைச் செட்டியார் ந. க. ராம. கந்தப்பச் செட்டியாரை விட்டே இரும்புப் பெட்டிச் சாவியை அவர் மடியிலிருந்து எடுக்கச் சொல்லி, அவரையே பெட்டகத்தைத் திறக்க வைத்து ஒரு லட்சம் ரூபாய் பெறுமான அடகு நகைகள், ரூ. 10,000 ரொக்கம் இவைகளைத் தன் பெரிய தேங்காய்ப் பூத்துண்டில் கொட்டச் சொல்லி, முடிந்து கொண்டான்.

எந்தவிதத் தடயமும் கிடைக்க முடியாத வண்ணம் காரியத்தை முடித்துவிட்ட அவனையும், அவன் சகாக்களையும் வளைத்துப் பிடித்தார் காவல் அதிகாரி. அவர் கையில் வைத்திருந்த மின்சார பல்புதான் தன்னைக் காட்டிக் கொடுத்த துப்பு என்பதை நினைக்கும்போது அவனும் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியவில்லை. அது. செட்டியார் வீட்டுக்கு எதிரில் தெருவிளக்கில் பொருத்தப் பட்டிருந்த ஸ்குரு டைப் பல்ப். அதை அவன் முன்னாள் இரவு கம்பத்திலேறி ஸ்குருவை லூஸ் செய்து வைத்தது அங்கே வெளிச்சம் இல்லாதிருக்க வேண்டும் என்பதால்தான். வீட்டுக்குள் எவ்வளவுதான் சாமர்த்தியமாக நடந்துகொண்ட போதிலும் வெளியில் தன்னையும் அறியாமல் தடயத்தை விட்டுச் சென்றான். பல்பைக் கழற்றி, அதிலுள்ள கைரேகையின் மூலம் தன்னைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதைக் கொடுக்கூர் ஆறுமுகம் கனவில்கூட நினைத்திருக்க மாட்டான்.

கலோசனா ரகோத்தமன், சென்னை-28

என் தகப்பனார் ஒரு போலீஸ் அதிகாரி. அவரிடம் கேட்டறிந்த ஒரு பயங்கரக் கொலையின் மர்மத்தை இங்கு கூறுகிறேன்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு சிறிய கிராம போலீஸ் ஸ்டேஷனில் அவர் சப்-இன்ஸ்பெக்டரா யிருந்தார். புத்தனேரி கிராமத்தில் ஓடும் வாய்க்காலில் ஒரு வாலிபனின் முண்டம் மிதப்பதாகவும், தலையைக் காணவில்லை என்றும் ஒரு தகவல் என் தகப்பனார் காதில் விழுந்தது. இரவு 12 மணிக்குக் கிராம வாய்க்காலுக்குச் சென்றபோது, சுமார் இருபத்தைந்து வயதுடைய ஒரு வாலிபனின் உடல், தலையில்லாமல் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. காலையில் இரண்டு மணி நேரம் கிராமவாசிகள் நீரில் மூழ்கித் தேடித் தலையைக் கண்டுபிடித்துக் கரைக்குக் கொண்டு வந்தார்கள்.

விசாரணையில் கொலை முந்திய இரவு நடந்திருக்க வேண்டுமென்றும், அரிவாளால் ஒரே வெட்டில் தலை தண்ணீரில் விழுந்திருக்க வேண்டுமென்றும் தெரிய வந்தது. அப்பொழுது யாரோ ஒரு கிராமவாசி என் தந்தையிடம் ஒரு சிறிய காகிதத்தை மடித்துக் கொடுத்துவிட்டு மாயமாக மறைந்து விட்டான்.

அக்காகிதத்தில் பக்கத்து ஊரிலுள்ள ஒரு பையனுடைய பெயரை எழுதி 'அவன்தான் கொலை செய்திருப்பான்—அவனைக் கூப்பிட்டு விசாரிக்கவும்' என்று மொட்டையாக எழுதியிருந்தது. உடனே என் தந்தை சில போலீஸ்காரர்களை அக்கிராமத்துக்கு அனுப்பினார். அவன் கொலை நடந்த இரவிலிருந்து கிராமத்தில் இல்லையென்றும், அவ்வூர் பணக்கார மிராசுதாரரின் உறவினனென்றும் தெரியவந்தது. பிறகு விசாரணையில் இறந்தவனும் அந்த ஊரைச் சேர்ந்தவனென்றும் மிராசுதார் பண்ணையில் மாடு மேய்ப்பவனென்றும் தெரிய வந்தது.

காணாமல் போன பையனை மிகவும் கஷ்டப்பட்டுத் திருநெல்வேலியில் ஒரு ஹோட்டலில் கண்டுபிடித்தார்கள். அவனை விசாரித்ததில் தனக்கு ஒன்றும் தெரியாது என்று மறுத்து விட்டான். இடைவிடாது அவனை விசாரித்ததில் மூன்றாவது நாள்தான் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டான். கொலையுண்டவன் மிராசுதார் வீட்டில் அவர் மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால், அவனைத் தீர்த்துக் கட்டி விடும்படி சொல்லி ஏராளமான பணம் கொடுப்பதாக ஆசை காட்டினாராம். அவனைப் பக்கத்து ஊருக்கு அழைத்துச் சென்று வாய்க்காலில் தீர்த்துக் கட்டிவிட்டுத் திருநெல்வேலிக்குச் சென்றுவிட்டதாக வாக்குமூலம் கொடுத்தான். பிறகு போலீஸார் மிராசுதாரரையும் கொலைக்கு உடந்தையாக இருந்ததற்குக் கைது செய்து கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

யாரோ ஒருவர் காகிதம் மூலம் தகவல் கொடுத்ததினால்தான் இக்கொலையைப் போலீஸாரால் கண்டு பிடிக்க முடிந்தது. அவர் யார் என்று கடைசி வரையில் தெரியவில்லை.

ரமணி, பி. ஏ. பி. டி., சென்னை-40

அப்பொழுது ஆலப்புழைக்குப் போகும் வழியில் உள்ள நீண்டகரை என்ற இடத்தில் கடல்மேலுள்ள பாலம் வெறும் மரப் பாலமாகவும் அகலம் குறைந்ததாகவும் இருந்தது. சாமான்கள் ஏற்றி வரும் லாரிகள் அதன் வழியாகப் போக வேண்டுமானால் மெதுவாகத்தான் போக முடியும். அதைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு கொள்ளைக் கூட்டத்தில் உள்ள சிலர் லாரியில் ஏறி, அதிலிருந்த சரக்குச் சாக்குகளில் சிலவற்றை எடுத்துத் தண்ணீர்ப் பக்கம் எறிந்து விடுவார்கள். கீழே தயாராக இருக்கும் படகுகளில் அவை வந்து விழும். லாரி பாலத்தைக் கடக்கு முன்னால் அவர்கள் இறங்கி விடுவார்கள். இது லாரி ஓட்டுபவனுக்குத் தெரியாது. போய்ச் சேரும் இடத்தில் கணக்குப் பார்த்தால் சாக்குகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படும். வெகு நாட்கள்





வரையில் இதன் மர்மம் ஒருவருக்கும் விளங்க வில்லை.

இதைக் கண்டுபிடிப்பதற்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு யுக்தியைக் கையாண்டார். ஒரு நாள், ஒரு லாரியில் சில போலீஸ்காரர்கள் மறைந்திருந்து மேலே டார்பாலின் கொண்டு மூடிச் சரக்கு லாரி போல் பாலத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வழக்கம்போல் கொள்ளைக் கூட்டத்தார் லாரிக்குள் ஏறி விட்டார்கள். இது சைகை மூலம் டிரைவருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே லாரியை டிரைவர் வெகு வேகமாக ஓட்டிச் சென்று போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் நிறுத்தினார். கொள்ளைக் கூட்டத்தார் பிடிபட்டார்கள்.

ஏ. ராஜி,
திருவனந்தபுரம்

திருச்சி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் சீட்டாட்டக் கூட்டத்தைப் பிடிக்க டி. எஸ். பி. ஒரு திட்டம் போட்டார்.

சிலர் போலீஸ்காரர்களைச் சாதாரண உடையில் வருமாறு ஏற்பாடு செய்தார். ஒரு பாடை தயார் செய்து அதில் துப்பாக்கிகளைப் பிணம் போல் அடுக்குமாறு செய்தார். பின் நான்கு போலீஸ்காரர்கள் சாதாரண உடையில் அப்பாடையைச் சுமக்க, டி. எஸ். பி. அக்கினிச் சட்டியைச் சுமக்க, சுமார் நூறு போலீஸ்காரர்கள் பின்னால் வர ஊர்வலம் ஓமாமரி சுடுகாட்டை அடைந்தது. அப்பொழுது அங்கே சீட்டாட்டக் கூட்டத்தார் சீட்டாடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகில் சில அடிகளில் பிணம் கீழே இறக்கி வைக்கப்பட்டது. டி. எஸ். பி. அவர்கள் பிணத்தை இரண்டு முறை சுற்றி வருவதற்குள் போலீஸ்காரர்கள் நான்கு நான்கு பேராகச் சாதாரணமாக உரையாடுவது போல் உரையாடிக் கொண்டு சூதாடிகளைச் சுற்றி நின்றார்கள். மூன்றும் முறையாக டி.எஸ்.பி. சுற்றி வந்து அக்கினிச் சட்டியைப் போட்டு உடைத்ததும் அனைத்துப் போலீஸ்காரர்களும் சீட்டாட்டக் கூட்டத்தாரைச் சூழ்ந்து கொண்டனர். உடனே டி.எஸ்.பி. அவர்களும், இன்ஸ்பெக்டர்களும் தங்கள் ரிவால்வர்களுடன் அவர்களைக் கைது செய்தனர். இதனால் பெரிய சீட்டாட்டக் குழு அன்று பிடிபட்டது.

ஆர். தனலக்ஷ்மி, நாமக்கல்

தற்போது ரயில்வே டி. எஸ். பி.யாக இருக்கும் திரு நாராயணசாமி அவர்கள் தாம் இன்ஸ்பெக்டராக இருந்தபோது துப்புத் துலக்கிய மர்ம வழக்கு ஒன்றைப் பற்றிக் கூறினார்:


அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை எட்டு மணி இருக்கும். தஞ்சை மிஷன் தெருவில் ஒரு வீட்டில் வசித்து வந்த ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தினர் அனைவரும் வீட்டைப் பூட்டி விட்டு மாதா கோவிலுக்குச் சென்றிருந்தனர். சுமார் ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தபோது திடுக்கிட்டனர். காரணம்? வீட்டின் பக்கவாட்டுக் கதவு திறக்கப்பட்டிருந்தது. பொருள்கள் அலங்கோலமாக இறைந்திருந்தன. விலையுயர்ந்த காமிரா, புடவைகள் ரொக்கப் பணம், நகைகள், டிரான்ஸிஸ்டர், டேப் ரிகார்டர் போன்ற சுமார் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டிருப்பது கண்டு என்னிடம் புகார் கொடுத்தார்கள். நான் அந்த வீட்டுக்கு விரைந்து சென்று வீடு முழுவதையும், அங்கு சிதறிக் கிடந்த பொருட்களையும், பல மணி நேரம் துழாவிப் பார்த்தேன். நோட்டுப் புத்தகம் ஒன்று அகப்பட்டது. அது என்னைச் சிந்திக்க வைத்தது. அதில் பல தமிழ்க் கவிதைகள் எழுதப்பட்டிருந்தன. ஆனால் பெயரோ, விலாசமோ இல்லை. அந்தக் கவிதைகளை எழுதியவன் தன் பிறப்பு, வளர்ப்பு போன்றவற்றை மறைமுகமாகக் கவிதைகளில் குறிப்பிட்டிருந்ததைப் பார்த்தேன். இருந்தாலும் அதிலிருந்து அவனுடைய பெயரையோ விலாசத்தையோ அறிந்துகொள்ள முடியவில்லை. பக்கங்களைப் புரட்டியபோது, ஒரு பக்கத்தில் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த பெரியசாமி என்பவரின் விலாசம் இருந்தது. மர்ம முடிச்சு மெதுவாக அவிழத் தொடங்கியது.

உடன் விரைந்தேன், உடுமலைப்பேட்டைக்கு; பெரியசாமியை விசாரித்ததில், அவன் ஒரு பழைய குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான்.


'நீதான் இந்த நோட்டுப் புத்தகத்துக்கு உரியவனா?' என்று கேட்டேன். தான் இந்தக் கவிதைகளை எழுதவில்லையென்றும், தனக்கும் இக்கவிதைகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னான்.

'அப்படியானால் உன் விலாசம் இந்த நோட்டில் எப்படி வந்தது?' என்று கேட்டேன். அவன் தன்னுடன் சிறையில் இருந்த குற்றவாளிகளில் ஒருவன் நன்றாகக் கவிதை எழுதுவான் என்றும், அவன் கோவையைச் சேர்ந்த குமாரசாமி என்றும் கூறினான். கோவை போலீஸ் நிலைய ரிகார்டுகளிலிருந்து அவனைப் பற்றிய விவரங்களை அறிந்து சென்று அவனை விசாரித்தேன். சிறையிலிருந்து அப்போது தான் விடுதலையாகி இருந்த அவன், தஞ்சையில் தான் திருடியதை ஒப்புக் கொண்டான். திருட்டுப் போன பொருட்கள் அவனிடமிருந்து மீட்கப்பட்டன.

என். ஹேமலதா, சென்னை-8





காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும்



புதிய பாண்டு-எய்ட்* பிராண்ட் டிரஸ்ஸிங்

பயன்படுத்தி அவற்றைப் பாதுகாருங்கள். காயங்களை விரைவில் ஆற்ற இப்போது மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப்பட்டுள்ளது.





உங்கள் குழந்தைகளின் வாழ்வில் தூசியும் அழுக்கும் எங்கும் இடம் பெறுகின்றன. ஆனால் அவை இடம் பெறக் கூடாத இடம் ஒன்று உண்டு—அதுதான் திறந்த காயம்.

எல்லா சிறிய வெட்டுக் காயங்கள், கீறல்கள் மற்றும் சிராய்ப்புகளை ஆற்றுவதற்கு புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் உபயோகியுங்கள். இப்போது அதில் மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப் பட்டுள்ளது. இந்த நிரூபணமான ஆன்டிசெப்டிக் மருந்து பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து, காயங்களை ஆற்ற உதவுகிறது. புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்திப் பாதுகாப்பது விவேகமாகும்.

எப்பொழுதும்
புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்குகள் கைவசமிருக்கட்டும்.

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

முன்கதைச் சுருக்கம்

இன்றைக்கு ஆயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் ஆட்சியில் பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது வாதாபி புலிகேசி படையெடுத்து வருகிறான். சோழ நாட்டு இளைஞன் பரஞ்சோதி, தமிழ் பயில வந்தவன், தெறிகெட்டு ஓடிவந்த மதயானைமேல் வேலெறிந்து ஆயனச் சிற்பியையும் அவர் மகள் சிவகாமியையும் தப்புவிக்கிறான். சிவகாமியிடம் தமது மகன் மாமல்ல நரசிம்மனுக்கு இருந்த காதலை உணர்ந்த மகேந்திரர் நரசிம்மவர்மரைக் கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாதென்று உத்தரவிட்டுவிட்டுப், போர்க்களம் செல்கிறார்.

வாதாபி ஒற்றன் நாகநந்தி புத்த பிக்ஷுவின் சூழ்ச்சியால் பரஞ்சோதி வாதாபி வீரர்களிடம் சிக்கி, வஜ்ரபாகு வேடத்திலிருந்த மகேந்திரரின் உதவியால் விடுதலை பெற்று, மாமல்லரின் ஆப்த நண்பனாகிப் பல்லவ சைன்யத்தின் தளபதியாகிறான்.

வடபெண்ணை நதிக் கரையில் மகா சாகஸங்கள் புரிந்து வாதாபிப் படையை எட்டு மாத காலம் முன்னேற விடாமல் தடுத்த மகேந்திரர் பிறகு வேறு வழியின்றிக் காஞ்சிக்குத் திரும்பிக் கோட்டையைப் பலப்படுத்துகிறார். வாதாபிப் படைகளின் காஞ்சி முற்றுகை ஆரம்பமாகிறது.

மாமல்லர் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியேறி எதிரிகளுடன் வீரப் போர் புரியத் துடிக்கிறார். மகேந்திரச் சக்கரவர்த்தி புத்தத்



தைத் தம் போக்கில் நடத்த மந்திரி மண்டலத்தாரிடம் அநுமதி கோருகிறார்.

கொள்ளிடக் கரைக்கு வாதாபிச் சக்கரவர்த்தி வருகிறான். ஜெயந்த வர்ம பாண்டியனைச் சந்தித்து அளவளாவுகிறான். பாண்டிய குமாரியை மாமல்லர் மணக்க மறுத்ததன் காரணமாகப் பல்லவர் குலத்தின்மீதே கோபம் ஏற்பட்டிருக்கிறது பாண்டியனுக்கு. எனவே, புலிகேசியும் பாண்டிய மன்னனும் ஆப்த நண்பர்களாகி விடுகின்றனர்.

வாதாபி மன்னன் முற்றுகையினால் பலனில்லை எனக் கண்டு பல்லவ சக்கரவர்த்தியிடம் சமாதானத் தூது அனுப்புகிறான். மகா தந்திரசாலியான மகேந்திரரின் ராஜதந்திரமே இதற்கும் வழி வகுக்கிறது. ஆனால் சமாதானக் கோரிக்கையை ஏற்பதிலும் வாதாபிச் சக்கரவர்த்தியை வரவேற்பதிலும் மாமல்லனுக்கு விருப்பமில்லை. எனவே அச்சமயம் நகரை விட்டு வெளியேறிவிடத் தந்தையிடம் அநுமதி கோருகிறார். அதற்கு அநுசரணையாக, தென் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துப் பாண்டியனின் கர்வத்தை அடக்க வேண்டும் என்று மகேந்திரச் சக்கரவர்த்தி கூறப் பரஞ்சோதியும், மாமல்லரும் மகிழ்ச்சியோடு புறப்படுகின்றனர். காஞ்சி நகரின் வடக்குக் கோட்டை வாசல் வழியாக வாதாபிச் சக்கரவர்த்தி அந்நகரத்துக்குள் பிரவேசித்த வேளையில் மாமல்லர் தெற்குக் கோட்டை வாசல் வழியாக ரதத்தில் வெளியேறிக்கொண்டிருக்கிறார்.



பதின்மூன்றும் அத்தியாயம்

ராஜோபசாரம்

வாதாபிச் சக்கரவர்த்தி காஞ்சிக்கு விஜயம் செய்ததிலிருந்து ஏழு தினங்கள் ஒரே திருவிழாக் கொண்டாட்டமாயிருந்தது.

ஒவ்வொரு நாளும் நகரின் ஒவ்வொரு பகுதிக்கு இரண்டு சக்கரவர்த்திகளும் விஜயம் செய்தார்கள். தினம் ஒரு கோயிலுக்குச் சென்றார்கள். ஒரு நாள் காஞ்சியின் கல்விக் கழகங்களையெல்லாம் பார்வையிட்டார்கள். ஒரு நாள் சிற்பக் கலை மண்டபங்களையும் சித்திரசாலைகளையும் பார்த்தார்கள். ஒரு நாள் பௌத்த விஹாரங்களுக்கும் இன்னொரு தினம் ஜைனர்களின் கோயில்களுக்கும் சென்றார்கள். ஒருநாள் இரு சக்கரவர்த்திகளும் பட்டத்து யானை மீது அம்பாரியில் அமர்ந்து நகர் முழுவதும் பவனி வந்தார்கள்.

பழகப் பழக இரண்டு சக்கரவர்த்திகளுக்குள்ளேயும் சிநேகம் முதிர்ந்து வந்ததாகத்தோன்றியது. இந்தச் சிநேகத்தின் பயனாக வருங்காலத்தில் இரண்டு சாம்ராஜ்யங்களும் பெரு நன்மையடையப் போகின்றன என்று மகேந்திர பல்லவர் எதிர்பார்த்ததுடன் அதைப் புலிகேசியிடமும் தெரியப்படுத்தினார். தமக்குச் சமண மதத்திடமோ புத்த சமயத்திடமோ எள்ளளவும் துவேஷம் கிடையாது என்றும், சைவ சமயமானது மற்ற எல்லாச் சமயங்களையும் சம நோக்குடன் பார்க்க இடம் தருகிற தென்றும், அதனால்தான் தாம் சைவ சமயத்தைச் சேர்ந்ததாகவும், சமணர்களும், பௌத்தர்களும் அநாவசியமான விரோத பாவம் தம் பேரில் கொண்டிருப்பதாகவும் மகேந்திர பல்லவர் கூறினார். புலிகேசி தமக்கும் தீவிர மதப் பற்றோ, மதத் துவேஷமோ கிடையாது என்றும், இராஜீய காரணங்களை முன்னிட்டே சமண முனிவர்களுக்கு அதிகமாக இடம் கொடுத்து வந்ததாகவும் தெரிவித்தார்.

சமய போதனையில் ஈடுபட்ட குருமார்கள் இராஜரீக விஷயங்களில் தலையிடவே கூடாதென்றும், தலையிடுவதால் அவர்களுக்கும் சமயத்துக்கும் நாட்டுக்குமே தீமைதான் என்றும் மகேந்திரர் கூறினார். அதை வாதாபிச் சக்கரவர்த்தியும் ஒப்புக் கொண்டார்.

மகேந்திர பல்லவர், "உண்மையான சமய பக்தியுள்ள மகான்களாயிருந்தால் இராஜாங்க விஷயங்களில் தலையிடவே மாட்டார்கள்" என்று சொல்லி, திருநாவுக்கரசர் பெருமானுடைய வாழ்க்கை உதாரணத்தை எடுத்துக் காட்டினார். அந்த மகானைத் தாம் பார்க்க முடியுமா என்று புலிகேசி கேட்டதற்கு, "யுத்தக் குழப்பங்களின் போது அந்தப் பெரியார் இங்கே இருக்க வேண்டாம் என்று நானே அவரைத் தீர்த்த யாத்திரைக்கு அனுப்பிவிட்டேன். இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை" என்று மகேந்திரர் தெரிவித்தார். புலிகேசி அப்போது, "பல்லவ நாட்டு மகாசிற்பியைக்கூட நான் பார்க்க முடியாதோ?" என்று கேட்க மகேந்திர பல்லவர், "யாரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.


"ஆயனர் என்பவரைத்தான்!" என்றார் புலிகேசி.

"அவரைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று மிக்க வியப்புடன் மகேந்திர பல்லவர் கேட்டார்.



''காட்டின் மத்தியிலுள்ள சிற்ப வீட்டை ஒரு நாள் நான் பார்த்தேன். அதனுள் உயிருள்ள பிராணி எதுவும் இல்லை. ஆனால், உயிர்ச் சிலைகள் பல இருந்தன. அதிலும் வெகு வெகு அற்புதமான நடனச் சிலைகள் பல இருந்தன. அப்புறம் விசாரித்தேன். அந்த வீட்டில் ஆயனர் என்னும் மகாசிற்பியும், நாட்டியக் கலையில் வல்ல அவருடையமகளும் வசித்ததாகவும் கோட்டை முற்றுகை காரணமாக அவர்கள் எங்கேயோ போய்விட்டதாகவும் தெரிந்தது. அவர்கள் தற்போது இருக்குமிடமும் தங்களுக்குத் தெரியாதோ?'' என்று வாதாபிச் சக்கரவர்த்தி கேட்டார்.

''அவர்கள் இருக்குமிடம் தெரியும். அவர்களை அழைத்து வர ஆளும் அனுப்பியிருக்கிறேன். நாளை கூடும்



மகாசபைக்கு அவர்கள் வந்தாலும் வருவார்கள்'' என்றார் காஞ்சிச் சக்கரவர்த்தி. அதைக் கேட்ட புலிகேசி மிக்க உற்சாகம் அடைந்தவராகக் காணப்பட்டார்.

* * *

வாதாபிச் சக்கரவர்த்தி காஞ்சி நகருக்குள் பிரவேசித்த எட்டாம் நாள், அவருக்குப் பிரிவுபசாரம் நடத்துவதற்காகக் காஞ்சியின் பிரதான சபா மண்டபத்தில் பெரிய சபை கூடியது.

அந்த மகாசபையில் பல்லவ சாம்ராஜ்யத்தின் மந்திரிகள், அமைச்சர்கள், தளபதிகள், மண்டலத் தலைவர்கள், கோட்டைத் தலைவர்கள் நகரத் தலைவர்கள், வர்த்தகச் செல்வர்கள் முதலியோர் வீற்றிருந்தனர். இன்னும், சைவ வைஷ்ணவ சமய குருமார்கள், வடமொழி வித்துவான்கள், தமிழ் மொழிப் புலவர்கள், இரு பாஷைகளிலும் கவி பாடத் தெரிந்தவர்கள், சங்கீத வித்துவான்கள், சிற்பிகள், சித்திரக் காரர்கள் முதலியோரும் வரிசைக் கிரமமாக வீற்றிருந்தார்கள்.

மேலே கூறப்பட்ட கூட்டத்தாருக்குள் பிரமுகர்கள் வாதாபிச் சக்கரவர்த்திக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்ல புலவர்கள் அந்த மகத்தான சந்தர்ப்பத்துக்கேற்ற கவிதைகளைப் புனைந்து பாடினார்கள். இரண்டு சக்கரவர்த்திகளில் எவரையும் தாழ்த்தாமலும் ஒருவரையும் அதிகமாக உயர்த்தாமலும் சமமான புகழுரைகளை நிறைத்துப் புலவர்கள் பாடிய கவிகள், அவர்களுடைய கவித் திறத்தைக் காட்டிலும் அவர்களுடைய லௌகிக ஞானத்துக்கே சிறந்த உதாரணங்களாயிருந்தன.

பிறகு, சாம்ராஜ்யத்தின் சங்கீத வித்வான்கள் தங்களுடைய வித்வத்தைக் காட்டினார்கள். மகேந்திர பல்லவரால் புதிதாக அமைக்கப்பட்ட ஏழு நரம்புகள் உடைய 'பரிவாதினி' என்னும் வீணையைப் புலிகேசி பரிசிலனை செய்து மிகவும் மகிழ்ந்தார்.

இவ்வாறு நேரம் போய்க்கொண்டேயிருந்தது. ஆனாலும், மகேந்திரபல்லவர், வாதாபிச் சக்கரவர்த்தி இருவருமே கொஞ்சமும் மன அமைதியின்றிப் பரபரப்பு உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். மகேந்திர பல்லவரின் கண்கள் அடிக்கடி சபா மண்டபத்தின் வெளி வாசற் பக்கத்தை நோக்கிக் கொண்டிருந்தன.

கடைசியாக, அவர் உற்சாகமான குரலில், ''அதோ வந்துவிட்டார்கள்'' என்று கூறியபோது, பக்கத்திலிருந்த வாதாபிச் சக்கரவர்த்தி, ''யார்? ஆயனரும் அவர் மகளுந்தானே?'' என்று வினவினார்.

அப்போது உண்மையாகவே அச்சபா மண்டபத்தின் வெளி வாசல் வழியாக ஆயனரும் சிவகாமியும் உள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள்.

வாசற்படியைத் தாண்டும் போது, சிவகாமியின் கால் வாசற்படியில் இடறிற்று. 'ஆஹா! இது என்ன அபசகுனம்?' என்று எண்ணமிட்டுக் கொண்டே சிவகாமி மானின் நடை பெற்ற மயிலைப் போலச் சபா மண்டபத்துக்குள் பிரவேசித்தாள். (தொடரும்)



இப்போது!

நீடித்த அழகு
நவீன நாகரீக வசதி
இரண்டையும் உங்கள்
சமையலறைக்குச் சேர்ப்பது

ஹரால்ட்வேர்



சமைத்தவுடன் பரிமாறும் பாத்திரங்கள் உபயோகிப்பதில் நீங்கள் பெருமையடைவீர்கள்!

ஹரால்ட்வேர்-சமையலறையானாலும் சரி சாப்பாட்டு மேசையானாலும் சரி...ஏற்றமிகு எழில் சேர்க்கும்.
நாகரீக இல்லத்தரசிக்கு உகந்த சமையலறைப் பாத்திரங்களின் சீர் வரிசை

ஹரால்ட்வேர்-கண்ணுக்கு-கட்டுறுதி வாய்ந்தது.
பல்லாண்டுகள் நீடித்து ஒளி சிந்தும் எழில் தோற்றம். கெட்டியான தூய அலுமினியத்தினால் செய்யப்பட்டது.

ஹரால்ட்வேர்-இதில் அதிகப்படி கனமுள்ள அடித்தளம் இருக்கிறது.
எளிதில் சூடு சீராகப் பரவுவதோடு நீண்ட நேரம் சூடாகவே வைத்திருக்கிறது.



ஹரால்ட்வேர்-இதில் ஸ்டாண்டாகவும் பயன்படும் மூடியிருக்கிறது. உங்கள் மேசையில் சூட்டுக்கறை படியாமல் காக்கிறது.
தேவைப்பட்ட போது, மூடியை ஸ்டாண்டாகவும் பயன்படுத்தலாம்.
ஹரால்ட்வேர் ரகம் ப்ரையிங் பேன்ஸ், சாஸ்பேன்கள், காஸராக்கள், கெட்டில்கள் பல சைஸுகளில் கிடைக்கும்.
எல்லாத் தருணத்திற்கும் ஏற்ற பரிசு.


IS:21
ISI
SIC
அலுமினியம் தாள் விதிகளுக் குட்பட்டது

தயாரித்துவிற்பனை செய்வோர்
லாலுபாய் அமிசந்த் பி லி.
225-27 ஜே தாதாஜி ரோடு,
பம்பாய் 400 007

மேலும் விவரமறிய உங்கள் ஹரால்ட்வேர் வியாபாரியை அணுகுக அல்லது ஹரால்ட்வேர் போல்டருக்கு எழுதுக.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள்
போபட் ஜமால் அண்ட் சன்ஸ் ஜமால் பில்டிங் 182, பிராட்வே சென்னை-600 001

Ratan Batra/LA/TM/04-AR



ஊளவுக் கலையின் எல்லை கண்டனர்!



● எதிரி நாட்டின் மீது பறந்து புகைப் படங்கள் எடுத்து உளவறியப் பயன்படும் அமெரிக்க விமானங்கள். விமானிகள் இல்லாமலே பறக்கும். பூமியிலிருந்தவாறே அவற்றைத் திசை திருப்பிக் கட்டுப்படுத்துவர்.


● நமது எல்லைப்புற விமான தளங்களில் பாகிஸ்தானால் கள்ளத்தனமாக வைக்கப்பட்ட கருவிகள். இவை நமது ரேடியோத் தொடர்புகளைப் பாதிப்பதுடன் பாகிஸ்தானிய விமானங்களுக்கு வழி காட்டவும் செய்யும்.

● இடது: கதவின் சாவித்துவாரம் வழியாக உள்ளே நடப்பனவற்றைப் புகைப் படம் எடுக்கிறார், ஓர் உளவாளி!

ஒரு பிரிட்டிஷ் வர்த்தகர் லண்டனிலிருந்து இத்தாலிக்குப் பயணமானார்! அவரது பயணம் முக்கியமான வாணிப உடன்பாட்டை நிகழ்த்துவதற்காக ஏற்பட்டது! விமானத்தில் அந்த வர்த்தகருக்கு அருகில் ஓர் அழகான பெண்மணி வந்து அமர்ந்தாள்! அவளோடு வர்த்தகர் சுவாரசியமாக மனம் விட்டு உரையாடினார். இத்தாலியில் இறங்கியதும் அவரோடு அந்த அழகி உணவு அருந்தினாள்; அது மட்டுமல்ல; அன்றிரவையும் அந்த அழகி அவரோடு கழித்தாள்!

இத்தாலியில் எந்தக் கம்பெனியின் நிர்வாக அதிகாரிகளைச் சந்திக்க வந்தாரோ, அந்த இடத்தில் அந்த அழகியும் பிரசன்னமாகி இருந்தாள்! அவளுக்கு அந்த வர்த்தகரின் 'ப்ரீப்' கேஸிலுள்ள அத்தனை இரகசிய விஷயங்களும் அம்பலமாகி விட்டன.

மூன்று மாதங்களுக்குப் பிறகு கம்பெனிச் செய்தியை வெளியிட்டதற்காக அவரை 'பிளாக் மெயில்' செய்ய ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. அவர் உடனே பயந்து போய் மானேஜிங் டைரக்டரிடம் நடந்த விஷயங்களை ஒளிவு மறைவின்றி வெளியிட்டார். இதன் பயனாக அந்த அழகி, அழைத்து வரப்பட்டாள். அவள் எதிரிக் கம்பெனி டைரக்டரின் காரியதரிசி எனத் தெரிய வந்தது. அதிகத் தொகை லஞ்சமாகத் தருவதாகக் கூற அந்தச் 'சதி' வேலையைப் பற்றி அவள் சாங்கோபாங்கமாக வெளியிட்டாள். பணத்தின் பொருட்டு அந்தப் பெண்மணியின் 'விசுவாசம்' திரும்பிவிட்டது. அதன் பிறகு அந்தப் பேரழகியின் 'விசுவாசத்'தினால் பல தொழில் 'இரகசியங்கள் இந்தக் கம்பெனிக்கு அம்பலமாயின!



மற்றொரு பிரிட்டிஷ் நிறுவனமான மிட்லண்ட் தொழிலகத் தலைமையகத்தில் நடந்த கதையைக் கேளுங்கள்: அந்தத் தொழிலகக் கட்டடக் காப்பாளர் ஒரு பெரிய அட்டைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு தொழிலக 'போர்டு' அறையில் நுழைந்தார்: அந்த அட்டைப் பெட்டியில் இந்தக் குறிப்பு காணப்பட்டது: ''தயவு செய்து தேவையற்ற எல்லா முக்கிய தஸ்தாவேஜுகளையும் அழிப்பதற்கு இந்தப் பெட்டியில் போடுங்கள்!''

தொழில் நிர்வாகிகளின் கூட்டத்துக்குப் பிறகு கட்டடக் காப்பாளர் அந்தப் பெட்டியை எடுத்துச் சென்றார். முக்கிய தஸ்தாவேஜுகளை அழிக்க அல்ல. இரகசியமாக அவற்றை எதிரிக் கம்பெனிக்கு அனுப்பிப் பார்க்கச் செய்தார்! பணத்துக்குத்தான்! எப்படியிருக்கிறது அவரது ராஜதந்திரம்!

கம்பெனிகளின் வளர்ச்சி பெருகப் பெருக, அவற்றின் சர்வதேச அந்தஸ்து அதிகமாக, ஆக ஒற்றாடலின் நிலைக்களன்களும் அதிகமாகின்றன. கம்யூனிஸ்டு தேசங்கள்கூட இந்த வர்த்தக ஒற்றாடலில் ஈடுபட்டுள்ளன. தொழில் நுணுக்க வளர்ச்சியே ஒரு தொழிலின் ஆதாரம். தொழிலக போர்டு அறை இரகசியங்கள் நவீன போர்த் தளவாட ரகசியங்களைப் போல் பாதுகாக்கப்பட வேண்டியவை.

பாதுகாப்பு குறைவு, தகவல் இழப்பு ஆகியவற்றினால் பிரிட்டிஷ் தொழில் துறை வருஷம் 70,000 பவுன் நஷ்டம் அடைகிறது. இதில் ஒற்றர்களின் பங்கு மிக அதிகம்! ஒற்றர்களது கட்டணம் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் பணிக்கு 200 பவுனிலிருந்து 15,000 பவுன் வரை இருக்கும். அவர்களின் ஒற்று வேலைச் சாதனங்களும் பலவிதம்! சூட்சுமமான பேனாக்களில் மைக்ரோபோன் பொருத்தப்பட்ட டிரான்ஸ்மிட்டர்கள் இருக்கும். ஆஷ்டிரேக்கள், சிகரெட் லைட்டர்கள், பழங்கால அலங்காரக் கோப்பைகள் ஆகியவற்றில் ஒலி பதிவாகும் கருவிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும். ஒருவர் சாதாரணக் கடிகாரம் அணிந்திருப்பார் என்று நினைப்போம். ஆனால் அந்தக் கடிகாரத்தினுள் மௌனமாகக் காமிரா இயங்கிக் கொண்டிருக்கும்.

ஏன், சாதாரண ஷர்ட் பட்டன்கள் கூட மைக்ரோபோனாக

இயங்கிக் கேட்ட சம்பாஷணையை வேறோர் இடத்தில் ஒலிபரப்பும்.

மிகவும் தந்திரமான ஒற்றுடல் சாதனம் இன்பினிடி டிரான்ஸிஸ்டர். இதை டெலிபோனில் இருபது நிமிஷங்களில் பொருத்தி விடலாம்! டெலிபோனில் பேசியவை அனைத்தும் இதில் பதிவாகிவிடும்.

காரியாலயத்திலுள்ள நிர்வாகிகள் கூடும் அறையை முன்னால் பரிசோதித்துப் பார்த்து விடுவது முக்கியமான பணியாகும். பெரிய தொழிலகங்கள் ஒற்றுடல் தடுப்புக்கு ஏராளமாய்ச் செலவிடுகின்றன.

இரு பிரிட்டிஷ் தொழிலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் வெகு தொலைவு காரில் ஏறிச் சென்று சாலையோரத்தில் காரில் அமர்ந்தவாறே இரகசிய கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். ஒற்றுடலுக்கு ஆளாகாதிருக்கத்தான்!

ஓர் அறையில் ஒற்றுடும் கருவிகள் உள்ளனவா என்று பரிசோதிக்க ஏகச் செலவாகிறது. அமெரிக்காவில் அரசியல்வாதிகள் இந்த ஒற்றுடும் தொந்தரவிலிருந்து தப்ப நிபுணர்களின் தயவை நாடவேண்டியிருக்கிறது.

வாட்டர்கேட் ஊழலுக்குப் பிறகு எந்த இரகசியமும் அம்பலமாகிவிடும்மா என்ற ஐயம் நிலவுகிறது. அமெரிக்க செனட் அங்கத்தினர்கள் ராணுவச் செலவுகளைப்பற்றி விவாதிக்கத் தொடங்கினால் அது வெளிப்படாமல் இருக்க வேண்டுமே என்று கவலை கொள்கிறார்கள்.

அரை மைல் தூரத்துக்கு அப்பால் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்யவும் நுணுக்கமான கருவிகள் உள்ளன.

எனவே, மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு இந்த ஒற்றுடல் கருவிகளிலிருந்து தப்ப ஓர் எதிர்க் கருவியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்புக் கருவி பன்னிரண்டு பேர்களுக்கு உதவுமாம். உதட்டசைவை மறைக்க முகமூடி உதவுகிறது. உதட்டசைவிலிருந்து வார்த்தைகளைக் கணித்துவிடலாம் என்பதற்காக இந்த ஏற்பாடு! மேலும் அறையில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள மைக்ரோபோனால் பயன் உண்டாகாது போக ஓர் இயந்திரம் இரைச்சல் போட்டுக் கொண்டே யிருக்கும். கம்பெனி டைரக்டர்கள் அல்லது செனட் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள விண்வெளி வீரர்கள் பின்பற்றும் முறையையே கையாளுகிறார்கள். ஒவ்வொருவரும் தலையில் கண்ணாடிக் கவசத்தைக் கவிழ்த்துக் கொண்டு சன்னமான ஒலிபரப்புக் கருவி மூலம் உரையாடுகிறார்கள். இயர்-ஃபோன் பயன்படுத்திக் கேட்கிறார்கள்!

ஒற்றுடல் சாதனங்களை வெளிக் கொணரும் கருவி மலிவு விலையில் கிடைக்கிறது. ஏரியல் பொருத்தப்பட்ட டிரான்சிஸ்டரைப் போல் இது தோற்றமளிக்கிறது. அது அடிக்கடி 'கிளிக்' ஒலிகளை எழுப்பிக் கொண்டிருக்கும். ஏதாவது மறைக்கப்பட்டுள்ள ஒலி வாங்கிக் கருவிகளை நெருங்கினால் உரத்துக் குரல் எழுப்பும். மற்றும் சிக்னல் அலைகளையும் தரும்.

தனி மனிதன் சுதந்திரம் பற்றிப் பேசும் கொலம்பியா சர்வகலாசாலைப் பேராசிரியர் ஆலன் வெட்டின், இந்த நவீன கண்டு பிடிப்புக்கள் எப்படி மனித உரிமைகளை அபகரிக்கின்றன என விசனத்தோடு கூறுகிறார். "தோட்டடல் அறையிலிருந்தபடியே ஒரு லேசர் கதிரை அனுப்பி அடுத்த அறையில் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்து விடலாம். இதைப் பூமியில் உள்ள எப்பேர்ப்பட்ட துப்பறியும் நிபுணனாலும் கண்டுபிடிக்க இயலாது!" என்கிறார்.

ஒரு தேசத்தின் ராணுவ பலம், விமான மாதிரிகள் பற்றிய தகவல்கள் எளிதில் கிடைத்துவிடும். விமானத் தளங்கள் இருக்கும் இடம்கூட வெட்டவெளிச்சம்தான். ஆனால் விமானத் தளங்களில் உள்ள வசதிகள், விமானப் படையின் அளவு, பழுது பார்த்தல், பயிற்சி வசதிகள், ஆள் பலம், அவர்களின் திறமை போன்ற இரகசியங்களை உளவறிந்து அறிய வேண்டியவை.

உளவறியும் விமானங்கள் பெரும் வசதி. ஆனால் ராடாரும் இதர சாதனங்களும் ஓரளவு இந்த உளவறியும் பணிகளைக் குறைக்கும். எனவே ஆளில்லாத விமானம், செயற்கைச் சந்திரன் ஆகியன வாயிலாக உளவறிதலில் மேனாடுகள் இறங்கி யிருக்கின்றன. இதில் முன்னேற இந்தியாவுக்கு வெகு காலம் ஆகும்.

சூயஸ் கால்வாய்க் கரையில் பல உளவு விமானங்களை அனுப்பி அமெரிக்கா இஸ்ரேலுக்கு உதவியாக 'வேவு' பார்த்ததாக எகிப்து குற்றம் சாட்டியது. இதன் பயனாக இரு எகிப்திய ராணுவப் படைகளுக்கு நடுவில் உள்ள இடைவெளியைப் பயன்படுத்தி இஸ்ரேலியர் ஊடுருவி விட்டனராம்!

அமெரிக்காவுக்கு ரஷ்யாவும் 'உளவு' வேலையில் பின்தங்கியதல்ல. மேற்கு ஆசியப் போரின்போது சோவியத் யூனியன் ஐந்து 'உளவு' உப கிரகங்களை விண்வெளியில் சுழல விட்டு வேவு பார்த்திருக்கிறது.

விண்வெளி உபகிரஹம் புகைப்படங்கள் எடுத்துப் பல செய்திகளைத் தரும். விண்வெளியில் உபகிரஹம் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருக்குமாம்! ஆனால் போர்க் காலத்தில் இந்த உபகிரஹத்தை ஆறே நாட்களில் ஆராய்ச்சிக்காகக் கீழே இறக்கிவிடுகிறார்கள்! பங்களா தேசப் போருக்கு முன்னால் இந்தியாவின் இரகசியங்கள் பலவற்றை அமெரிக்க மத்திய துப்பறிவு இலாகா (CIA)வுக்கு வெளியிட்டு வந்தார் ஓர் இந்திய சர்க்கார் அதிகாரி.

இதிலிருந்து இந்திய சர்க்காரில் பெரிய பதவியில் உள்ளவரிடமிருந்து உளவு அறியும் சாமர்த்தியம் ஸி.ஐ.ஏ உளவாளிகளுக்கு இருப்பது வெட்டவெளிச்சமாகிறது! இந்த இந்தியத் துரோகியைப் பற்றி இன்னும் விவரம் கிட்டவில்லை! புது தில்லியில் அதிகார வட்டாரத்திலுள்ளவர்களுக்கு இந்தத் துரோகி ஒரு மந்திரியாக இருந்தால்கூட அதிசயமில்லை என்ற சந்தேகம் உண்டு!

பல கட்டுரைகளைப் படித்துச் சாரமான பகுதிகளைத் தொகுத்தவர்: பி.எஸ்.எம்.

அதிர்ச்சி + நகை



"டாக்டர் சார்! உங்கள் ஸ்டெதாஸ்கோப்புக்கு ஒரு கும்பிடு. அதை அப்படி மேஜையின்மீது வையுங்கள். என்னுடைய இதயத்தை நான் சொல்கிறபடி பரிசோதனை செய்யுங்கள்'' என்றார் சுகேசன்.

டாக்டர் விந்தன் அந்த நோயாளி சொன்னபடி பரிசோதனை செய்துவிட்டு, ''பயப்படாதீர்கள். உங்கள் உடம்பு கருங்கல். ஒன்றும் நேரிடாது!'' என்றார்.

''நான் கருங்கல் ஜல்லி வியாபாரம் செய்கிறேன் என்பதற்காகக் கிண்டல் செய்கிறீர்களா? ஏதோ புது வைட்டமின் மாத்திரைகள் வாங்கி வருகிறேன் என்றீர்களே!''

'' வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று டாக்டர் கூறித் தமது தோல் பையைத் திறந்து மாத்திரைப் பாட்டிலையும் அதற்கான பில்லையும் எடுத்துக் கொடுத்தார்.

அவர் விடைபெற்றபொழுது, சுகேசன் கைத் தட்டிக் கூப்பிட்டு, ''டாக்டர்! இந்த மாசம் வட்டிப் பணம் நாலு நாட்கள் லேட்டாக வந்திருக்கிறது. கரெக்டாகப் பத்தாம் தேதி அனுப்பி விடுங்கள். இல்லாவிட்டால் வட்டிப் பணத்துக்கும் வட்டி வசூலிக்கும்படியிருக்கும்'' என்று எச்சரித்து அனுப்பி வைத்தார்.

டாக்டர் வந்துவிட்டுப்போன அன்றைய தினம் காலை 10.09 மணி. சுகேசன் வீட்டுக்கு எதிரிலிருந்த டீக்கடையில் உள்ள ரேடியோவிலிருந்து வல்லிசை சங்கீத நிகழ்ச்சி ஆரம்பித்து. ஒரு குமாரி விதூஷி, 'காயமே இது பொய்யடா!' என்ற பாட்டைப் பாடத் தொடங்கினாள். அதைக் கேட்டு, அதை ரசிக்காத வண்ணம் வசந்தா என்ற பெண் சுகேசன் வீட்டுக்குள் சென்றாள். அவள் மாடிப்படிகளில் ஏறி நேரே சுகேசன் அறைப் பக்கம் போனாள். ''மாமா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவரது அறைக்குள் நுழைந்தாள்.

மறுகணம் 'வீல்' என்று சத்தமிட்டாள்.

'' ஐயோ! மாமா! ஐயோ மாமா!'' என்று கதறினாள்.

சுகேசன் தமது மாடி அறையில் ஒரு பெரிய மேஜைக்கு எதிரில் சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். ஆனால் அவர் மேஜை மீது தலையை வைத்துக் குப்புறப் படுத்துக் கொண்டிருப்பது போல் காணப்பட்டார். அவருடைய கைகள் இரண்டும் முன் பக்கம் நீட்டப்பட்டுக் கிடந்தன. இடது கை விரல்களின் பக்கம் டெலிபோன் குழாய் கிடந்தது. வலது கன்னம் மேஜையில் சாய்ந்திருந்தது. இடது கன்னம் புறமே தெரிந்தது. கண்கள் மூடியிருந்தன.

வசந்தாவின் அலறலைக் கேட்டுக் கீழேயிருந்து சமையற்காரச் சஞ்சீவியும் தோட்டக்காரத் தம்புவும் ஓடி வந்தார்கள். கீழே ஓர் அறையில் உட்கார்ந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்த சுகேசனது மானேஜர் எனப்படும் அழகப்பனும் விரைந்து வந்தார்.

அழகப்பன் தம் எஜமானரது மூக்கருகே விரல்களை வைத்துப் பார்த்துவிட்டுத் தலையை ஆட்டினார். பிறகு மேஜையின் மீது கிடந்த டெலிபோன் குழாயை அதன் 'கிரேடிலில்' எடுத்து வைத்து அழுக்கிவிட்டு டாக்டர் விந்தனுக்குப் போன் செய்து விஷயத்தைத் தெரிவித்தார்.

''அத்தானுக்கும் போன் செய்யுங்களேன். அவர் சட்டக் கல்லூரியில் இருப்பார்!''

மானேஜர் அப்படியே செய்தார்.

அப்போது அங்கே வந்த நடேசன், ''போலீசுக்கு டெலிபோன் செய்ய வேண்டுமே!'' என்றார்.

'' எதற்காகப் போலீசுக்கு? மயக்கமாய் விழுந்து கிடக்கிறார். அவ்வளவுதானே?'' என்றாள் வசந்தா.

ஆனால் நடேசன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ''ஒரு வேளை கொலையாய் இருக்கலாம்! அல்லது தற்கொலையாயிருக்கலாம்! யார் கண்டார்கள்?'' என்று சொல்லிவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டார். ''சுகேசன் சந்தேகத்துக்கிடமான நிலைமையில் மரணம் அடைந்து விட்டார். உடனே வரவும்'' என்று தெரிவித்தார்.

''எனக்கு இனி யார் கடன் கொடுப்பாங்க?'' என்று கண்ணம்மாள் பிலாக்கணம் பாடலானாள்.

டெலிபோனில் தகவல் கேட்டு முதன் முதல் வந்தது, சட்டக் கல்லூரி மாணவனும், சுகேசனது தமையன் மகனுமான இளங்கோ. அவன் தன் சிற்றப்பன் நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டான். போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டதை அறிந்ததும் நடேசனைக் கடிந்தான்.

''போலீஸ்காரர்கள் வந்தால் நூறு கேள்விகள் கேட்பார்கள். எல்லோரும் அறைக்கு வெளியே போயிருங்கள். ஒரு சாமானையும் தொடாமல் போங்கள்!'' என்று அறைக்குள்ளிருந்தவர்களை விரட்டிவிட்டான்.

சுகேசன் மடியில் கிடந்த ஒரு வெற்றுக் கவரும், ஒரு கடிதமும் அவன் கவனத்தைக் கவர்ந்தன. உடனே இரண்டையும் எடுத்துத் தன் பாண்ட்ஸ் பைக்குள் திணித்துக் கொண்டான்.

மாடி வராந்தாவில் நின்றிருந்தவர்கள், சுகேசன் எப்படித் திடீரென்று மரணம் அடைந்திருக்கக்கூடும் என்பதைப்பற்றி ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது போலீஸ் ஜீப் வண்டி பங்களாத் தோட்டத்துக்குள் நுழைந்தது.

வண்டியின் முன் பக்க ஆசனத்திலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் துப்புசாமி ஸ்டைலாகக் கீழே இறங்கினார். பின் ஆசனங்களிலிருந்து ஆறு கான்ஸ்டேபிள்கள் கீழே குதித்தார்கள்.

மாரடைப்பு

துமிலன்

தம்மை வரற்வேற்க வந்த அழகப்பனைத் துப்புசாமியின் கூரிய கண்கள் ஊடுருவிப் பார்த்தன. அப்போதே அவருக்கு அந்த ஊழியர் மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

"நீங்கள்தானே மானேஜர்!" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரித்த போது அழகப்பன் ஆச்சரியப்பட்டார். எப்படி அவருக்குத் தம் பதவி விஷயம் தெரியுமென்று!

"ஆமாம்!" என்றார் அவர்.

"கொலை எப்போது நடந்திருக்கும்?" என்று இன்ஸ்பெக்டர் அழகப்பனைக் கேட்டார்.

"கொலை என்று யார் சொன்னது?"

"நீர் கொலை இல்லை என்று முடிவு கட்டி விட்டீராக்கும்....உம்மை நான் சாவகாசமாய் விசாரித்துக் கொள்கிறேன்" என்று கூறித் துப்புசாமி அவர் புஷ் ஷர்ட்டின் கைகளைக் கூர்ந்து கவனித்தார்.

திடீரென்று, "உமக்கு எப்போதிலிருந்து இடது கையை உபயோகிக்கும் பழக்கம் ஏற்பட்டது!" என்று கேட்டார்.

இந்தக் கேள்வி மானேஜரைத் தூக்கிவாரிப் போட்டது. இன்ஸ்பெக்டருக்கு எப்படி அந்த விஷயம் தெரியும்? "இ..ள...ம்.. வயதிலிருந்தே....!" என்று தட்டுத் தடுமாறிச் சொன்னார்.

அழகப்பனது புஷ்ஷர்ட்டுக்கு இரண்டு பைகள் இருந்தன. இரண்டு பௌண்டன் பேனாக்கள் வலது பக்கம் பையில் செருகப்பட்டிருந்தன. இடது கைகளை உபயோகிப்பவர்கள் பேனாக்களைக் கையை மடக்காமல் எளிதாக எடுத்துக் கொள்வதற்காக வலது பக்கம் பையில் செருகுவார்கள் என்று ஷெர்லாக் ஹோம்ஸ் தர்க்கரீதி முறையில் இன்ஸ்பெக்டர் ஊகித்தார். அந்த ஊகம் சரியாயிருந்ததில் அவருக்கு மிக்க மகிழ்ச்சி.

அதோடு லாம்பாஸோ என்ற இத்தாலிய நிபுணர், "இடது கைக்காரர்கள் அநேகமாக குற்றங்கள் இழைக்கும் சுபாவம் உள்ளவர்களாயிருப்பார்கள்" என்று வற்புறுத்திக் கூறியிருப்பதும் ஞாபகம் வந்தது. அதனால் அழகப்பனுக்கும் அவரது யஜமானரது மரணத்துக்கும்சம்பந்தம்இருந்தாக வேண்டும் என்று முதலிலேயே ஏற்பட்டுவிட்ட சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று.

துப்புசாமி சுகேசனது அறைப் பக்கம் வந்துவிட்டார். வெளியில் மற்றவர்களுடன் நின்றிருந்த இளங்கோ முன் வந்து, "நான் அவர் அண்ணன் மகன் இளங்கோ. சித்தப்பா இப்படித் திடீரென்று காலமாவார் என்று யார் கண்டார்கள்?" என்று கண்களைத் துடைத்துக் கொண்டே கூறினான்.

"ஓ! மருமகனா!" என்றார் துப்புசாமி.

பிறகு "அவருக்குப் பிள்ளை, பெண்கள்?" என்று கேட்டார்.

"அவருக்கு மனைவி இல்லை. பிள்ளை, பெண்களும் இல்லை."

"ஓ!" என்றார் இன்ஸ்பெக்டர் ஒரு விதமாக. அந்த 'ஓ' வுக்கு அர்த்தமாவது: நீ அவருக்கு வாரிசு. அவர் மரணத்



திஞல் லாபமடையக்கூடியவன். ஆதலால் அவரைக் கொல்ல உனக்கு 'மோட்டிவ்' இருக்கிறது.

இளங்கோ அவரது சந்தேகத்தை ஊகித்துக் கொண்டவன் போல், "இது எதிர்பாராத திடீர் மரணம் அவ்வளவுதான். போலீசுக்குத் தெரிவித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனல் அந்த மிஸ்டர்

படம்: ராமு

நடேசன் டெலிபோன் செய்து விட்டாராம்'' என்றான்.

''அது எப்படிப்பட்ட மரணம் என்று நான் கண்டுபிடித்துக் கொள்கிறேன். நீர் என்ன செய்கிறீர்?'' என்று துப்புசாமி கேட்டார்.

''நான்சட்டப்பரீட்சைக்குப்படிக்கிறேன்.''

''சரியாகப் படியும்!'' என்று கூறிவிட்டு ''அந்தப் பெண் யார்?'' என்று விம்மி விம்மி அழுது கொண்டிருந்த வசந்தாவைக் காட்டி விசாரித்தார்.

''அவள் அவரது ஒன்றுவிட்ட சகோதரியின் மகள். இவள் இங்கே வந்து மாமனைப் பார்த்து விட்டுக் கூச்சல் போட்டதைக் கேட்டுத்தான் நாங்கள் எல்லாமே மேலே வந்தோம்!'' என்று சமையற்காரச் சஞ்சீவி கூறினான்.

முரடனாகக் காணப்பட்ட அவன் கொன்றிருக்கக் கூடுமென்று இன்ஸ்பெக்டர் மனத்தில் பட்டது. அதோடு ''நாங்கள் எல்லாம்!'' என்று எல்லோரது சார்பிலும் ஏன் பேச வேண்டும்? இது ஏதோ கூட்டுச் சதி வேலையாயிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார்.

அவர் சுகேசன் உடலைப் பார்ப்பதற்காக உள்ளே சென்றபோது டாக்டர் விந்தன் வந்தார்.

''இதென்ன சார் அநியாயம்! இரண்டு மணி நேரத்துக்கு முன்னால்தான் நான் அவர் இதயத்தை டெஸ்ட் செய்து விட்டுப் போனேன். அதற்குள்ளேயா?'' என்று விந்தன் வருத்தத்துடன் கூறினார். பிறகு அவரும் இன்ஸ்பெக்டருமாக அறைக்குள் சென்று சுகேசனது உடலைப் பார்வையிட்டார்கள்.

டாக்டர், சுகேசனது இடது கையைப் பிடித்துப் பார்த்து விட்டு விசனத்துடன் தலையை ஆட்டினார்.

துப்புசாமி வசந்தாவைப் பார்த்து, ''உனக்கு உன் மாமனது உயிர் போய்விட்டதென்று அறைக்கு வெளியே நின்று பார்த்த மாத்திரத்திலேயே எப்படித் தெரிந்து விட்டது? அவர் மேசையின் மீது சாய்ந்து தூங்கிக் கொண்டிருப்பது போலத்தானே காணப்படுகிறார்?'' என்று கேட்டார்.

துக்கத்திலாழ்ந்திருந்த வசந்தா இதற்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்தாள்.

துப்புசாமிக்கு அவள் மீதும் சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

அங்கு வந்திருந்த மாணிக்கம், மோசஸ், கண்ணம்மாள் — இப்படியாக எல்லோரும் சேர்ந்து சதி செய்து சுகேசனை மரணமடையச் செய்திருக்கிறார்களென்ற முடிவுக்குத் துப்புசாமி வந்தார். டாக்டரும் சுகேசனிடம் கடன் பட்டிருந்ததால் இதயப் பரிசோதனை செய்யும்போது பிராணன் போகும்படி ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று சந்தேகப் பட்டார்.

இத்தனை சீக்கிரமே தாம் இப்படி ஒரு முடிவுக்கு வந்ததைப் பற்றிப் பரம திருப்தியுற்றார்.

கைரேகை நிபுணர் வந்து சோதனையும் முடித்த பிறகு துப்புசாமி டெலிபோனில், டெலிபோன் காரியாலயத்தைக் கூப்பிட்டார். அன்று காலை 8 மணிக்கு மேல் 10 மணிக்குள் சுகேசனுக்கு யார் யார் டெலிபோன் செய்தார்கள் என்று விசாரித்தார். பொதுவான டெலிபோன் பூத்திலிருந்து யாரோ ஒருதரம் கூப்பிட்டுப் பேசியதாகத் தகவல் தெரிந்தது.

துப்புசாமி, பிறகு போலீஸ் கமிஷனர் காரியாலயத்திற்கு டெலிபோன் செய்து ஓர் ஆம்புலன்ஸ் வண்டியும் பத்துப் பதினைந்து பேரை ஏற்றிச் செல்ல வான் வண்டியும் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

அந்தப் பேச்சைக் கேட்ட போதுதான் அங்கிருந்தவர்களுக்குத் தங்கள் எல்லோரையுமே துப்புசாமி சந்தேகிக்கிறாரென்றும், போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சொல்ல போகிறாரென்றும் தெரிய வந்தது.

''என்ன ஸார் இது! வெறும் மாரடைப்பு மரணத்தை இவ்வளவு பெரிதாகச் செய்துவிட்டீர்களே!'' என்று டாக்டர் விந்தன் இன்ஸ்பெக்டரைக் கேட்டார்.

''அது மாரடைப்பு மரணமா அல்லது கொலையா, அல்லது நீங்கள் கொடுத்த மாத்திரை சாப்பிட்டதால் ஏற்பட்ட துர்மரணமா என்று போலீஸ்காரர்களும், மரண விசாரணை அதிகாரியும் நிர்மானிப்பார்கள்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''நீங்கள் எங்கள் மீது சந்தேகிப்பதற்கு ஆதாரமே இல்லை'' என்றான் இளங்கோ.

''அதை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சொல்லிக் கொள்ளுங்கள்'' என்று துப்புசாமி அலட்சியமாகச் சொன்னார்.

அந்தப் பைத்தியக்கார மனிதருடன்வாதாடுவதில் பலனில்லை என்று இளங்கோ நினைத்தான். தனியாய், ஓர் ஓரமாய் நின்று அழுது கொண்டிருந்த வசந்தாவிடம் சென்று அவளுக்கு ஆறுதலும், தைரியமும் கூறினான்.

அப்பொழுது அவள், ''ஏன், அத்தான்! நீங்கள் ஒரு கடிதத்தையும் ஓர் உறையையும் உங்கள் பாண்ட்ஸ் பைக்குள் போட்டுக்கொண்டீர்களே. என்ன அது? அதை எங்கேயாவது கீழே போட்டு விடுங்கள்'' என்று இரகசியமாகச் சொன்னாள்.

''நான் அவற்றை எடுத்ததை நீ பார்த்து விட்டாயா?'' என்று இளங்கோ ஆச்சரியத்துடன் கேட்டான். பிறகு அவற்றைப் பற்றிய விவரங்களையும் சொன்னான். பொதுவான டெலிபோன் பூத்திலிருந்து டெலிபோன் செய்தது தான்தான் என்றும் தெரிவித்தான்.

''ஏன் இப்படியெல்லாம் செய்தீர்கள்?''

''மாமா திருந்தத்தான். ஆனால் அது இப்படி வந்து முடிந்தது. ஆனாலும் இந்த அசட்டு வழக்கு கோர்ட்டில் நிற்காது'' என்று இளங்கோ கூறிக் கொண்டிருக்கும் போது ஆம்புலன்ஸும் வான் வண்டியும் வந்து விட்டன.

''அத்தான்! நீங்கள் இப்போது என்னிடம் சொன்னதைக் கேட்டபோது வேடிக்கையாக இருந்தது. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்து பார்க்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''என்ன?'' என்று கேட்டான் அவன்.

விவரம் கூறினாள் அவள்.

''நல்ல யோசனை; முயற்சி செய்து பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டுத் துப்புசாமியிடம் சென்றான்.

''இன்ஸ்பெக்டர் ஸார்! ஒரு வேண்டுகோள். மாமா உடலை எடுத்துக் கொண்டு போகப் போகிறீர்கள். நான் ஆட்சேபிப்பதற்கில்லை. அவள் வசந்தாவிடம் ஒன்று கேட்டுக்

“ஃப்ரான்க்ஃபர்ட் நகருக்குப் போவானேன் எக்ஸ்போர்ட் க்வாலிடி எஸ்ஆர்எம் ஷர்ட்டிங்குகளைப் பெற!”

SRM
CHOICE FABRICS

எக்ஸ்போர்ட் குவாலிட்டி எஸ் ஆர் எம் துணிகள் இந்தியாவிலேயே கிடைக்கின்றன இப்போது.



வெளிநாட்டுத் தரமுள்ள எஸ்ஆர்எம் ஷர்ட்டிங் துணிகள். கோடு போட்டவை, கட்டம் போட்டவை, பிளெயின், விதவித வடிவுகள், சம்பிரதாய ரகங்கள். கோலமிடாத நெசவுகள். அல்லது ஜெகார்ட், லினோ. இயல்பான சாயல்களிலும் வேறுபட்ட வர்ணங்களிலும் வருபவை. 100% பாலியெஸ்டர், 50-50 பாலியெஸ்டர்-பருத்தி, தூய பருத்தி ஆகியவற்றிலிருந்து தயாரிப்பு. உலகத் தரம் வாய்ந்தவை.

கிடைக்குமிடம்: உங்களூர் எஸ்ஆர்எம் ஸ்டாக்கிஸ்டு.

ஸ்ரீ ராம் மில்ஸ் லிட்,

கணபத் ராவ் கடம் மார்க், வொர்லி,
பம்பாய் 400 013

Creative Unit-A 1212



சில துண்டுக் காகிதங்கள்... தூக்கியெறிய முடியாதவை.

காரணம்...அவற்றிலே காவியங்கள் புதைந்திருக்கும். அதோடு, இன்றைய காகிதப் பஞ்சத்தில், ஒவ்வொரு துண்டுக் காகிதமும் ஒரு கோடி பெறும்.

ஆந்திரப் பிரதேஷ் பேப்பர் மில்லில், நாங்கள் ரீம் கணக்கில் காகிதம் தயார் செய்கிறோம்... எழுத, அச்சடிக்க, பொருட்களைப் பொதிந்து கட்ட என்று. ஆயின், அது எந்த மூலைக்கு? எங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஒரு குறுகிய கால திட்டம் வகுத்துக் கொண்டு, அசுர கதியில் அதிகப்படி வேலை செய்து வருகிறோம்.

ஓரளவு காகித பஞ்சத்தைக் குறைக்க இது உதவும்—மகிழ்ச்சியான செய்தியில்லையா இது? காகிதம் இல்லாத வாழ்வில் வேடிக்கையும் விளையாட்டும் ஏது?

ஆந்திரப் பிரதேஷ் பேப்பர்

ரெஜிஸ்டர்டு ஆபீஸ் & மில்ஸ்: ராஜமுந்திரி (ஆ.பி.) பம்பாய் ஆபீஸ்: ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், ஹஸாரிமால் ஸோமானி மார்க். ஹைதராபாத் ஆபீஸ்: 1-2-33/2, மதுபன், சுகர்மஹால் ரோடு.

ஏகபோக விற்பனையாளர்: ஃபினிலிட் லிமிடெட், 24, லிங்கி செட்டித் தெரு, மதராஸ்-1.

கொண்டிருந்தாராம். தம் பிராணன் போக இருக்கும் சமயத்திலோ, போன உடனேயோ, தம் காதுக்குள் சில மந்திரங்களைச் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தாராம். அவற்றைச் சொல்ல அனுமதி கொடுங்கள்'' என்று கெஞ்சும் பாவனையில் கூறினான்.

''சரி'' என்றார் துப்புசாமி.

இளங்கோ தன் சித்தப்பாவின் காதருகில் தன் வாயை வைத்து ஏதோ மந்திரம் ஓதினான். அது பலன் தந்ததால் திடுக்கிட்டுப் பின்னடைந்தான்.

''டாக்டர்! டாக்டர்! ஓடி வாருங்கள். மாமாவுக்கு உயிர் இருக்கிறது போலிருக்கிறது. இலேசாக அசைந்தாற் போல் தோன்றிற்று'' என்றான்.

''என்ன ஐயா! நாடகம் நடிக்கிறே?'' என்று இன்ஸ்பெக்டர் கோபித்தார்.

ஆனால் டாக்டர், போலீஸ் அதிகாரி கூறியதை லட்சியம் செய்யாமல், சுகேசனுக்கு மூர்ச்சை மயக்கம் முதலியன தெளிய வேண்டியதற்கான சிகிச்சைகளைச் செய்தார்.

இரண்டே நிமிடங்களுக்கெல்லாம் சுகேசன் கண்களைத் திறந்து விட்டார். சுற்று முற்றும் பார்த்தார். விழிகளில் திகைப்பும், ஆச்சரியமும் தோன்றின. ''என் பணப் பெட்டிச் சாவி எங்கே!'' என்று கேட்டுத் தம் சட்டைப் பையைத் தடவிப் பார்த்தார்.

ஸ்பெஷல் போலீஸ் இன்ஸ்பெக்டர் துப்புசாமி கல்லாய்ச் சமைந்து நின்றார்.

சுகேசன் ஜம்மென்று எழுந்து உட்கார்ந்து, ''ஏன் இந்தக் கூட்டம்?'' என்று டாக்டரைப் பார்த்துக் கேட்டார்.

''இவர்கள் எல்லோரும் உங்களைக் கொலை செய்ய முயன்றார்கள்!'' என்றார் துப்புசாமி.

''என்னையா! என் உயிர் இலேசில் போகாது. என் இதயம் கல்லாலானது. இல்லையா டாக்டர்!'' என்று சுகேசன் கூறித் தம் மார்பைத் தட்டினார். பிறகு தமக்கு ஒன்றுமே நேராதது போல் எழுந்து நின்றார்.

வசந்தாவைப் பார்த்ததும், ''ஏ குட்டி. இங்கே வா!'' என்று கூறி அவள் தோளில் ஒரு கையைப் போட்டுக் கொண்டார். இளங்கோவைப் பார்த்து ''பயலே! எங்கேடா, கண்ணிலேயே காணோம்!'' என்று கேட்டு அவன் தோளில் இன்னொரு கையைப் போட்டுக் கொண்டார்.

''இன்ஸ்பெக்டர் ஸார்! இவர்கள் இரண்டு பேருக்கும் இப்போது கல்யாணம் நிச்சயம் செய்கிறேன்'' என்று கூறினார்.

அடுத்த சில நிமிடங்களில் அந்த வீட்டில், போலீஸ்காரர்கள் வந்த சுவடே இல்லை.. சுகேசன் தம் கடனாளிகளின் கடன்களையெல்லாம் ரத்து செய்து விட்டதாகக் கூறி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அனுப்பினார்.

''இது உங்களுக்குக் கல்யாணப் பரிசு'' என்றார் இளம் ஜோடிகளைப் பார்த்து.

சுகேசனது சுபாவம் திடீரென்று மாறி விட்டதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியுமுற்றார்கள். வசந்தா — இளங்கோ ஜோடி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

அன்று மாலை தம்பதிகளாகப் போகிறவரிருவரும் ஒரு திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் தங்கள் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இன்கம்டாக்ஸ் நோட்டீஸ், வரி உத்தரவு என்றால் அப்படி இதயத்தைப் பாதிக்குமா?'' என்று வசந்தா கேட்டாள்.

''ஆமாம். பெரும்பாலான செல்வந்தர்கள், வியாபாரிகள் திடீரென்று மாரடைப்பினால் காலமாவது வருமான வரி சம்பந்தப்பட்ட கவலைதான் என்று அமெரிக்க டாக்டர்கள் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் நான் சித்தப்பாவைப் பயமுறுத்தி வைப்பதற்காக வருமான வரி ஆபீஸ் நமூனா ஒன்றைப் பெற்று அதில் கள்ளக் கையெழுத்துப் போட்டு அனுப்பி வைத்தேன். டெலிபோனில், வீட்டை இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் சோதனை செய்ய வரப் போவதாகவும் கூறினேன். எல்லாம் சேர்ந்து மாரடைப்பை உண்டாக்கி யிருக்கிறது. உன் யோசனைப்படி தான் அவர் காதில் ஓதிய மந்திரம் 'இன்கம் டாக்ஸ்காரர்கள் சோதனைக்கு வரப்போவ தில்லை; உங்களுக்கு வந்தது பொய் நோட்டீஸ்' என்று திரும்பத் திரும்பச் சொன்னது தான். பலன் ஏற்பட்டு விட்டது. மாமா பிழைத்தது உன்னால் தான்... சித்தப்பாவுக்கு இந்த விபத்து ஏற்பட்டதிலிருந்து குணமும் மாறி விட்டது. கடன்களையெல்லாம் கூடத் தள்ளிக் கொடுத்து விட்டாரால்லவா! மற்ற விரும்பத் தகாத குணங்களும் இராது. செத்துப் பிழைத்ததிலிருந்து யோக்கியனான புது மனிதராக மாறி விட்டார்.''


''ஆனால் சுவாசம் நின்ற பிறகு எப்படி உயிர் வந்தது?'' என்று வசந்தா கேட்டாள்.

''அபூர்வமாக வருவதுண்டு. ஒருவர் இறந்து விட்டாரென்று சவப்பெட்டியில் வைத்துக் கல்லறைக்கு எடுத்துக் கொண்டு போனார்களாம். அங்கே அவர் விழித்தெழுந்தாராம். இன்று சாயங்காலப் பத்திரிகையில் இந்தச் செய்தி போட்டிருக்கிறது'' என்று அவர்கள் பின்னே யிருந்து யாரோ சொன்னார்கள்.

அப்படிக் கூறியது சாதாரண உடையில் இருந்த இன்ஸ்பெக்டர் துப்புசாமிதான்!

அநுபவம் புதுமை

பல்வேறு மொழி பேசினாலும் சிந்தனை ஒன்றாக இருக்கும் என்று மகாகவி பாரதியார் பாடினார். பிற மாநிலத்தவர்கள் எத்தனையோ பேர், உத்தியோக, வியாபார நிமித்தம் நம் தமிழ்நாட்டில் வந்து தங்கி நமது அண்டை வீட்டார்களாகவே வாழ்கிறார்கள். அதேபோல நாமும் வேற்று மாநிலங்களுக்குச் சென்று அவர்களிடையே வாழ்க்கை நடத்துகிறோம். அவர்களோடு பழகும்பொழுது பல சுவையான அநுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். அவர்களது பழக்க வழக்கங்களிலும் பல புதுமைகளைக் கண்டிருப்பீர்கள். அவற்றில் உங்கள் மனத்தைக் கவர்ந்தவற்றை ரசமாக எழுதி 28-9-74க்குள் ஆசிரியர் 'அநுபவம் புதுமைப்' பகுதி, கல்கி, சென்னை-31 என்று முகவரியிட்டு அனுப்பிவையுங்கள். சுவை மிகுந்தவை சன்மானத்துடன் 'கல்கி' இதழில் வெளியாகும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்து இல்லை.


அரசியல் மர்மங்கள்!
நகராட்சித் தேர்தல் சங்கிலித் தொடர் போல் ஒத்தி வைக்கப் படுவது ஏன்?
'ரூபாய்க்கு 3 படி வாக்குறுதிகள்' என்று சொல்லி மக்களை நம்பச் செய்யக்காலம் தேவைப் படுகிறது!
பக்ருதீன் பதவிக்கு வர நடந்த சில மர்மங்கள்?
ஐயோ, பாவம்! இத்தனை நாள் வாயடைத்துக்கிடந்த கிரிக்கு வாசாலகமாகப் பேச ஒரு சந்தர்ப்பம் தர வேண்டாமா?
திரைப் படக் காட்சிகளுக்கும் திடீர் வரி உயர்வு அறிவிக்கப்பட்டது ஏன்?
சினிமாவுக்குச் செலவழிக்கும் பணத்தைத் தடுத்து மக்களின் அரிசி வாங்கும் சக்தியை!.. அதிகப்படுத்தத்தான் என்பது இப்பொழுது அம்பலமாகி விட்டது!
ஜெமினி மேம்பாலம் அருகே பெரியாரின் சிலை வைக்க அ.தி.மு.க.வுக்கு அனுமதி மறுத்த அரசு சந்தடியின்றி இப்பொழுது ஒப்புதல் அளிப்பது ஏன்?
பிரிந்தவர் கூட இது ஒரு கண் துடையாக இருக்கலாம்!
தஞ்சாவூரில் நெல் கொள்முதலில் 'லெவி' ரத்தும் உடனே மீண்டும் லெவி அமுல் செய்யப்பட்டதும் ஏன்?
மக்கள் அரிசியைச் சாப்பிட்டது போக, அரிசி மக்களைச் சாப்பிடும் புதிய சாதனை புரிவதற்காக!

பொன்னியின்

8. பால பாகவதர்

இசையும் கதையும் இணைந்ததோர் கலை



சிறுவன் கிருஷ்ணமூர்த்தியும், அண்ணன் வேங்கடராமனும், புத்தமங்கலத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் எங்கே கதாகாலட்சேபம் அல்லது சங்கீதக் கச்சேரி நடந்தாலும், கைகோத்துக் கொண்டு போய்க் கேட்டு வருவார்கள். கிட்டத்து ஊராய் இருந்தால் அய்யாசாமி அய்யரும் உடன் சென்று வருவார்.

இன்பமானதும் பலனுள்ளதுமான அவர்களுடைய அந்தப் பொழுது போக்குக்குத் தம்பிடிக் காசுகூடச் செலவு கிடையாது. எல்லாம் இலவசம். கொச்சை மொழியில், ''ஓசி''. எப்படி என்று கல்கியே சொல்லட்டும்.

அந்த நாளில் சங்கீதம் இப்போதுள்ளது போன்ற வாணிபப் பொருளாய் ஆகியிருக்கவில்லை. சபைகள் அவ்வளவாகப் பரவாத அந்த நாளில் சங்கீதம் இவ்வளவு மலிவாகவும் சுலப சாத்தியமாகவும் இல்லை. பெரும்பாலும் பெரிய மனிதர்கள் வீட்டுக் கல்யாணங்களிலேதான் உயர்தர சங்கீத வித்வான்களின் கச்சேரிகளும் காலட்சேபங்களும் கேட்கலாம்.

ஆகையினால்தான் அப்போதெல்லாம் ஒரு பெரிய மனிதர் வீட்டிலே கல்யாணம் என்றால், சுற்றுப்புறத்தில் அநேக மைல் தூரம் வரையில் கொஞ்ச நாளைக்கு அதே பேச்சாக இருக்கும். ''கல்யாணம் அபாரமாய்ச் செய்தான். கோனேரிராஜபுரம் வைத்திய நாதய்யர் பாட்டு; அழகநம்பியாப் பிள்ளை மிருதங்கம்; பஞ்சாபகேச சாஸ்திரிகள் கதை; செம்பொனார் கோயில் ராமசாமி மேளம்; அடடா! என்ன மோக்ஷா! கொண்ணுட்டார்கள் போ!'' என்ற இதுபோன்ற பேச்சு, கல்யாணம் நடந்த இரண்டு மாதங்கள் வரையில் சுற்றுப்புறப் பிரதேசத்தில் நடந்து கொண்டிருக்கும்.

கச்சேரிகள் நடக்கும் பெரிய கல்யாணங்களுக்கு, அழைத்தால்தான் போகிறது என்ற நியதி சங்கீதப் பிரியர்களுக்குக் கிடையாது. ''சங்கீதம் என்ன? இவன் அப்பன் வீட்டுச் சொத்தா? நாம் என்ன இவன் வீட்டுச் சாப்பாட்டுக்கு உட்காரப் போகிறோமா?'' என்று கல்யாண வீட்டு எஜமானனைத் திட்டிக் கொண்டே கச்சேரிகளுக்குப் போவார்கள். ...கல்யாணக்காரர்களும் அழைக்கப்பெற்றவர்கள்தான் கச்சேரிகளுக்கு வரலாம் என்ற கட்டுப்பாடு சாதாரணமாய்ச் செய்வதில்லை. பந்தலில் இடம் இருக்கிற வரையில் யார் வேண்டுமானாலும் வந்து உட்காரலாம்....

அந்தக் காலத்தில் கல்யாணக் கச்சேரிகள் பலவற்றுக்கு என்னை நானே அழைத்துக் கொண்டு போவதுண்டு.

(ஆனந்தவிகடன்—22-4-34)



- 'சிறு பாலகன் கிருஷ்ணமூர்த்தி கதா காலட்சேபம் செய்வதைப் பார்த்தால் ஆச்சர்யப்படாமல் யாரும் இருக்க முடியாது.'
- காயக சிகாமணி முத்தையா பாகவதர். மாலி சித்திரம். நன்றி : விகடன்.
- கல்கியின் பால்ய நண்பர்கள் : முத்துக்கிருஷ்ணன் (இன்று சுவாமி ருத்ராநந்தா) சுப்பிரமணியம். சமீபத்திய புகைப்படங்களை எடுத்தவர்கள்: விசுவநாதன், ராமகிருஷ்ணு.





புதல்வர்

சுந்தா



சங்கீதக் கச்சேரிகளைவிட கதாகாலட்சேபங்களுக்கு அப்போது மவுசு அதிகமாய் இருந்து, அதிகமாய் நடந்தன. அண்ணனும் தம்பியும் அவற்றைத்தான் அதிகம் விரும்பினார்கள். அவற்றை நிகழ்த்தியவர்களில் பிரபலமானவர்கள் பலர் இருந்தார்கள்: ''தமிழ் நாட்டில் காலட்சேபக் கலைக்கு முதன் முதலாகப் பெருமை அளித்தவர்'' என்று பின்னர் கல்கியால் வர்ணிக்கப்பட்ட தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர்; அறுபத்து மூன்று நாயன்மார்கள் சரித்திரங்களையும் அற்புதமாய் எடுத்துச் சொன்ன சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்; நிறைய சொந்த சாகித்தியங்களையும் நகைச் சுவையையும் நிரவிக் கதை சொன்ன ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர்; மேலேயே குறிப்பிட்ட திருப்பழனம் பஞ்சாபகேச பாகவதர்; தில்லைஸ்தானம் நரசிம்ம பாகவதர்.

முதல் நாள் கேட்கும் கதையை மறுநாள் இரவு, கிருஷ்ணமூர்த்தி, தன் வீட்டுத் திண்ணையிலிருந்து திருப்பிச் சொல்லுவான். கேட்ட பாட்டுக்களையும் வசனத்தையும் அப்படி அப்படியே ''போலிப்பு'' செய்து சொல்லிவிடுவான். இடையிடையே தன் சொந்தச் சரக்கையும் சேர்த்துச் சொல்லுவான். கையிலே ஜாலர் அல்லது சிப்ளா. கால்களில் சதங்கை. உள்ளூர் மிருதங்க வித்வானின் கைவரிசைக்கு ஏற்பக் குதித்துக் குதித்து நடித்து நொடித்துக் கிராம மக்களை



○ மாங்குடி சிதம்பர பாகவதர்
மாலி சித்திரம். நன்றி : விகடன்

மகிழ்விப்பான். அவனுடைய கீச்சுக் குரலையும், சில சமயங்களில் தொனிக்கும் இரட்டைக் குரலையும், தனது இனிய குரலால் அண்ணன் ஈடு செய்து பின் பாட்டுப் பாடுவான்.

அந்தப் பால பாகவதரின் இசைக் கதைகளை, மற்ற எல்லோரையும் விட அதிகமாய் அய்யாசாமி அய்யர் தம்பதியர் பாராட்டினர். ஒவ்வொரு நாளும் கதை முடிந்ததும், அண்ணனுக்கும், தம்பிக்கும் அவர்கள் திருஷ்டி கழிப்பார்கள்.

ஏதோ விளையாட்டாக அந்தச் சிறுவர்கள் நிகழ்த்தத் தொடங்கிய கதைகள் சீதா கல்யாணம், வத்ஸலா கல்யாணம், சிவநேசச் செல்வர்கள், கபீர்தாஸ், நாமதேவர் முதலியன — போகப் போகச் சிறந்த ரசிகர்களும் பாராட்டக் கூடிய விதத்தில் சீரும் செம்மையும் அடைந்தன. தம்பியின் கற்பனைச் சேர்மானங்களும் உப கதைகளும் அதிகமாயின. உள்ளூர்க்காரர்கள் மெச்சிச் சொன்னதைக் கேட்டு அயலூர்க்காரர்களும் அவர்களுடைய கதை

பொன்னி வளநாடு பேராசிரியர் 'கல்கி'யைப் பெற்றுத் தந்து பெருமையுற்றது. பொன்னியின் கரையில் பிறந்து வளர்ந்த கிருஷ்ணமூர்த்தி தமது எழுத்திலே காவிரி பாயும் சோழவள நாட்டை இலக்கிய நயத்துடன் வர்ணித்து உரிய கௌரவமளித்தார். பத்திரிகை உலகில் பெரும் கீர்த்தியோடு விளங்கிப் பல புனைபெயர்களில் எழுதித் தமிழ் அன்னைக்குச் சேவை செய்தார். அவரது காலத்தில் வாழ்ந்து அவருக்கு வழிகாட்டிய பெரியோர்கள் காந்திஜி, ராஜாஜி, பாரதியார் ஆகியோர். அவர் பிறந்த கிராமம் மாயூரத்திலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள புத்தமங்கலம். அவருக்கு இளம் வயதில் பல புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து உதவி ஊக்கியவர் அய்யாசாமி ஐயர். கிருஷ்ணமூர்த்திக்கு ஆரம்பகால குரு இவரே. கிருஷ்ணமூர்த்தி விளையாடாப் பிள்ளைதான். ஆனால் எத்தனையோ விளையாட்டுக்களுக்குத் தமது எழுத்து மூலமும் பத்திரிகை மூலமும் பின்னால் ஊக்கமளித்தவர்.

கிருஷ்ணமூர்த்தி சிறு வயதில் கிராமத்தை யொட்டியிருந்த ஒரு குளத்தில் விழுந்து மூழ்கினான். தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டான். இச் சம்பவம் சதா அவர் நினைவில் இருந்து அவரது நாவல்கள் சிலவற்றில் கதையோட்டத்துக்குத் துணை செய்தது. இப்படியே கல்கியின் வாழ்க்கையையும் அவரது எழுத்தையும் இணைத்து இணைத்துப் பார்க்கும் சுந்தா, கல்கி பிறந்த ஊர், பிறந்த காலம், ஆரம்ப கால குரு, விளையாட்டுப் பருவம் முதலியவை கடந்து, கதாகாலட்சேபங்களில் ஈடுபாடு கொண்ட சிறுவன் கிருஷ்ணமூர்த்தியை இவ்விதழில் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

களுக்கு வந்தார்கள். அடுத்தாற்போல், அயலூர்க்காரர்கள் தத்தம் ஊர்களுக்கு அவர்களை அழைத்துப் போனார்கள்.

வெளியூர்களில் முதன் முதலாக ஆத்தூரில், நந்தன் சரித்திரத்தை அச் சிறுவர்கள் நிகழ்த்தினார்கள். சிவன் கோயிலில் நடந்த அந்தக் கச்சேரியின் இறுதியில், கிருஷ்ணமூர்த்திக்கு ஜரிகை அங்கவஸ்திரம் ஒன்றைச் சன்மானமாகத் தர்மகர்த்தா சூட்டினார். அந்தப் பொன்னாடை, அம்பி பாகவதரை உருவம் தெரியாதபடி அமுக்கி இருக்க வேண்டும்.

அய்யாசாமி அய்யருக்கு அடுத்தபடியாகவும், ஓர் ஊர் தவறாமல் போயும் கிருஷ்ணமூர்த்தியின் கதைகள் கேட்டவர்கள், முத்து, சுப்பு என்ற அவனுடைய தோழர்கள். அய்யர் நடத்திய அதே பாண்டுரங்கன் பள்ளிக்கூடத்தில் உடன்படித்த மாணாக்கர்கள். இருவரும், நிறைய நிலபுலன்கள் உடைய செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள். முத்துவுக்குச் சொந்த ஊர், அந்தப் பள்ளிக்கூடம் அமைந்திருந்த மணல்மேடு. சுப்புவின் சொந்த ஊர் அதற்கு மிக அருகேயிருந்த ராதாநல்லூர். மூன்று பேர்களின் ஊர்களையும் முக்கூட்டி ஊர்கள் என்று சொல்லலாம்.

முத்து என்ற முத்துக்கிருஷ்ணன் நாயுடு சாதியையும், சுப்பு என்ற சுப்பிரமணியம் பிள்ளைமார் சாதியையும் சேர்ந்தவர்கள். அவர்களுடைய சாதியைப் பற்றிக் குறிப்பிடக் காரணம் உண்டு. வைதிகப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கிருஷ்ணமூர்த்தி அந்த இரு நண்பர்களுடன் நெருங்கிப் பழகிய காரணத்தினால், முதலில் கொஞ்சம் கொஞ்சமாயும், பின்னர் ஒரேயடியாகவும், தான் ''உயர்ந்த'' பிராமண சாதிக்காரன் என்ற எண்ணத்தைக் கைவிடலானான். அந்த உறவாடலே, சாதி வேற்றுமையை ஒழிப்பதற்கான பிரசாரத்துக்கு அடிகோலிற்று.

முத்துக்கிருஷ்ணன், பின்னர் சுவாமி ருத்ரானந்தராக மாறினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர், கிருஷ்ணமூர்த்தியின் கதாகாலட்சேபங்களைப் பற்றி இப்படி எழுதினார்:

> அண்ணனைப் பின்பாட்டுக்காரராகச் சேர்த்துக் கொண்டு, அச்சிறு பாலகன் கழுத்தில் பூமாலை அணிந்து கொண்டு, கையிலும் காலிலும் சலங்கைகள் அணிந்து நின்று, பெரிய பெயர் போன பாகவதர்களைப் போலவே அபிநயித்து, பெரிய கூட்டத்தின் முன்னிலையில், பக்தியோடு உருக்கமாகக் கதாகாலக்ஷேபம் செய்வதைப் பார்த்தால், ஆச்சரியப்படாமல் யாரும் இருக்க முடியாது. எதிரில் உட்கார்ந்து கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும் அய்யாசாமி அய்யரின் கண்களில் நீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருக்கும் என்பதில் ஆச்சரியம் இல்லை. உட்கார்ந்து கேட்கும் எல்லோருடைய மனமுமே உருகி, அவர்களை அறியாது கண்ணீர் விடுவார்கள்.
>
> (கல்கி இதழ் —4-12-55)

சிறு வயதில் செய்த கதாகாலட்சேபங்களின் ஒருவித நடை பேத நவீன பாணியில் கல்கியின் ஆரம்ப காலத் தலையங்கங்கள் பல அமைந்திருந்தன. மாதிரிக்கு 'வேலையில்லாத் திண்டாட்டம்' பற்றிய தலையங்கம் ஒன்றின் தொடக்கத்தைப் பார்ப்போம்:

> கொஞ்ச காலமாகக் கண்ணிலே படாதிருந்த நாரத மகரிஷி சென்ற வாரம் விகடனுக்குத் தரிசனம் அளித்தார். வழக்கமான நாடகமேடை நாரதர் போல் அல்லாமல், கடும் கவலை கொண்ட முகத்தினராய் நீண்ட தோர் தாடியுடன் தோன்றினார்.
>
> ''என்ன மகரிஷே! ரொம்ப நாளாய்க் காணோம். உடம்புகூட இளைத்துப் போயிருக்

நினைவு அஞ்சலி

உழைப்பின் திருவுருவம்



திரு Y. சீனிவாச அய்யர்

தோற்றம்: 25-2-1902 மறைவு: 21-9-1973

Y. S. என்று கோவை ஆசிரியர் சமூகத்திலும், மாணவர் சமூகத்திலும் புகழ்பெற்ற திரு Y. சீனிவாச அய்யர் கல்விப் பணிக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். திருநெல்வேலி மாவட்டத்தில் பண்பிலும், பகுத்தறிவிலும் உயர்ந்த குடும்பத்தில் தோன்றிய இவர் 'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழிக்கொப்ப வகுப்புகளில் முதல்வராகவே விளங்கி முதற் படிவம் முதல் B. A. (Hons.) பட்டம் பெறும்வரை அக்கால ஆங்கில அரசாங்கத்தாரால் வழங்கப்பட்ட உபகாரச் சம்பளம் பெற்று வந்தார் என்பதே அவர் அறிவுக்கும், திறமைக்கும் சான்றாகும். படிப்பு மட்டுமன்றி பாட்டு, நாடகம், விளையாட்டு முதலிய கலைகளிலும் தேர்ச்சி பெற்று வெள்ளிப் பதக்கங்களும், கோப்பைகளும் பெற்றார். இவ்வளவுக்கும் ஆதாரமாக ஆழ்ந்த தெய்வ பக்தி உடையவர். தம் அறிவினாலும், திறமையினாலும் மற்ற தொழில்களில் முன்னேற வாய்ப்புகள் இருந்தபோதிலும், சமூகத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் இளைஞர்களை நல்வழியில் பயில்விக்க ஆசிரியர் பணியே உயர்ந்தது என்று இப் பணிக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இராமநாதபுரம் இராஜா உயர்நிலைப்பள்ளியிலும், கோவை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியராகவும் பிறகு, தலைமை ஆசிரியர் பதவிக்கு உயர்ந்து, நற்பணியாற்றி, தன் 34 ஆண்டுகள் ஆசிரியர் பணியின் பயனாக 'உழைப்பின் திருவுருவம்' என்று 'பொன்னாடை' போர்த்தி கௌரவிக்கப்பட்டு 24-2-1957ல் 55வது வயதில் ஓய்வு பெற்றார். District Teachers Guild சங்கத்தில் செயலாளராகவும், சாரணர் இயக்கத்தில் அங்கத்தினராகவும் பணியாற்றினார். கணிதத்தில் மிகவும் தேர்ச்சிபெற்ற இவர் முதற் படிவம் முதல் ஆறாம் படிவம் வரைக்கான கணிதப் புத்தகங்களும், குழந்தைகளுக்கான ஆங்கிலக் கதைப் புத்தகங்களும் இயற்றினார். தன் கடமைகளையும், குறிக்கோள்களையும் செவ்வனே நடத்த உதவியாக இருந்த, தன் தர்மபத்தினி காந்திமதி அம்மையாருடன் பக்தி சம்பந்தமான படிப்புகளில் தன் ஓய்வு காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்து வந்தார். 1973ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ந் தேதி மாலை புனித கங்கைக்கரையில் அமைந்துள்ள கான்பூர் மாநகரத்தில் தன் ஒரே மகன் (திரு S. யக்ஞராமன்) இல்லத்தில் தன் மனைவி, மக்கள் பக்தி பாடல்கள் பாட, தனது 72ம் வயதில் பூத உடலை நீப்பதாகக் கூறிக்கொண்டே அமைதியுடன் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியுடன் இருக்க இறைவன் அருள்புரிவாராக.

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

தலைவலி-உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO Nicholas

மைக்ரோ:பைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.63.TM

கிறது'' என்று விகடன் குசலம் விசாரித்தான்.

''அலைச்சல் ஜாஸ்தி. எத்தனை டிராமா, எத்தனை டாக்கி பார்க்கிறது!''

''டிராமாவா, டாக்கியா! அதென்ன, ஸ்வாமிக்குப் பால்யம் திரும்புகிறதுபோல் இருக்கிறது.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்தப் பசங்கள் நாரதர் வேஷம் போடுகிறார்களே, என்ன பண்ணுகிறார்கள் என்று பார்க்க ஆசை. நேற்று சனிக்கிழமை ஒரு டிராமா பார்க்கப் போயிருந்தேன். அங்கே என்னுடைய வேஷம் போட்டவன் பாடின பாட்டையும், பேசின பேச்சையும் கேட்டபோது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? அவன் மேடையிலிருந்து போனதும் திரைக்குப் பின்னால் அவனைப் பார்த்து இரண்டு வார்த்தை சொல்லலாம் என்று சென்றேன். அந்தப் பாவி கீழே கிடந்த ஒரு பீடித் துண்டைப் பொறுக்கி எடுத்துக் குடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. தம்பூரை இடது கையில் எடுத்துக் கொண்டு வலது கையை வீசி வீசி நடந்து, நேரே உம்மிடம் வந்தேன்'' என்றார்.

'' இனி மேல் அதையெல்லாம் பார்க்க வேண்டாம். தேவலோகத்தில் விசேஷம் ஏதாவதுண்டா?''

''சித்ரகுப்தனைப் பார்த்துவிட்டு வந்தேன். 'ஸ்வாமி! தெரியாமல் செய்துவிட்டேன். இனி மேல் செய்யவில்லை' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான். 'எனக்கு வயதாகி விட்டது... ஒரு குமாஸ்தா வைத்துக் கொள்ளலாம் என்று பூலோகப் பத்திரிகையொன்றில் ஓர் அங்குலம் விளம்பரம் செய்தேன். அன்று முதல் பாருங்கள், மனுக்கள் வந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றன. உடைத்துப் பார்க்கக்கூடப் பொழுதில்லை' என்று புலம்பினான்.''

'' நிஜமாகவா?'' என்று கேட்டான் விகடன்.

''நிஜமில்லாமலா சொல்வேன்? நாளைக்கு 'இந்த நாரதர் கிழமாய்ப் போய்விட்டது. அவருக்குப் பென்ஷன் கொடுத்துவிட்டு எங்களை அந்த வேலையில் நியமியுங்கள்' என்று கூட உங்கள் பி. ஏ.க்கள் மனுப் போடுவார்கள்'' என்று சொல்லிவிட்டு நாரத மகரிஷி அந்தர்த்தியானமானார்.

(ஆனந்தவிகடன்—6-1-35)

இப்படியாகத்தானே, விகடனாகப் பட்ட கல்கியானவர், திரிலோக சஞ்சாரியும் கலகப் பிரியருமான நாரத முனிவருடன் சம்பாஷித்து, சகல விதமான சங்கதிகளையும் சாங்கோபாங்கமாகச் சர்ச்சை பண்ணினார். எதற்காக அப்படிச் செய்தார் என்று கேட்டாலோ ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன என்ற மனோபாவத்திலே அரசியல் சமூகம் சம்பந்தமான லௌகிக விவகாரங்களில் கிஞ்சித்தும் சிரத்தை இல்லாமல், பத்திரிகைத் தலையங்கம் என்றாலே அலட்சியமாய் அந்தப் பக்கங்களைத் திரஸ்காரம் பண்ணிக் கொண்டிருந்த அக்கால வாசகர் சிகாமணிகளை எப்படியாவது வசீகரணம் செய்து, தம்முடைய அபிப்பிராயம், பிரசாராதிகளை அவர்கள் அங்கீகரிக்கும்படி பண்ண வேண்டும் என்பதற்காகத்தான்!

நாரதரை மட்டுமல்லாமல் மற்றும் பல முனிவர்களையும், தேவ தேவியரையும், அரக்கர் அரக்கியரையும், தம் ஆனந்த விகடன் தலையங்கங்களில் அடிக்கடி கல்கி உலவ விட்டார். பின்னர், சொந்தப் பத்திரிகையின் தலையங்கங்களில் இதிகாச புராண பாத்திரங்களின் நடமாட்டத்தைக் குறைத்து விட்டார். ஏனெனில், அவர்களுடைய பக்கபலம் இன்றியும், வேடிக்கை விநோதப் பிடிகைகள் இன்றியும், அவருடைய கருத்துக்களை நேராகவே வாசகர்கள் ஏற்கத் தயாராகி விட்டார்கள்.

புராணக் கதைகளைக் காலட்சேபம் செய்வதைப் பதினைந்தாவது வயது வாக்கில் கல்கி விட்டு விட்டார். ஆனால் காலட்சேபங்களைக் கேட்கும் ஆசை தொடர்ந்தது. மாங்குடி சிதம்பர பாகவதரின் காலட்சேபங்களைத் திரும்பத் திரும்பக் கேட்டார். கேட்டார் என்பதுடன் பார்த்தார் என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாகவதருடைய தோற்றம் பார்த்துப் பார்த்து வியக்கத் தக்கதாயிருந்தது. உயரத்திலும் பருமனிலும் கல்கிக்கு நேர்மாறான தோற்றம்.

அவருடைய தோற்றமே ஹாஸ்யத் தோற்றம். சார்லி சாப்ளின் முதலிய பெயர் பெற்ற ஹாஸ்யக்காரர்கள் கூடத் தங்கள் இயற்கை வடிவத்தை மறைத்து விகட வேஷம் போட்டுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் நமது பாகவதருக்கு அத்தகைய வெளி வேஷ சாதனங்கள் வேண்டியதில்லை. அவருடைய இயற்கை உருவத்தைப் பார்த்தாலே போதும். 'குப்பு குப்' என்று சிரிப்பு வருகிறது. பிறகு அவருடைய ஒவ்வொரு சைகையும் சிரிப்புத் தருவதாய் இருக்கின்றது. அவர் விசுப் பலகையில் உட்காருவதும் ஒரு வேடிக்கை; எழுந்து நிற்பதும் ஒரு வேடிக்கை. நடனம் செய்யத் தொடங்கினாலோ அளவிலா வேடிக்கை. இவ்வளவும் போதாதென்று ஹாஸ்யப் பேச்சுக்கள், உபகதைகள் வேறு....

இயற்கையாகவே அவர் நகை பூத்த வசீகர முகம் உள்ளவர். ஹாஸ்யமாய்ப் பேசத் தொடங்கியதும் மற்றவர்களுடன் சேர்ந்து தாமும் சிரித்து மகிழ்கிறார்.... கதையின் மத்தியில், ஹாஸ்ய ரசம் பொருந்திய ஒரு கட்டத்தின்போது, தற்செயலாக, சபையில் அமர்ந்திருந்தவர்களின் முகத் தோற்றத்தின் மேல் என் கவனம் சென்றது. என்ன அற்புதமான காட்சி! சூரியோதயத்தில் பூரணமாய் மலர்ந்துள்ள பூக்கள்நிறைந்த தாமரைத்

தடாகம் ஒன்றைத்தான் அக்காட்சிக்கு ஒப்பிடக் கூடும். (ஆனந்த விகடன் — 15-5-32)

பாகவதரைப் பற்றிய இன்னொரு விமர்சனத்தில் கல்கி, ''அத்தகைய சரீரத்தில் பகவான் எப்படிப்பட்ட சாரீரத்தைத்தான் அமைத்திருக்கிறார்'' என்று வியந்தார். ''ஏறக்குறைய பரிபூரண சங்கீதத்துக்குரிய அம்சங்கள் எல்லாம் அவருடைய பாட்டில் பொருந்தியிருக்கின்றன'' என்றும் பாராட்டினார்.

சிதம்பர பாகவதரின் நிகழ்ச்சிகளைச் சிறு வயதிலிருந்தே ரசித்தது போலவே, காயக சிகாமணி முத்தையா பாகவதரின் காலட்சேபங்களையும் ரசித்து வந்தார். அப்படிச் சிறு வயதில் கேட்ட அவருடைய கதை ஒன்றைப் பல ஆண்டுகளுக்குப் பின் கல்கி நினைவுபடுத்திக் கொண்டு எழுதினார்:

முத்தையா பாகவதரின் சரக்குகளுக்குள் அவருடைய சிலேடைச் சரக்குதான் விசேஷமானது என்று நான் நினைத்த காலம் ஒன்று உண்டு. அப்போது எனக்குப் பதினேரு வயது. அவருடைய முதல் தரக் கதை ''கௌசல்யா கல்யாணம்'' என்று தெரியும் அல்லவா? அக்கதையில், கல்யாணத்துக்குச் சென்ற தசரதர், கப்பல் உடைந்து நடு சமுத்திரத்தில் தத்தளித்துக் கொண்டு முழுகும் தறுவாயிலிருக்கிறார். கை கால்கள் சோர்ந்து விட்டன. ஸ்ரீமந் நாராயணனை நோக்கிக் கதறுகிறார்.

''ஸ்வாமீ! நீரே இப்படிச் செய்யலாமா? இந்த நீரே இப்படிச் செய்யலாமா?'' என்று தசரதர் பிரார்த்தனை செய்ததாகப் பாகவதர் கூறியபோது, தசரதனுடைய நெருக்கடியான நிலையை நான் அடியோடு மறந்து பாகவதரின் சிலேடைத் திறமையை எண்ணிக் கரகோஷம் செய்தேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் பாகவதர் பரத நாட்டியக்காரி ஒருத்தியைச் சபையில் கொண்டு வந்து நிறுத்தினார்.

'' அழகுள்ள துரை இவன் யாரடி ?'' என்று நாட்டியக்காரி பாடிக் கொண்டு அபிநயம் பிடிக்கிறாள்.

அந்தச் சமயம் நெட்டைப் பனைமரம் போல் உயரமாக வளர்ந்த ஒரு பிரபு சபைக்கு வந்தார். நாட்டியக்காரி அவரைப் பார்த்த வண்ணம், ''அழகுள்ள துரை இவன் ஆரடி !'' என்று பாடிக் கையையும் உயர்த்திக் காட்டினாள்.

அதற்குள், குள்ளமான பிரபு ஒருவர் வந்து சேர்ந்தார். உடனே நாட்டியக்காரி, ''அழகுள்ள துரை இவன் யாரடி ?'' என்று பாடிக் கையைத் தாழ்த்திக் காட்டினாள். அடேயப்பா ! அப்போது சபையில் உண்டான குதூகல ஆரவாரம் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

சிலேடைகள், பிராசங்கள், யமகங்கள், திரிபுகள் எல்லாம் மிகச் சிறந்த இலக்கிய வகையைச் சேர்ந்தவை என்று பின்னால் நான் உணர்ந்தபோது, முத்தையா பாகவதருடைய காலட்சேபங்களின் சிறப்பை அவருடைய சிலேடைகள் ஓரளவு குறைத்து வருகின்றன என்று கண்டேன். (ஆனந்த விகடன்—1-10-33)

முத்தையா பாகவதரின் இந்தக் குறையைப் போல் சிதம்பர பாகவதரிடமும் ஒரு குறை இருந்தது. ''அவனுகப்பட்டவன், இவனுகப்பட்டவன்'' என்று ஏகப்பட்ட தடவை சொல்லுவார் இவர். அதையும் கல்கி சுட்டிக் காட்டிக் கேலி செய்தார்.

சிறு வயதில் தாம் காலட்சேபம் செய்ததையும் அந்த வயது முதல் பல பாகவதர்கள் செய்யக் கேட்டதையும் எண்ணிப் பார்த்து, அந்தக் கலையைப் பற்றிய மொத்த மதிப்பீடு ஒன்றைக் கல்கி வெளியிட்டார்:

காலட்சேபத்தில் எனக்கு மிக்க நம்பிக்கை உண்டு. காலட்சேபங்களின் மூலமாகத் தேசத்துக்குப் பெரிய நன்மை செய்யலாம். எவ்வளவோ சீர்திருத்தங்களை உண்டுபண்ணலாம்.

மக்களுக்கு இன்பம் அளிக்கும் உயர் கலைகளுக்கு இடையில் காலட்சேபம் மிக்க உயர்ந்த ஸ்தானம் பெறுகிறது. அதில் இசை இன்பமும் பேச்சின்பமும் சம அளவில் கலந்திருக்கின்றன. நாலு மணி நேரம் இடம் பெயராது உட்கார்ந்து சலித்துப் போகாமல் சங்கீதக் கச்சேரி கேட்க என்னால் எப்போதுமே முடிந்ததில்லை. ஆனால் நல்ல காலட்சேபமாயிருந்தால் சலிப்பு உண்டாவதில்லை.

காலட்சேபத்தைத் தனி மனிதன் நடிக்கும் நாடகம் என்றே சொல்லலாம். வேஷம் மட்டும்தான் இல்லை. மற்றப்படி கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமாகவும் பாகவதர் நடித்தாக வேண்டும்.

இவ்வளவு மேலாகக் காலட்சேபத்தை நான் விரும்புவதற்குக் காரணம் வேறொன்றும் உண்டு. சங்கீதக் கச்சேரி, நாடகம், நடனம், பிரசங்கம் என்பவை எல்லாத் தேசங்களுக்கும் பொது. ஆனால் காலட்சேபம் என்பது பாரத நாட்டின் ஏகபோக உடைமை.


(ஆனந்தவிகடன்—1-5-32)

புராணக் கதைகளின் சாயல்கள் 'கல்கி'யின் எல்லாவித எழுத்துக்களிலும் அங்கங்கே தோன்றிக் கொண்டே இருந்தன. யோசித்துப் பார்த்தால், சிறு வயதில் அவர் புராணக் கதைகளில் கொண்ட ஆசையும் தேர்ச்சியுமே, பின்னர் அவர் விரிவான பொது இலக்கியத்திலும் சரித்திரத்திலும் ஆசை கொள்ளவும் தேர்ச்சி யடையவும் அடிப்படையாய் அமைந்தன என உணர்கிறோம்.

(தொடரும்)



CHAITRA-BLS 8 TAM



● கஜுராஹோ கோயிலிலிருந்து களவாடிச் சென்று ஒரு குளத்தில் ஒளித்து வைக்கப்பட்ட அம்ப ரஸ் சிலையை ஸி. பி. ஐ. அதிகாரிகள் கண்டுபிடித்து எடுக்கிறார்கள்.

பெண்ணைக் கடத்துவது முதல் எண்ணெய்க்கலப்படம் வரை!

சாஸ்திரி பவன். மத்திய புலனாய்வு அலுவலகத்தில் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ வி. ஆர். லக்ஷ்மிநாராயணன் அவர்கள் அறையினுள் நுழைகிறோம்.

முதலில் அவரிடம், ''ஸார்! ஸி. பி. ஐ.க்கும் ஸி. ஐ. பிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஓர் எழுத்தை மாற்றிப் போட்டுப் பெரிய மர்மத்தைத் தோற்றுவித்துவிட்டார்களே?'' என்று வினவுகிறோம்.

''ஸி. பி. ஐ. மந்திரி சபை செயலகத்தின் கீழ் இயங்கும் புலன் விசாரணை அலுவலகம். ஸி. ஐ. பி. மத்திய உள் துறை இலாகாவைச் சேர்ந்த ரகசியத் தகவல் பிரிவாகும். அமெரிக்காவில் எப். பி. ஐ.யும் ஸி.பி.ஐ.யும் ஒன்று. அமெரிக்காவில் உள்ள ஸி.ஐ.ஏ. போல் இங்கு ஸி. ஐ.பி. இயங்குகிறது!''

இவ்வாறு கூறிவிட்டு, ''புரிகிறதா?'' என்று கேட்டார் திரு லக்ஷ்மிநாராயணன்.

''புரிவதுபோல்தான் இருக்கிறது. ஸி.ஐ.பி. பற்றி இன்னும் விளக்க முடியுமா?'' என்றேன்.

''ஸி.ஐ.பி.க்குத் தேசிய பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களில்தான் அக்கறை உண்டு. அதற்கு விசாரணை செய்ய அதிகாரம் இல்லை. அந்த விசாரணை வழக்குகளையெல்லாம் எங்களுக்குத் தந்துவிடுகிறார்கள். நாங்கள் கோர்ட்டில் வழக்கு நடத்துவோம்!'' என்று கூறிவிட்டு, டி. ஐ. ஜி. பல ருசிகரமான தகவல்களைத் தந்தார்!

1943-44ம் வருஷங்களில் போர்க் காலங்களில் போர் இலாகாவில் ஏற்படும் லஞ்ச ஊழலைக் கண்காணிக்கச் சிறு பிரிவாகத் தொடங்கப்பட்டதாம் ஸி.பி.ஐ.

■ லஞ்ச ஊழலைத் தொடங்கி வைத்த பெருமை ஆங்கில அரசாட்சிக்கே உண்டு. 1765ம் ஆண்டில் வங்காளத்தில் கவர்னர் ஜெனரலாக இருந்த கிளைவ் கல்கத்தாவின் செக்ரடேரியட்டில் (ரைட்டர்ஸ் பில்டிங் என்று அதற்கு அந்தக் காலத்தில் பெயராம்!) வங்காள அதிகாரிகளிடையே நிலவிய லஞ்ச ஊழலை ஒழித்துக் கட்டத் தீர்மானித்தார். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல் மட்டம் தட்ட அவர்களுக்கு மேல் அதிகாரிகளாகச் சென்னையிலிருந்து பலரை வரவழைத்துச் செக்ரடேரியட்டில் உத்தியோகத்தில் அமர்த்தினார்.


■ புது தில்லியில் எட்வர்ட் கோல்புருக் என்று ரெஸிடெண்ட் (Resident) இருந்தார். அவருக்கு உதவியாளராக சப் கலெக்டர் அந்தஸ்தில் பிரும்மசாரி இளைஞர் சார்லஸ் வந்து சேர்ந்தார். கோல்புருக் குடும்பமே



லஞ்ச ஊழலில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு மனம் புழுங்கினார் சார்லஸ். இதை எதிர்த்துப் புரட்சி செய்தார். விளைவு அவரது உத்தியோகம் பறி போயிற்று!

■ கர்ஸான் பிரபு பர்மாவில் ஆங்கில ராணுவ அதிகாரிகள் ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டுவிட்டதைக் கேள்விப்பட்டார். அவர் மனம் கொதித்தது. அத்தனை ராணுவ அதிகாரிகளுக்கும் கீழ் பதவிகளை அளித்ததோடு அவர்களைப் பல இடங்களுக்கு மாற்றினார். பத்திரிகைகளில் இந்தச் செய்தியை விளம்பரப்படுத்தினார். இதைக் கண்டு பொறுமிய ராணுவ அதிகாரிகள், ''நம் ஆங்கில மக்களின் கௌரவமே பாதிக்கப்படும். பிரிட்டிஷ் ராணுவத்துக்கு இழுக்கு வரும்!'' என்றனர்.

''இப்படிப்பட்ட விஷயங்களை மூடி மறைத்தால்தான் விபரீத பலன் விளையும். வெட்டவெளிச்சமானால் எல்லோருமே யோக்கியமாக நடந்து கொள்வார்கள்!'' என்றார் கர்ஸான்!



■ 9–4–49ல் விந்தியப் பிரதேசத்தில் மந்திரியாக இருந்த சிவ் பகாதுர் சிங் புது தில்லிக்கு வந்து, பன்னா வைரச் சுரங்க மெண்டிகேட்டிடம் 25,000 லஞ்சம் பெறவிருந்தார். இந்தத் தகவல் ஸி.பி.ஐ.க்கு எட்டிவிட்டது. அவர்கள் 'கண்ணி' வைத்து மந்திரியைப் பிடித்துவிட்டார்கள். சிவ் பகாதுர் சிங் ''தாம் சர்க்கார் சேவகனல்ல!'' என்று வழக்காடினார். சர்க்கார் சார்பில் ஸெதல்வாட் ஆஜரானார். பதவியில் உள்ள ஒரு மந்திரி லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுச் சுப்ரீம் கோர்ட்டில் தண்டனை அடைந்தது இதுவே முதல் தடவை.

தமிழகத் தலைநகரில் செயலாற்றும் புலனாய்வுத் துறையின் சாதனைகளில் சிலவற்றை 1970ல் ஜனாதிபதி போலீஸ் விருதைப் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியிடமிருந்து பெற்ற திரு வி. ஆர். லக்ஷ்மி நாராயணன் தருகிறார்.

■ ஏடனிலிருந்து விலை உயர்ந்த தோல்களை ஆறு லட்சம் ரூபாய் அந்நியச் செலாவணி அனுப்பி இறக்குமதி செய்ய ஒரு வியாபார இளைஞரும் தந்தையும் அனுமதி பெற்றனர். துறைமுகத்தில் வந்து இறங்கியது என்ன தெரியுமா? 3,500 ரூபாய் பெறுமானமுள்ள பழைய தோல்களும், கற்களும் அடங்கிய பெட்டி. இதைத் துறைமுகத்திலிருந்து எடுத்துப் போகவும் அந்த வியாபாரிகள் முனையவில்லை. மிச்சப் பணத்தையெல்லாம் அயல் நாட்டிலேயே தங்கள் கணக்கில் வைத்துக் கொண்டனர் இவ் வியாபாரிகள். இதனை 'மோப்பம்' பிடித்து அறிந்த ஸி.பி.ஐ. அதிகாரிகள் அந்த வியாபாரிக்கும், தந்தைக்கும் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுத் தண்டனை பெற்றுத் தந்தனர் !

■ சமீபத்தில் பெட்ரோலில் மண்ணெண்ணெய் கலப்படம் செய்வதாக ஒரு டெலிபோன் செய்தி ஸி. பி. ஐ. இலாகாவுக்குக் கிடைத்தது. லாரியைக் கடத்திச் சென்று டிரைவரும், மற்றும் நால்வரும் லாரியிலிருந்து பெட்ரோல் எடுத்து விற்றுவிட்டு, அதற்குப் பதிலாக மண்ணெண்ணெய் கலப்படம் செய்வதை அறிந்தனர். அவர்களை 'வலை' வீசிப் பிடித்ததோடு அதை நிரூபிக்க அப்படியே புகைப்படம் பிடித்துக் கொண்டனர். கலப்படக் குற்றத்துக்கு அவர்களுக்குத் தண்டனை கிடைத்தது !

''அந்தக் காலத்தில் குற்றம் புரிந்து சிறைத் தண்டனை அனுபவித்த ஒருவரை ஊருக்குள் கிராமவாசிகள் அனுமதிக்கமாட்டார்கள். அவர்கள் இரவில்தான் தம் உறவினரைப் பின் வழியாக வந்து பார்த்துச் செல்வார்கள். இன்று குற்றம் புரிந்தவர்கள் பணத்தைக் கொள்ளையாகச் சேர்த்துக் கொண்டு வெளிப்படையாகவே நடமாடுகிறார்கள். எந்தக் குறுக்குவழியிலாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை எங்கும் நிலவுகிறது. மக்கள் நேர்மையுடன் இதனை வெளிப்படுத்த முன்வர வேண்டும். நாங்கள் கண்டுபிடித்த குற்றங்கள் ஒருசிலதாம். கண்டுபிடிக்க வேண்டியவை நிறைய உண்டு. மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்!'' என்கிறார் திரு லக்ஷ்மி நாராயணன். பேட்டி: பி.எஸ்.எம்.



அட்டைப்பட மர்மம்

மர்மச் சிறப்பிதழில் பிரசுரமாகும் திரு தமிழ்வாணனின் மர்மக் கதைக்கு ஒரு மர்மப் படம் போடச் சொல்லி நவீனபாணி ஓவியர் எஸ். சண்முகசுந்தரம் அவர்களைக் கேட்டுக்கொண்டோம். அவர் மாடர்ன் ஆர்ட் முறையில் கதைக்கு அட்டைப் படம் தீட்டியதுடன் புதிரை விடுவிக்கவும் செய்தார். வண்ணச் சித்திரத்தின் மையத்தில் ஓரிடத்தைக் காட்டி 'இதுதான் கார்; இங்கே நீரில் மூழ்கி இருக்கிறது; இதுதான் வில்லன்; அவன் கண்கள் இவை' என்றெல்லாம் சொன்னார். மர்ம முடிச்சை அவர் அவிழ்த்த பின்னும் எங்களுக்குப் படம் புதிராகத்தான் இருக்கிறது. அதுதானே 'மாடர்ன் ஆர்ட்'டின் சிறப்புக்கு அடையாளம்!

-ஆசிரியர்



ஒன்று, இரண்டு, மூன்று!

1, 2, 3

தமிழ்வாணன்

மருதூர்நம்பி ஒன்றும் இல்லாமல் இருந்தவர். ஆணழகன். பேச்சாலும் நாகரிக உடையாலும் எப்படிப்பட்ட பெண்களையும் கவர்ந்து இழுக்கும் ஆற்றலைப் பெற்றவர். அவர் வலையில் எத்தனையோ பெண்கள் வந்து விழுந்து விட்டார்கள். என்றாலும் அவர் பெரிய மீனுக்காகக் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீண் போகவில்லை!

மதுரவல்லி என்னும் பணக்காரப் பெண், மருதூர் நம்பியிடம் காதல் வெறி கொண்டாள். திருமணம் ஆயிற்று. பாங்கில் அவள் பெயரில் பணம் மட்டும் பத்து இலட்சம் ரூபாய் இருந்தது. மருதூர் நம்பி சென்னை நகரிலே ஒரு பெரிய எவர்சில்வர் தொழிற்சாலை தொடங்கி நடத்திக் கொண்டிருந்தார். தொழிற்சாலையைப் பெரிதாக்க அடிக்கடி அவர் மதுரவல்லியிடம் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்க வேண்டியிருந்தது.

இது அவளுக்குப் பிடிக்கவில்லை!

தன் கணவனிடம் உண்மையில் பணம் ஏதும் இல்லை. முழுக்க முழுக்கத் தன் பணத்தை நம்பித்தான் அவர் தொழில் நடத்துகிறார் என்பதை அறிந்து மதுரவல்லியின் காதல், நாளுக்கு நாள் குறைந்தது. இதனால், தன் கணவனை அவள் ஒரு கைப் பொம்மையைப் போல் ஆட்டி வைத்தாள்.

அவர், கார் ஓட்டும்போது அவள், 'காரை இப்படி ஓட்டுங்கள், அப்படி ஓட்டுங்கள், பின்னால் பஸ் வருகிறது, எதிரே மாடு வருகிறது' என்று சொல்லி விரட்டுவாள். தான் ஒரு பணக்காரி என்ற திமிரால் வேண்டும் என்றே இப்படிக் கார் ஓட்டும்போதெல்லாம் அவள் சொல்லுகிறாள் என்ற உணர்வு மருதூர் நம்பியின் மனத்தில் வேரூன்றியது.

கார் ஓட்டும்போதெல்லாம் எப்படிக் கார் ஓட்டவேண்டும் என்று அவள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாள்.

இது அவருக்குப் பிடிக்கவில்லை.

எங்கேயாவது விருந்துக்குப் போனாலும், தன்னைப் பார்க்க நண்பர்கள் குடும்பத்துடன் வந்தாலும் மதுரவல்லியே வளவளவென்று பேசிக் கொண்டிருப்பாள். கணவனைப் பேச விடுவதில்லை! அவர் தம் கைப்பொம்மை என்பதை மற்றவர்கள் நம்ப வேண்டும் என்று அவள் எண்ணினாள்

இது அவருக்குப் பிடிக்கவில்லை.

மருதூர்நம்பி தன்னுடன் வரும்போது எந்தச் சட்டை அணிய வேண்டும், எந்த



ஷூக்களை அணிய வேண்டும், எந்தக் கோட்டையும் கால் சட்டையையும் அணிய வேண்டும் என்று அவள் சும்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

இது அவருக்குப் பிடிக்கவில்லை!

எல்லாவற்றுக்கும் மேலாக, அவருக்குப் பணம் கொஞ்சம் வேண்டியிருந்தாலும் செக்கில் அவளிடம் போய்க் கையெழுத்து வாங்க வேண்டியிருந்தது!

இது அவருக்குப் பிடிக்கவில்லை!

மனத்துக்குள்ளேயே குமுறிக்கொண்டிருந்த அவர், ஒரு நாள் இரவு தம் மனைவி மதுரவல்லியுடன் விருந்து ஒன்றுக்குப் போய்த் திரும்பும்போது மணி பன்னிரண்டு ஆகிவிட்டது! காரை விரைவாக ஓட்டியபோது, 'ஏன் இப்படிப் பேயைப் போல் காரை ஓட்டுகிறீர்கள்? மெல்ல ஓட்டுங்கள்' என்று கடிந்து கொண்டாள் மதுரவல்லி.

வழக்கமாக, 'ஆகட்டும்' என்று சொல்லி உடனே விரைவைக் குறைப்பவர், அன்று மாறாகப் பேயைப் போல் ஓட்டினார்! தொடர்ந்து அச்சம் கொள்ளும் அளவுக்கு ஓட்டினார்!

''நான் சொல்லுவது உங்கள் காதில் விழவில்லையா? புதிய கார், வெளி நாட்டுக் கார். இஞ்சின் கெட்டுப் போகும்'' என்று மதுரவல்லி சீறினாள்

மருதூர் நம்பி இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை!

திடீரென்று இவருக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் வந்து விட்டது என்று மதுரவல்லி வியப்பினுள் மூழ்கி உட்கார்ந்திருந்தபோது,—

ஒரு திருப்பம்.


அச்சம் கொடுக்கக் கூடிய வளைவு!

பிரேக்கைப் போடாமல் சர்ரென்று காரைத் திருப்பியபோது, திருப்பத்தில் இருந்த ஆழமான குளத்தினுள் போய்க் கார் விழுந்தது.

மதுரவல்லிக்கு எல்லாம் தெரியும். ஆனால் நீந்தத் தெரியாது.

கார் உள்ளே மூழ்கி மதுரவல்லியைக் கொன்றது.

மருதூர்நம்பி, காருக்குள்ளிருந்து விடுபட்டு நீந்தி மேலே வந்தபோது எவரும் பார்க்கவில்லை என்றுதான் எண்ணினார்.



— சாமா

மதுரவல்லியின் தலை மேலே தண்ணீரில் தெரியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, பத்து நிமிடங்கள் கழித்து அவர் உதவிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். தியணைக்கும் படைக்குச் செய்தி சொல்லிவிட்டு, தொலைபேசிப் பெட்டிக் குள்ளிருந்து அவர் வெளியே வந்தபோது உயரமான ஒரு மனிதன் அவரைப் பார்த்துச் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தான்.

''என் பாராட்டுக்கள்'' என்றான் அவன்.

''எதற்கு?'' என்றார் மருதூர் நம்பி சீற் றத்துடன்.

''உங்கள் மனைவியைக் கொன்றதற்கு! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். இயற்கையாக நடந்துவிட்ட ஒரு விபத்தைப் போல் செய்து விட்டீர்கள்! வழக்கு முடியட்டும். பிறகு உங்களைப் பார்க் கிறேன்'' என்றான் அவன்.

''உன் பெயர்?''

''உங்களுக்குப் பழக்கமான பெயர்தான். முடிகொண்டான்.''

பெயரைக் கேட்டதும் குப்பென்று அவ ருக்குத் தொண்டை அடைத்தது.

அவருடைய மிகப் பழைய நண்பர்களில் அவன் ஒருவன். 'கருநாகமும் முடிகொண் டானும் ஓரிடத்தில் இருந்தால், முதலில் கொல்ல வேண்டியது இந்த முடிகொண்டா னைத்தான்' என்று வேடிக்கையாக மருதூர் நம்பி சொல்லுவார் அந்தக் காலத்திலேயே!

இவன் எப்படி இங்கு வந்தான்?

அவனிடம் பேச நேரம் இல்லை.

''நாளைக்கு என்னை வந்து பார்'' என்று சொல்லிவிட்டு விரைந்து சென்றார் நம்பி.

2

வழக்குச் சிறப்பாக முடிந்தது.

குளம் இருந்த இடத்தில் சாலையில் விளக்கு இல்லை. அச்சம் மிகுந்த ஒரு திருப்பம். மெல்ல வரும் கார்கூடக் கொஞ்சம் கவனக் குறை வாக இருந்தாலும் குளத்தில் இறங்கிவிடும். காரில் போகும்போது மதுரவல்லி அடிக்கடி தன் கணவனுடன் வளவளவென்று பேசும் தன்மை உடையவள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால், அவர் கொஞ்சம் கவனக் குறைவாகக் காரை ஓட்டும்படி நேரிட்டது. இதைப் போலீஸார் நம்பினார்கள். இதனால், 'மருதூர்நம்பி எவ்வளவு முயன்றும் மதுரவல்லியைக் காருக்குள்ளிருந்து வெளியே இழுக்க முடியவில்லை; அவர் பிழைத்தது பெரிய செயல்' என்று வழக்கை முடித் தார்கள்!

மதுரவல்லியின் சொத்துக்களும் பணமும் நகைகளும் ஒரேநாளில் மருதூர் நம்பிக்குக் கிடைத்தன. அமைதியுடன் களிப்பாகப் பணத்தைச் செலவழித்துக் கொண்டு, தான் விரும்பிய பெண்களுடன் இன்பமாக நேரத் தைக் கழிக்க வேண்டிய நேரத்தில், முடி கொண்டான் வந்தது அவருக்குத் தாக்குத வாக இருந்தது.

ஒரு நாள் அவன் வந்தான். மருதூர்நம்பி யிடம் தனியாகப் பேசினான்.

''இந்தப் பகுதிக்கு வந்து சில நாட்கள் தாம் ஆகின்றன. உங்களைப் பற்றிக் கேள் விப்பட்டதும் உங்களுடன் தொடர்பு கொள்ள எண்ணினேன். நல்ல நேரத்தில் நான் தொடர்பு கொண்டேன்'' என்றான்.

''எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று உடனே கேட்டார் மருதூர் நம்பி.

''தேவைப்படும்போதெல்லாம் வேண்டும். முதலில் இருபதினாயிரம் கொடுங்கள். பிறகு பார்ப்போம்!''

''மொத்தமாக இருபதினாயிரம் கொடுக் கிறேன். மீண்டும் இந்தப் பக்கம் தலை காட்டக் கூடாது!''

''முடியாது. நீங்கள் ஒரு கடத்தல்காரர். சிறு வயதிலேயே கடத்தல் தொழிலில் ஈடு பட்டு ஒரு சுங்க அதிகாரியைக் கொன்றுவிட்டு கல்கத்தா சிறையில் ஐந்து ஆண்டுகள் இருந் தீர்கள்! அப்போது புல்லங்கிரன் என்ற பெயர். சிறையிலிருந்து தப்பி விட்டீர்கள். இப்போது மருதூர்நம்பி என்னும் பெய ருடன் பாஸ்போர்ட், பாங்க் பாலன்ஸ், தொழிற்சாலை, பெரிய மனிதர்களுடன் தொடர்பு! உண்மையைச் சொன்னால் போலீசார் கல்கத்தா சிறைப் பொறுப்பாளர் களிடம் விசாரிப்பார்கள்! பழைய புகைப் படங்கள் வெளிவரும்! மனைவியைப் பணத் துக்காகக் கொன்று விட்டீர்கள் என்பது தெரிந்துவிடும்!''

மருதூர்நம்பி இருபதினாயிரம் ரூபாயை எடுத்து மேசையின் மீது போட்டு, ''தொலை'' என்றார்.

முடிகொண்டான் பணத்தை அள்ளித் தன் கால் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு அமைதியுடன் எழுந்தான், சிரித்தான், நிதானமாக நடந்தான்.

3

நாட்கள் ஓடின.

மதுரவல்லியின் கைப்பொம்மையாக இருந்த மருதூர் நம்பி, இப்போது முடி கொண்டானின் கைப்பொம்மையாக இருந்து வந்தார்!

அடிக்கடி அவன் வந்து அவரை அச்சுறுத் திப் பணம் பிடுங்கினான். மற்றவர்களுக்கு ஐயம் ஏற்படாமல் இருக்கத் தொழிற்சாலை யிலேயே ஒரு பெரிய வேலை கொடுக்கும்படி கேட்டான்.

அவர் கொடுத்தார்.

முடிகொண்டான் அடிக்கடி அவர் அறைக் குப் போய்ப் பேசிய முறையும், அடிக்கடி

அவன் ஏதாவது ஒரு கணக்கில் முன்பணம் வாங்குவதும் தொழிற்சாலையில் இருந்தவர்களுக்கு ஐயத்தை உண்டாக்கியது.

மருதூர் நம்பி ஏன் இப்படி அவனைக் கண்டு அஞ்சுகிறார் என்று அவர்கள் வியப்பு அடைந்தார்கள்.

அவனுக்கு அடிக்கடி பணம் கொடுத்து நிறுவனத்தின் பணம் கரைந்து கொண்டிருந்தது. 'இனிமேலும் இவனை விடக்கூடாது. இவனை ஒழித்தே தீரவேண்டும்' என்று எண்ணினார் மருதூர் நம்பி.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை. பதின்மூன்றும் தேதி. எவரிடமும் சொல்லாமல் காரை எடுத்துக் கொண்டு மகாபலிபுரம் சென்றார். அவர் மனம் எப்படி முடிகொண்டானை ஒழிப்பது என்பதைப் பற்றியே சிந்தித்தது. திரும்பத் திரும்பச் சிந்தித்தது!

மகாபலிபுரத்தில் கல்வெட்டுக்களின் அருகிலும், கடற்கரை ஓரங்களிலும், விளக்குத் தூண்களின் பக்கத்திலும் நின்று புகைப் படங்கள் எடுத்துக் கொண்டார்.

மகாபலிபுரத்துக்கு வருபவர்களை நாள்முழுவதும் சுற்றிக் காட்டி அவர்களைப் புகைப் படங்கள் எடுக்க இப்போது சில அழகிய பெண்கள் இருக்கிறார்கள். இந்தப் பெண்களை மகாபலிபுரத்தில் இருந்த சில புகைப்பட ஸ்டுடியோக்காரர்கள் அமர்த்தியிருக்கின்றனர். மாலையில் திரும்பும்போது புகைப்படங்களைப் பிரிண்ட் செய்து, ஒரு கவரில் போட்டுக் கொடுப்பார்கள். புகைப்படம் எடுக்கும் இந்தப் பெண்கள், சிற்பங்களுக்குத் தொடர்புள்ள வரலாறுகளை விளக்கிச் சொல்லுவதால், அவர்களுக்கு மிகுந்த வாய்ப்புக்கள்!

தன்னைப் புகைப்படம் எடுத்த பெண் அன்று மாலை புகைப்படங்களை ஒரு காகித உறையில் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தபோது அவர் அவைகளைப் பார்த்தார்.

புகைப்படத்தின் பின்னால், ஒவ்வொரு புகைப்படம் எடுக்கப்பட்ட நேரமும், தேதியும், மகாபலிபுரத்தில் அவர் நின்று எடுத்துக் கொண்ட இடத்தின் பெயரும் குறிக்கப் பட்டிருந்தன.

காலை பத்து மணியிலிருந்து மாலை நான்கு மணிக்குள் முப்பது புகைப்படங்களை எடுத்திருந்தாள். புகைப்படங்களின் நெகடிவ்களும் இருந்தன.

''எவ்வளவு பணம்?'' என்றார் மருதூர் நம்பி.

''முந்நூறு ரூபாய்!''

''நெகடிவ்களையும் கொடுத்துவிட்டாயே!''

''எங்கள் நிறுவனத்தில் நெகடிவ்களையும் கொடுத்து விடுகிறோம்.''

''ஏன் அப்படி?''

''வெளி நாட்டவர்களும் வட நாட்டவர்களும் நெகடிவ் வேண்டும் என்கிறார்கள். பணத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அதனால்தான்.''

''தேதியையும் புகைப்படம் எடுத்த நேரத்தையும் குறித்து வைத்திருக்கிறாயே!''

''புகைப்படத்தில் குறித்ததோடு சரி. எங்களிடம் இதுபற்றி ஒன்றும் குறிப்போ கணக்கோ இருக்காது. உங்கள் நினைவுக்காகப் புகைப்படத்தில் அதைக் குறித்துக் கொடுத்திருக்கிறோம்.''

''நன்றி' என்று சொல்லிவிட்டு அவளிடம் பணத்தைக் கொடுத்தார் மருதூர் நம்பி.

அப்போதுதான் அவருக்கு அந்தப் புதிய திட்டம் தோன்றியது!

4

ஒன்று, இரண்டு, மூன்று.

முதலாவதாக ஒரு சுங்க அதிகாரியைக் கொன்றுவிட்டுச் சிறைக்குப் போனேன். இரண்டாவதாக என் மனைவியைக் கொன்றேன். இப்போது மூன்றாவதாக ஒரு கொலையைச் செய்தால் என்ன? ஒன்று, இரண்டு, மூன்று. முடிகொண்டான் பிடியிலிருந்து விடுபட வேறு வழியே இல்லை.

அன்று வெள்ளிக் கிழமை. 18ம் தேதி. மறுநாள் காலையிலேயே தாம் மகாபலிபுரம் போகப் போவதாகவும், தமக்கு ஒரு நாள் ஓய்வு தேவைப்படுகிறது என்றும், தொழிலைப் பற்றியும் கொஞ்சம் தனியாகச் சிந்திக்க வேண்டும் என்றும் வியாழக் கிழமையன்றே தம் செயலாளரிடம் சொல்லி விட்டார். எப்போதாவது ஒரு தடவை அவர் இப்படி எங்கேயாவது புறப்பட்டு விடுவார். ஆகையால் அவருடைய செயலாளர் இது பற்றி வியப்படையவில்லை.

ஆனால்,

மறுநாள் மருதூர் நம்பி மகாபலிபுரம் போகவில்லை. எண்ணூர்க் கடற்கரை ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு, பஸ்ஸையும், வாடகைக் காரையும் பிடித்து முடிகொண்டான் வீட்டுக்குச் சென்றார்.

அன்று அவர் அலுவலகம் வரமாட்டார் என்று தெரிந்து கொண்டதும் அவனும் அலுவலகம் போகவில்லை.

சுமார் பதினொரு மணிக்கு, அவன் குளியலறையில் நிலைக்கண்ணாடியின் முன் நின்று சோம்பலுடன் முகச் சவரம் செய்து கொண்டிருந்தான். அவன் தனிக் கட்டை. வீட்டில் வேறு எவரும் இல்லை.

உள்ளே நுழைந்த மருதூர்நம்பி கால் சட்டைப் பையிலிருந்த நைலான் கயிறு ஒன்றை எடுத்தார். அவன் பின்னால் போய்ச் சிரித்தபடி நின்றார். அவன் அவரை நிலைக் கண்ணாடியில் பார்த்துவிட்டுத் திரும்புவதற்குள், —

நைலான் கயிறு அவன் கழுத்தை முறுக்கியது. இறுக்கியது!

முடிகொண்டான் விழிகள் பிதுங்கின!

அவன் கையிலிருந்த சவரக் கத்தி கீழே விழுந்தது!

முடிகொண்டான் இறந்தான்!

உடனே விழுந்தான்!

பாம்பைப் போல் நழுவினார் மருதூர்நம்பி.

5

மருதூர்நம்பி, காரை எண்ணூரிலிருந்து ஆந்திராவின் பக்கம் விட்டார். கடற்கரை ஓரமாகவே மகாபலிபுரம் போய் வந்தால் எவ்வளவு தூரம் படியுமோ அவ்வளவு தூரம் காரில் படியும்படி செய்தார். வழியில் ஒரு



Thomas/DCM 15 a/tam



இப்போது! வைஸின்.

கலங்கிய கண்களிலே கதிரொளி மீட்பது வைஸின்

கரித்தாலும், களைப்படைந்தாலும், கூசினாலும், கண்களைக் கசக்காதீர்கள், சிவந்த கண்களை நிமிட நேரத்தில் இதமுடன் தெளிவாக்குவதற்கு வைஸின் இருக்கிறது. வன்மை வாய்ந்தது. எனினும் மென்மை கனிந்தது. உலகெங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்வது வைஸின்.

சில்லறை விலை ரூ. 2.97 (தல வரிகள் தனி)

சிவந்த கண்களை ஒரே நிமிடத்தில் தெளிவாக்குவது வைஸின் ஒன்றுதான்.

பரிட்சித்துப் பார்க்க இதோ வழி:
உங்கள் கண்கள் சிவந்திருக்கக் கண்டால், இதோ எளிய வைஸின் சிகிச்சை: ஒரு கண்ணிலே 2 சொட்டு வைஸின் விட்டுக்கொள்ளுங்கள். ஒரு நிமிடம் கழித்துக் கண்ணாடியில் காண்பீர்கள் அத்தாட்சி — ஒரு விழியிலே சிவப்பு, மறு விழியிலே தெளிவு. (இனி, சிவந்த விழியிலும் வைஸின் இட்டு, தெளிவாக்குங்களேன்).

கண்களை ஒருபோதும் கசக்கவேண்டாம்... கரிக்கும் கண்களுக்குத் தேவை வைஸின்.

ஃபைஸர் தயாரிப்பு. Pfizer "உலக நலனை நாடிடும் விஞ்ஞானம்"

Pfizer

லின்டாஸ்-PZ. VI.3-140 TH

சவுக்குத் தோப்பில் ஒளிந்திருந்துவிட்டு மாலை யில் திரும்பினார்.

செய்தி கிடைத்ததும் போலீசிலிருந்து பிணத்தை வாங்கினார். அடக்கம் செய்தார்.

முடிகொண்டான் கொலை செய்யப்பட் டான் என்று போலீசார் சொன்னார்கள். கொலையாளியைக் கண்டுபிடிக்கும்படி மரு தூர் நம்பி வற்புறுத்தினார்.

போலீஸ் அதிகாரி எவ்வளவு துப்பறிந்தும் குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை!

என்றாலும்,

முடிகொண்டானுக்கும் மருதூர் நம்பிக் கும் இடையே ஒரு மர்மத் தொடர்பு இருந் தது என்று போலீசாருக்கு ஐயம் ஏற்பட்டது. ஒரு வாரம் கழித்து இரண்டு போலீஸ் அதி காரிகள் அவரைத் தேடி வந்தார்கள்.

போலீஸ் அதிகாரி ஒருவர், ''பொறுத்துக் கொள்ள வேண்டும். கொலை நடந்த அன்று நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்? மகாபலி புரம்தானே?'' என்றார்.

''ஆமாம். ஏன்?''

''எதையும் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். பதினொரு மணிக்கு முடி கொண்டான் கொலை செய்யப்பட்டதாகப் போலீஸ் டாக்டர் கூறுகிறார்.''

''ஐயம் கொள்ள வேண்டாம். நான் பதி னொரு மணிக்குக் கடற்கரை விளக்குக் கம்பத் தில் நின்று புகைப்படம் எடுத்துக்கொண் டேன். என்னைப் புகைப்படம் எடுத்த பெண், எந்த நேரத்தில் எங்கே புகைப்படம் எடுக் கப்பட்டது என்பதை எழுதியிருக்கிறாள், பாருங்கள்'' என்று சொல்லிப் புகைப்படங் களை மேசையின் மீது போட்டார்.

அவள் பின்னால் பால் பாயிண்ட் பேனா வினால் எழுதிக் கையெழுத்துப் போட்டிருந் தாள்.

13ஆம் தேதியை மட்டும், அதே நிற பால் பாயிண்ட் பேனாவினால் 18 என்று மாற்றி யிருந்தார் மருதூர் நம்பி. அதை மாற்றி யதைக் கண்டுபிடிக்கவே முடியாது.

காலை எட்டு மணியிலிருந்து மாலை நான்கு மணிவரையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துச் சிரித்தன.

எல்லாவற்றையும் சோதித்த போலீஸ் அதிகாரி, ''பொறுத்துக் கொள்ளுங்கள். மருதூர்நம்பி, உங்களைக் கைது செய்கி றோம்'' என்றார்.

''வாட்?''

''18-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மகாபலிபுரத்தில் பெரும் மழை! கடுமை யான புயல்! அன்று முழுவதும் ஒரு புகைப் படக்காரர்கூட வெளியில் போகவில்லை! அன்று புகைப்படமே எடுத்திருக்க முடியாது!''









குற்றம் தோன்றக் கதை தோன்றும்!

ஸ்ரீ மஹேந்திர சரஸ் புகழ்பெற்ற ஹிந்தி சினிமாப் பத்திரிகை 'மாதுரி'யின் உதவி ஆசிரியர். சிறந்த எழுத்தாளர். பல படங்களுக்கு வசனங்கள் எழுதியும் புகழ்பெற்றவர். திரை உலகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட இவர், 'கல்கி'யின் இவ்விதழுக்கென்றே பிரத்தியேகமாக இக் கட்டுரையைத் தயாரித்துத் தந்துள்ளார்.

- ஆசிரியர்


இந்தியத் திரை இன்று இரத்தச் சாயம் பூசப்பட்டு இருக்கிறது. களவுச் செயல்களும் உதிரம் குடிக்கும் துப்பாக்கி ரவைகளும் அதனைத் துளைத்து எடுத்திருக்கின்றன. போதாக்குறைக்கு ரசிகர்களின் கவலை வேறு கெட்டுக் கிடக்கிறது. கத்திக்குத்து, வாள் வீச்சு, துப்பாக்கிச் சூடு, கொலை - களவு வழங்கப்படவில்லை என்றால், அவர்களுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. அதனால் அண்மையில் வெளியான அத்தனை படங்களும் குற்றச் செயல்கள் தோற்றுவித்த துப்பறிவுச் செயல்களால் நிரமேற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 'ஜஞ்ஜீர்' 'யாதோங் கி பாராத்', 'ஜுக்னு', 'இன்டர் நேஷனல் க்ரூக்', 'தோஸ்த்', 'அமீர்—கரீப்', 'விக்டோரியா 203', 'ஜானி மேரா நாம்' — இப்படி எத்தனை எத்தனையோ எண்ணிக்கொண்டே போகலாம்; முடிவு இராது.

ஹிந்தியில் இந்த முறையில் எடுத்த முதல் படம் பாம்பே டாக்கீஸின் அசோக் குமார் நடித்த 'கிஸ்மத்' ஆகும். அது கண்ட வியப்புமிகு வெற்றியே இத்தகைய படங்கள் வருவதற்கு வழி சமைத்துக் கொடுத்தது.

''இத்தகைய கதைகளுக்காக நம் நாட்டுத் தயாரிப்பாளர்கள் வெளிநாட்டுப் படங்களையோ, நாவல்களையோ தான் தங்கள் உதவிக்கு நாடியிருக்கிறார்கள். இதற்கு எல்லாவற்றையும் விட முக்கியமான காரணம் ஒன்று உண்டு. நம் நாட்டில் இதுவரை இதுபோன்று திட்டம் திட்டப்பட்ட மயிர்க்கூச்செறிக்கும் குற்றச் செயல்கள் நடைபெற்றதே இல்லை'' என்கிறார் சக்தி சாமந்த் எனும் புகழ்பெற்ற இயக்குநர்.

''பெரிய பெரிய திட்டங்கள் தீட்டிக் குற்றச் செயல்கள் புரிவது இங்கு வெகு குறைவு. அப்படி ஒன்று இரண்டு நடந்திருந்தால் அதை எழுத்தாளர்கள் எடுத்துக் கையாள்வதில்லை. பம்பாயில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. 'மேரீயின் மெஷின் கேஸ்' என்று பத்திரிகைகளிலும் பிரமாதமாக அடிபட்டது. ஆனால் பல ஆண்டுகள் எந்த எழுத்தாளனும் இச் சம்பவத்தைத் தொட்டு எழுதவில்லை. கடைசியில் மராட்டியில் நாடகமாக உருவாயிற்று. 'தோபீ நவ்ஹேச்' என்ற பெயரில். அதை இப்பொழுது நான் படமாக்க முயன்று கொண்டிருக்கிறேன். நம் நாட்டு எழுத்தாளர்களின் பேனா இத்தகைய கதைகளுக்கு இன்னும் பயிற்சி பெறவில்லை!''—இது மோகன்சஹ்கல்.

''நாம் நம்மை இந்தியர்கள் என்று கூறிக் கொள்ள அருகதையற்றவர்கள். ஏனெனில், நாம் இந்திய இலக்கியங்களைப் படிப்பதே இல்லை. திரைப்படத் தயாரிப்பாளர்களான எங்களிடையே, இந்தியக் கதைகளைப் படிப்பவர் வெகு அரிது. எனக்கு ஆங்கிலத்தை விட்



டால் வேறு மொழி வருவதே இல்லை. இரவு — பகல் ஆங்கிலம்தான் படிக்கிறோம். ஆங்கிலம் தான் பேசுகிறோம். அந்த மொழிக் கதைகள் எங்களைத் தங்கள் போக்குக்கு இழுத்துப் போகின்றன. அப்புறம் அவற்றையே படமாக்க நாங்கள் யோசிக்கிறோம்'' — சொல்கிறவர் ராஜ் கோஸ்லா.

''இந்திய மொழிகளில் ஜேம்ஸ் ஹெட்லே சேஸ்', 'ஏர்ல் ஸ்டேன்லே கார்ட்னர்', 'எட்கர் வாலஸ்' போன்ற தேர்ந்த எழுத்தாளர்கள் எங்கே உருவாகியிருக்கிறார்கள்? நம் எழுத்தாளர்கள் வெளிநாட்டு எழுத்தாளர்களைப்போல ஆராய்ச்சி புரிந்து, அசைக்க முடியாத நிலைக்களனில் கதைகளை எழுதுவதில்லை. ஏனெனில் அவர்களுக்குத் தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. இவையெல்லாம் கிடைப்பவர்கள் ஒருமுகப்பட்டு உழைப்பதில்லை. இது நமது துரதிர்ஷ்டம். அகாதா கிறிஸ்டியின் 'டென் லிட்டில் நிகர்ஸ்' நாவலை ஆதாரமாகக் கொண்டு 'கும்நாம்' படம் தயாரிக்கப்பட்டது. அந்தகைய அருமை பெருமை வாய்ந்த கதை இந்திய எழுத்தாளனின் பேனாவிலிருந்து இன்றுவரை உருவாகியுள்ளதாக நான் கேள்விப்படவில்லை!'' — ஆத்மாராம்.

''செய்தித் தாள்களில் இப்போதெல்லாம் எத்தனையோ குற்றச் செயல்கள் நிகழ்வதாகச் செய்திகள் வருகின்றன. ஒருவன் தன் மனைவியைத் துண்டு துண்டாக்கி 'ஃபிரிஜ்'ஜில் வைத்து விட்டான். அன்றாடம் ஒவ்வொரு துண்டாகக் குப்பைத் தொட்டியில் போட்டு வந்தான், யாருக்கும் சந்தேகமே தட்டக் கூடாது என்பதற்காக. இக்கதை, அல்ல; செய்தி, பத்திரிகைகளில் பிரகரமாகியிருந்தது. இதில் முன்கூட்டித் திட்டம் தீட்டிச் செயல் புரியப்பட்டிருக்கிறது என்பது உறுதி. ஆனால் இதைக் கதையாகத் தீட்டி வாசகர்களுக்குத் தரக்கூடும் என்று எந்த எழுத்தாளனுமே கருதவில்லை!'' — பிரகாஷ் மேஹ்ரா.

''ஆடேம்மா! நம் நாட்டில் ஆடுகள் கூடக் கண் மறைவாகத்தான் வெட்டப்படுகின்றன. மனிதர்களைப் பலர் அறிய எப்படி ஐயா கொல்ல முடியும்? அப்படிப்பட்ட கதைகள் தான் எப்படி எழுத முடியும்?'' என்று கேட்கிறார் நாஸிர் ஹுஸேன்.

''ஆங்கிலப் படங்கள் நிறைவான நாடகமாகத் தத்ரூபமாகக் கண்முன்னே தோன்றும் பொழுது அவற்றை நம் டைரக்டர்கள் இலகுவாய்ப் புரிந்து கொள்ளுகிறார்கள். அதில் உள்ள நயங்களையும் உத்திகளையும் மனத்தில் பதிய வைத்துக் கொள்கிறார்கள். ஓர் எழுத்தாளன் அதே போன்ற கதை ஒன்றை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தாலோ அல்லது சொன்னாலோ, டைரக்டர்களுக்கு, அதைப் படமாக்குவதற்கான ஆற்றல் இல்லை. எப்படிப் படமாக்கினால் எத்தகைய விளைவை எதிர்பார்க்கலாம் என்ற அனுமான சக்தியும் இல்லை. ஆதலால் காப்பி அடிப்பதே நலம் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள்!'' இப்படிக் கூறுபவர் ஐ. எஸ். ஜோஹர்.

''வெளிநாட்டுக் கதைகளையோ படங்களையோ காப்பி அடிக்கும்பொழுது ஏற்படும் முதல் சிரமம் பாத்திரங்களின் வெளிநாட்டுத் தன்மையைக் களைவதாகும். அடுத்தபடியாகச் சம்பவங்களையும் அப்படியே எடுத்துக்கொண்டு விட்டால், இந்திய மூளை அதைச் சிரணிக்க முடிவதில்லை என்பதாகும்.

'' 'டர்ட்டி ஹாரி'யின் ஆரம்பக் காட்சியை ஐரோப்பா அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள பெரிய நகரங்களில்தான் காணமுடியும். வானத்தை முத்தமிடும் கட்டிடம் ஒன்றின் மேற்தளத்தில் குளியல் குளம் கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பெண் குளித்துக் கொண்டிருக்கிறாள். யாராவது, தான் குளிப்பதைப் பார்ப்பார்களோ என்ற பயம் அவளுக்கு இல்லை. வெகு தொலைவில் சூன்யமாகக் கிடந்த வேறு ஒரு மேல்தளத்திலிருந்து கொலையாளி ஒருவன் டெலஸ்கோப் பொருத்தப்பட்ட துப்பாக்கியால் சுட்டு விடுகிறான். நம் நாட்டில் பல மாடிகள் கொண்ட உயரமான கட்டிடங்களோடுகூடிய நகரங்கள் நாலைந்தே இருக்கின்றன. மற்றச் சிறிய நகரங்களில் உள்ளவர்களுக்கு இவ்விவரத்தைச் சுலபமாக விளங்க வைக்க முடியாது. மேல் தளங்களை வெறிச்சோடியவையாகவும் குளிக்கும் குளங்கள் உள்ளவையாகவும் காட்டுவது



சிரமமான காரியம். அதோடு கொலையாளி தன் பெரிய திட்டத்தைப் பதற்றமின்றி நிறைவேற்றிவிட்டுச் சிறைப்படக் கூடிய பல கட்டங்களிலிருந்தும் தப்பி ஓடுவதும், தனது குற்றச் செயலுக்கு மிகச் சிறந்த விஞ்ஞானக் கருவிகளை உபயோகிப்பதும், — எல்லாமே முற்றிலும் வெளிநாட்டுச் சரக்காகத்தான் முடியும். அதை நம் நாட்டுச் சரக்காக்கும் முயற்சியில் நான் 'கூன், கூன்' படத்தில் தோல்வியே கண்டேன். ஆம், படத்தையே கொலை செய்து விட்டேன். கதையின் அடித்தளம் (Base) அனைத்துமே செயற்கையாக—அரை வேக்காடாக, நம்பத் தகாததாக இருந்து விட்டன.'' கூறுபவர் முகம்மது ஹுஸேன்.

''திரைப் படக் கலையே கடன் வாங்கிய கலைதானே? மேக்கப்புக்கான சிறு சிறு சாதனங்கள், காமிரா, பிலிம், லேபரேடரி, ரீக்கார்டிங் போன்ற எல்லாப் பொருள்களும் கடன் வாங்கிய பொருள்கள்தானே? அப்படி இருக்கும்பொழுது கதையும் கடன் வாங்கியதா யிருந்தால் என்ன?'' என்கிறார் விஜய் ஆனந்த். தொடர்ந்து அவர் கூறுகிறார்: ''சீன் கானேரியின் துப்பறியும் படம் ஒன்று: பெயர் சட்டென்று நினைவு வரவில்லை. அதில் முதற் காட்சியிலேயே கப்பல் ஒன்றில், சடலம் ஒன்றைச் சவப் பெட்டியில் சுற்றி வைத்திருக்கிறது. அந்தச் சவப் பெட்டியைக் கடலில் போட்டு விடுகிறார்கள். சவப் பெட்டி நீரில் பாதி மூழ்கும் பொழுதே இரண்டு நீர்மூழ்கி ஆட்கள் அதை எடுத்து வந்து இன்னொரு கப்பலில் சேர்க்கிறார்கள். சவத்தைச் சுற்றியிருந்த துணியைக் கிழித்துச் சடலத்தை வெளியே எடுக்கிறார்கள். அதில் இருந்தது சீன் கானேரி. அவன் மூக்கில் ஆக்ஸிஜன் ஸிலிண்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. அவன் உயிருடன் இருக்கிறான். ஆனால் முதல் கப்பலில் அவனுக்கு ஈமச்சடங்கே முடித்தாகி விடுகிறது. மக்கள் பார்வைக்கு மரித்தவனாகக் காட்டப்பெற்ற அவன் இப்பொழுது வெகு சுலபமாகத் துப்புத் துலக்கும் பணியில் ஈடுபட முடியும். இந்த நிகழ்ச்சியை இந்திய மூளை இத்தனை சிறப்பாகக் கற்பனை செய்ய முடியாது. நான் எத்தனையோ முறை அதைப் படமாக்க வேண்டும் என்று நினைத்ததுண்டு. ஆனால் இதுவரையில் முடியவில்லை. அதில் கொஞ்சம் வெட்டிக் கூட்டுவதென்றால், அது ஒரேயடியாக 'வழவழா'வாகி விடும்.''

''ஒரு காப்பியடிக்கப்பட்ட நிகழ்ச்சி: இரும்புச் சிறை ஒன்றில் ஹீரோ சிறைப் பட்டிருக்கிறான். வெளியே காவலாளியின் பையில் சாவி இருக்கிறது. ஹீரோ காந்த சக்தியை உபயோகித்து அவன் பையிலிருந்து சாவியை நழுவச் செய்கிறான். அந்தக் காந்தத்தின் உதவி கொண்டே சிறிது சிறிதாக நகர்த்திச் சாவியைப் பூட்டுக்கு அருகில் கொண்டு வருகிறான். சாவி பூட்டுத் துவாரத்தை நெருங்கி அதில் பொருந்திக் கொள்ளுகிறது. காந்தக் கருவியின் சுழற்சிக்கு ஏற்ப அதுவும் சுற்றுகிறது. பூட்டு திறந்து கொள்ளுகிறது. இடையில் எத்தனையோ தடவை சாவி கீழே விழுந்து பொறுமையைச் சோதித்ததுண்டு. ரசிகர்கள் 'காரியம் கெட்டுவிட்டது. இனிப் பூட்டைத் திறக்க முடியாது' என்றே எண்ணும்படி செய்துவிடுகிறது. ஆனால் அவன் பூட்டைத் திறந்ததும் அவன் அறிவு போற்றப்படுகிறது. என்ன இருந்தாலும் அவன் ஹீரோ இல்லையா? தனது ஒவ்வொரு கஷ்டத்தையும் தாண்டி வெற்றி காண்கிறான். இந்தக் காட்சி முழுவதும் ஒரு படத்தில் வெகு நுணுக்கமாகவும் விஸ்தாரமாகவும் படம் பிடிக்கப்பட்டது. மக்கள் மகிழ்ந்து போனார்கள். ஆனால் வேறு ஒரு படத்தில் இதே காட்சியை அமைத்தார்கள். ஆனால் அதைப் படமாக்கியமுறை மட்டமாக அமைந்து விட்டது. ரசிகர்கள் மகிழவில்லை. ''என்னடா இவன் இப்படிக் கழுத்தை அறுத்து நேரத்தைப் பாழ் அடிக்கிறான்!'' என்று சீட்டி அடித்து மட்டந் தட்டி விட்டனர்!'' சொன்னவர் பிரமோத் சக்கரவர்த்தி.

சாந்தாராம் போன்ற டைரக்டரே, 'அப்னா தேஷ்' படத்தைத் துப்பறிவு முறையில்தான் எடுத்தார். சத்யஜித் ராய்கூடத் தம்மை இவ்வாசையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவில்லை. உத்தம் குமாரைக் கதாநாயகனாகப் போட்டு எடுத்த 'அரண்யேர் தின் ராத்' என்னும் படத்தில் தம் திறமையைத் தாமே பரிசோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். புதுத் தலைமுறையில் புகழ் சூடி நிற்கும் டைரக்டர் வாசு சட்டர்ஜி கூடத் துப்பறியும் படம் எடுக்க யோசித்துக் கொண்டிருக்கிறார். இத்தகைய படங்கள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக வெற்றிக்கு மேல் வெற்றிகண்டு வருவதில் சாதனை புரிவது போல் இனியும் புரியுமானால் வெளிநாட்டுப் படங்களைத் திருடித் துப்பறியும் குற்றத் துறைப் படங்கள் எடுக்க ஒரு டைரக்டர் கூடத் தவற மாட்டார் என்று நிச்சயமாக நம்பலாம்.

தமிழாக்கம்: ரா. வீ.

What do seven different tyre companies have in common?

M		F		G		
A		I		O	P	
N	**I**	**R**	**C**	**O**	**R**	**D**
S	N	E	E	D	E	U
F	C	S	A	Y	M	N
I	H	T	T	E	I	L
E	E	O		A	E	O
L	K	N		R	R	P
D		E				

That's it. Nircord - India's first nylon tyre cord.
Nircord is the super-strengthener for all
better-grade tyres made in India today.


nircord®

® Regd. Trade Mark

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.

Nirlon House, 254-B, Dr. Annie Besant Road, Bombay-400 025.

Interpub/NIR-C/46A/74


வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்*
*
Incremin
syrup
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
வளரும் பருவம்!
SISTA'S-INC-4A TM
இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்

முன்கதைச் சுருக்கம்

நளினி, சம்பத் இருவரும் வழக்கறிஞர்கள். நளினி யின் தந்தை கஜேந்திரா மில் உரிமையாளர்; மிகப் பெரிய பணக்காரர். சம்பத் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன்; வறுமையில் வாடியவன். எப்படியோ சட்டம் படித்துத் தேறினான்; சட்டத் தொழிலில் வாரி வாரிப் பணத்தை அள்ளலாம் என்று மனக் கோட்டையுடன் ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனிய ராகச் சேர்ந்தான். நளினியும் பிரபல கிரிமினல் வக்கீல் ஆவுடையப்ப பிள்ளையிடம்தான் ஜூனியராகச் சேர்ந்து பணியாற்றி வந்தாள். சம்பத் முதலில் அவளிடம் அதிகம் அக்கறை காட்டவில்லை; அவன் அக்கறை காட்டும் அளவுக்கு அவளிடம் அபரிமித மான அழகோ, கவர்ச்சியோ இல்லை. ஆனால், சில நாட்களில் சம்பத் நளினியிடம் அக்கறை காட்டத் தொடங்கினான். அதற்கு அவளது பணம் மிகவும் தூண்டியது. சம்பத் கவர்ச்சியுள்ள ஆணழகன்; அவனை எவரும் இலகுவில் காதலித்து விடுவாள்.

ஆனால் நளினி அவனை நண்பனாகக் கொண்டு மகிழ விரும்பினாளேயன்றி காதல் அவள் உள்ளத் தில் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. அவள் சகோதரியின் அனுபவம் அதற்குக் காரணமா யிருக்கலாம்.

நளினி நீதிமன்றத்துக்கு வருவது வெறும் பொழுதுபோக்குத்தான். ஆனால் சம்பத்துக்கு இது வாழ்க்கைப் பிரச்னை.

வக்கீல் கருணாகரன், பாட்டாளி இளைத்தைக் கையில் போட்டுக் கொண்டு புரட்சிக் கட்சியில் சேர்ந்து தொழிலை வளர்த்துக் கொண்டார். பல நில்லுமுல்லுகளையும் வளர்த்தார்.

நீதிபதி நாககந்தரத்தின் மனைவி நிரூபேவ் என்ற மேல் பூச்சில் ரசக் குறைவான கதைகளை எழுதிப் பிரபலமடைந்தவள். அவரை இரண்டாந் தாரமாக மணந்தவள்.

கருணாகரன் நடத்தும் ஒரு சுவையான வழக்கு நீதிமன்றத்தில் நீதிபதி நாககந்தரத்திடம் வரு கிறது. அதிலிருந்து கதையில் பல சுவைகளும் வளர்கின்றன.

11. புகழ்ச்சிப் போதை!

பேசிவிட்டுப் போனைக் கோபத்தோடு கீழே வைத்த கோமளம், சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் போன் பக்கத்திலேயே நின்றாள். மாடியில் விருந்தினர்களின் பேச்சும் சிரிப்பும் கேட்டுக் கொண்டிருந்தன. எதிரே சுவரி லிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். உருவம் மங்கலாகத் தெரிந் தது. உற்றுப் பார்த்தாள். தன்னுடைய கண்களில் கண்ணீர் முட்டி நிற்பதை உணர்ந்து பரபரப்புடன் கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துவிட்டு மீண்டும் கண் ணாடியைப் பார்த்தபோது, உருவம் தெளி வாகத் தெரிந்தது.

''என்ன, ஜட்ஜ் வருகிறாரா ?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். பின்னால் மாடிப் படியிலிருந்து 'நவரசம்' பத் திரிகையின் ஆசிரியர் சந்தானம் இறங்கிக் கொண்டிருந்தார். கோமளம் ஒரு கணம் திகைத்தாள். பதில் கூற முடியாமல் தவித் தாள். படியிலிருந்து இறங்கி வந்த சந் தானம் அவளுக்குப் பக்கத்தில் வந்ததும், ''ஜட்ஜ் புறப்பட்டு விட்டாரா ?'' என்று கேட்டார்.

கோமளம் சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டு, ''இன்றைக்குப் புதுக் கேஸ் ஆரம்ப மாகிவிட்டதாம். வர நேரமாகலாமாம். முடித்தால் வந்துவிடுகிறேன் என்றார்'' என்றாள்.

''அவர் வரும் வரை காத்திருப்போமா ?''

''வேண்டாம். விருந்தை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டார்'' என்று கூறி மீண்டும் சிரித்தாள். சிரிப்பில் உயிர் இல்லை. கண் ணாடியில் முகத்தைப் பார்த்தாள். மலர்ச்சி இல்லை என்பதை உணர்ந்துகொண்டாள். மலர்ந்திருப்பது போல் பாவனை பண்ணிக் கொள்ள வேண்டும் என்று முயன்றாள்.

'' வாருங்கள், விருந்தை ஆரம்பித்துவிட லாம்'' என்று சிரித்தபடி கூறிக் கொண்டே மாடிப் படியை நோக்கி நடந்தாள்.

''உங்களுக்கு மனசு சரியில்லை'' என்றார் சந்தானம்.

கோமளம், கேள்வியைப் பார்வையில் தேக்கி அவரைத் திரும்பிப் பார்த்தாள்.

''அவரும்கூட இருந்தால் எவ்வளவு சந் தோஷமாயிருக்கும். உங்களுக்கும் உற்சாகமா யிருக்கும்'' என்றார் சந்தானம்.

''பரவாயில்லை. அவருக்கு வேலை.''

'' என்ன வேலை? நினைத்தால் வந்துவிட லாம். வேலை செய்வதும் செய்யாததும்

திருடர்கள்



ஜட்ஜினுடைய விருப்பம் தான். அவரை யார் கேட்க முடியும்?'' என்றார்.

கோமளம் நீண்ட பெரு மூச்சு விட்டாள். அவளைத் தொடர்ந்து மாடிப் படிகளில் ஏறினார் சந்தா னம். அவளுடைய பின்னழகையும் பின்னல் அழகையும் ஒருவித வெறியோடு ரசித்த வாறே படி ஏறிக் கொண்டிருந்தார்.

''கொஞ்ச நேரம் பொறுத்திருந்து பார்ப் போமா ?'' என்று கேட்டார்.

''வேண்டாம். ஆரம்பித்துவிடலாம்'' என்று கோமளம் கூறிய போது, அவளுடைய குரலில் தொனித்த கோபத்தையும், அலட்சி யத்தையும் உணர்ந்து கொண்டார்.

மாடியிலிருந்த பெரிய அறைக்குள் கோமளம் நுழைந்தபோது, விருந்தினர்களின் கண்கள் ஆர்வத்தோடு அவளை நோக்கின. ஆண்களும் பெண்களுமாக இருபது பேர்கள்

அந்த அறையில் கூடியிருந்தனர். பெண்களின் பேச்சும் சிரிப்பும்தாம் அந்த அறையை நிரப்பி யிருந்தன.

''புறப்பட்டுவிட்டாரா ?'' என்று கேட்டார் கலெக்டர்.

''புதுக் கேஸ் ஆரம்பமாகி யிருக்கிறதாம். வர நேரம் ஆகலாம்'' என்றாள் கோமளம். உதட்டில் புன்னகையை இழைய விட்டாள்.

''ஓ...! இன்றைக்கு அந்தப் பரபரப்பான கேஸ் ஆரம்பமாகிறது. நேற்றே பேப்பரில் பார்த்தேன்'' என்றார் கலெக்டர்.

''தியாகி ரகுபதி நாயுடுவின் மகன் மேல் உள்ள கேஸ்தானே ? மத்தியானமும் தொடர்ந்து நடக்கும்'' என்றார் போலீஸ் சூப்பிரண்டெண்ட். கோமளம் அவரையும் பார்த்து ஒரு சிரிப்பைச் சிந்தினாள். ''விருந்தை ஆரம்பித்துவிடலாம்'' என்றாள்.

''ஜட்ஜ் இல்லாதது என்னவோ போல் இருக்கிறது'' என்றார் கலெக்டர்.

''அவருடைய வீட்டு விருந்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது நமக்கெல்லாம் ஏமாற்றம்தான்'' என்று குறுக்கிட்டுக் கூறினார் சந்தானம்.

''அவர் இருந்தால் இந்த விருந்து இன்னும் சோபிக்கும்'' என்றாள் கலெக்டரின் மனைவி கனகா, தன் புருவத்தை நெரித்தபடி.

''எல்லாரையும்விட மிஸஸ் ஜட்ஜுக்குத்தான் பெருத்த ஏமாற்றம்'' என்றார் கலெக்டர்.

கோமளத்தின் முகத்தில் நாணம் படர்ந்தது. ''எல்லாரும் உட்காரலாமே. விருந்தை ஆரம்பித்து விடலாம்'' என்றாள்.

விருந்துக்காகப் போடப்பட்டிருந்த மேஜையின் முன்னால் எல்லாரும் உட்காரத் தொடங்கினார்கள்.

''பெண்கள் இந்தப் பக்கம்'' என்று எதிர் வரிசையைச் சுட்டிக்காட்டிச் சிரித்தார், போலீஸ் அதிகாரி.

''ஓ....! இன்னும் இந்த வர்க்கப் பிரிவினை போகவில்லையா? நாங்கள் எங்கள் விருப்பம் போல்தான் உட்காருவோம்'' என்றாள் கனகா. அவள் பேசிய போது, சாயம் தீட்டப்பட்டிருந்த உதடுகள், நெளிந்தன. புருவங்களை ''ட்ரிம்'' செய்து ஐ புரோ பென்சிலால் புருவங்களை நீட்டி வளைந்து வரைந்திருந்தாள். அழகு என்று நினைத்துக் கொண்டு அவள் செய்திருந்த ஒப்பனை, நாடகத்துக்கு வேஷம் போட்டது போல் இருந்தது. அவளுடைய புருவங்களைப் போலீஸ் அதிகாரி உறுத்துப் பார்த்ததை உணர்ந்ததும் அவள், முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். போலீஸ் அதிகாரி, ''இது பெண்களின் விடுதலை யுகம். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் உட்காரலாம்'' என்றதும் பெரிய நகைச்சுவையைக் கேட்டுவிட்டதைப் போல் பலர், 'ஆஹா ஓஹோ' என்று பலமாகச் சிரித்தார்கள்.

''நான் இங்கேதான் உட்காரப் போகிறேன்'' என்று கூறிக் கொண்டே சந்தானத்துக்கு அடுத்திருந்த நாற்காலியை நெருங்கினாள் கனகா. சந்தானத்துக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. பரிதாபமாக விழித்தார். அசட்டுச் சிரிப்பு உதடுகளில் மறைந்து கொண்டிருந்தது.

''உங்களுக்கென்ன, பயமா?'' என்று கேட்டாள் கனகா.

''நோ நோ'' என்று கூறிக் கொண்டே அவளுக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தார் சந்தானம். இதற்கும் பல பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

''நான் எங்கே உட்கார வேண்டும் ?'' என்று கேட்டார் கலெக்டர்.

''மேஜை மீது'' என்று வெடுக்கென்று பதில் சொன்னாள் போலீஸ் அதிகாரியின் மனைவி. அறைக்குள் திடீரென்று பேரிரைச்சலுடன் சிரிப்பொலி எழுந்தது. சந்தானம் இருப்புக் கொள்ளாமல் தவித்தார். தம்முடைய பார்வையிலிருந்து கோமளம் தள்ளிப் போய்விடுவாளோ என்று பரிதவித்தார். அவருக்கு எதிரே அவள் அமர்ந்த பிறகுதான் அவர் நிம்மதி அடைந்தார்.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பெண்கள் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் உற்சாகமாயிருந்தனர். ஆண்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. பெண்களின் பேச்சைக் கேட்பதிலும், அலங்காரங்களை ரசிப்பதிலும், கள்ளத்தனமாகப் பார்த்துக் கொள்வதிலும் ஈடுபட்டிருந்தனர். எதிர் எதிராக அமர்ந்திருந்ததினால், பலருடைய பார்வைகள், பலருடைய பார்வைகளோடு பல முறை மோதி மோதிச் சிதறிக் கொண்டிருந்தன. சில சிதறல்களில் மின்சார அதிர்ச்சியிருந்தது. சிலவற்றில், இதமான வருடல் இருந்தது. சிலவற்றில் உடல் முழுவதும் சிலிர்த்து நடுங்குவதுபோன்ற குளிர்ச்சி இருந்தது. சிலவற்றில் எதிர்ப்பு இருந்தது. சிலவற்றில், எவ்வித உணர்வும் இன்றிப் பிரேதக் களை தட்டியது.

கோமளம், உற்சாகமாயில்லை. தன்னுடைய கணவர் இந்தச் சமயத்தில் வராமல் இருந்துவிட்டாரே என்னும் ஏமாற்றம்தான் அவளை அரித்துக் கொண்டிருந்தது. அவளுக்கு எதிரே இருந்த சந்தானம், உற்சாகமாக இருந்தார். அடிக்கடி அவளோடு பேசி, அவளையும் உற்சாகமூட்ட முயன்று கொண்டிருந்தார். விருந்து ஆரம்பமாகிச் சற்று நேரத்தில் கோமளம் கலகலப்பாகப் பேசத் தொடங்கிவிட்டாள். அவளுடைய உற்சாகம், சந்தானத்துக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டியது. ''விருந்து பிரமாதம்'' என்றாள் கோமளத்தின் சிநேகிதிகளில் ஒருத்தி.

''இந்த விருந்துக்குக் காரணம் ஆசிரியர் தான்'' என்று சந்தானத்தைச் சுட்டிக்காட்டினாள் கோமளம்.

''நான் என்ன காரணம்? நீங்கள் பிரியப்பட்டீர்கள்; விருந்து வைத்திருக்கிறீர்கள்'' என்றார் சந்தானம்.

''புத்தக வெளியீட்டு விழாவுக்கு நீங்கள் தானே காரணம்?''

''அதற்கும் நான் காரணம் இல்லை. உங்களுடைய எழுத்துத் திறமைதான் காரணம்'' என்றார் சந்தானம், உற்சாகத்துடன். கோமளத்தின் முகம் மலர்ந்தது. அவருடைய பார்வை, அவளைச் சுற்றி வளைத்தது.

இதைக் கேட்டுப் பலர் ஆரவாரம் செய்தார்கள்.

ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த கூடைக் கொண்டைக்காரி ஒருத்தி, பக்கத்தில் பிரிமணைக் கொண்டை போட்டுக் கொண்டிருந்த சிநேகிதியைப் பார்த்துக் கண் சிமிட்டினாள். ''ஆசிரியர் ஐஸ் வைக்கிறார்'' என்றாள்.

''அவர் பார்ப்பதைப் பாரேன்'' என்று இரகசியம் பேசினாள், பிரிமணைக் கொண்டைக்காரி. இருவருடைய பார்வையும், கோமளத்தையும் சந்தானத்தையும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கின.

''ஆசிரியர் சரியாகச் சொல்லிவிட்டார்'' என்றார் போலீஸ் அதிகாரி.

''நான் நன்றாக எழுதவும் நீங்கள்தான் காரணம்'' என்றாள் கோமளம். நன்றிப் பெருக்குடன் சந்தானத்தைப் பார்த்தாள்.

''ஓ.....! நீங்கள் என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்'' என்று கூறிய சந்தானம் மேஜைக்குக் கீழே அவளுடைய காலை மெதுவாகத் தம்முடைய காலால் யதேச்சையாகப் படுவது போல் தீண்டினார். அதை முதலில் உணராத கோமளம், பேச்சில் லயித்திருந்தாள். காலை அவள் நகர்த்திக் கொள்ளாததை அறிந்து சந்தானம் சற்றுத் தைரியம் அடைந்தார்.

''உங்கள் பத்திரிகை மூலமாகத்தானே இவர்களுக்குப் புகழ் கிட்டியது?'' என்றார் கலெக்டர்.

''இவர்களுடைய புகழுக்கு எழுத்துத் திறமைதான் காரணம்'' என்றார் சந்தானம்.

கோமளம் பெருமையால் பூரித்துப் போனாள். சந்தானம் தம்முடைய காலினால் அவளுடைய ஸ்பரிசத்தைத் திருடிக் கொண்டிருந்தார். திருடு போய்க் கொண்டிருந்ததை உணர முடியாத அளவுக்குச் சந்தானத்தின் புகழ்ச்சி அவளை ஆட்கொண்டிருந்தது. ''ஒரு வகையில் சொல்லப்போனால், இவர்களுடைய எழுத்து என்னுடைய பத்திரிகைக்குப் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்'' என்றார் சந்தானம். மிகுந்த குளிர்ச்சியான மலர்கள், தலையில் கொட்டப்படுவது போலவும் அதன் குளுமையிலும் மணத்திலும் மயங்குவது போலவும் ஆனாள் கோமளம். சில விநாடிகள் அவளுடைய பார்வை, மிக்க நன்றியோடு சந்தானத்தின் பார்வையோடு கலந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பார்வையிலேயே அவளுடைய முகம் முழுவதையும் வளைத்து வருடினார். கோமளத்தின் முகத்தில் நாணத்தின் சாயலும், பெருமையின் பூரிப்பும் போட்டியிட்டன.



“மொரமொரப்பாகவும் அதிமெல்லியதாகவும் வடாம் தயாரிக்கும் இரகசியம்,

பிரவுன் & போல்ஸன்

கார்ன்ஃப்ளவர்”



என்கிறார் திருமதி லட்சுமி சர்மா, ‘ஸோரெண்டோ’,
மவுண்ட் ப்ளஸண்ட் ரோடு, பம்பாய்-6.



பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர் சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும், மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. (இரண்டு கோப்பை சாதா மாவுக்கு 1 டேபிள் ஸ்பூன் அளவு போதுமானது.) குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவும். பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர் இளங் குழந்தைகள், நோயாளிகள் ஆகியோருக்குத் தெம்பு தரவும் ஆரோக்கியமூட்டவும் சிறந்தது. அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தப் பட்டதால் கார்ன்ஃப்ளவர்களில் மிகவும் சிறந்தது, பிரவுன் & போல்ஸன். அட்டைப் பெட்டிகளிலும் கிடைக்கிறது.

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு - பெற்ற
பக்குவ முறை

வடாம்

தயாரிக்க உதவுவது
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்



பக்குவ முறை :

1 கோப்பை பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர்
6 கோப்பை தண்ணீர்
1 முதல் 1½ கோப்பை மோர்
4-5 பச்சைமிளகாய்
சிறிது பெருங்காயம்
1 மேசைக் கரண்டி (தலைதட்டிய அளவு) உப்பு (அல்லது சுவைக்கு ஏற்ற அளவு.)

1 தண்ணீரைக் கொதிக்க விடவும். அடுப்பின் சூட்டைக் குறைக்கவும். பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவரை மோருடன் கலக்கவும். தண்ணீர் சேர்க்கவும். நன்கு கிளறவும். அத்துடன் உப்பு, பெருங்காயம் மற்றும் அரைத்த மிளகாயைக் கூட்டவும். சில நிமிடங்கள் கொதிக்க விடவும். பின்னர் கலவையைக் குளிர விடவும்.


2 பிறகு சுத்தமான போலிதீன் தாளை வெய்யிலில் பரப்பவும். அதன் மீது ஒரு மேசைக்கரண்டியளவு கலவையிலிருந்து எடுத்து ஊற்றவும். இவ்வாறே ஒவ்வொரு மேசைக்கரண்டியாக கலவை முழுவதையும் தாளின் மீது இடைவெளி விட்டு ஊற்றவும். மாலை வரையில் வெய்யிலில் காயட்டும். மறு நாள் காலை தாளிலிருந்து வடாம் பிரித்து எடுத்து, பெரிய தட்டில் புரட்டிப் போடவும். முற்றிலும் காயும் வரையில் இரண்டொரு நாட்களுக்கு வெய்யிலில் நன்கு உலர விடவும்.

3 காற்றுப்புகா டப்பாவில் வடாம் எடுத்து வைக்கவும். தேவைப்படி எண்ணெயில் பொரிக்கவும். வாணலியில் எண்ணெயை விட்டு சூடாக்கி, வடாம் பொரிக்கவும். பழுப்பாக மாறும் முன்பு வடாம் பொரித்து எடுக்கவும்.

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க்,
பம்பாய் - 400 001.

OBM-0621R TM



''பாருடி.... பாருடி....'' என்று இரகசியமாகக் கூறியபடியே பிரிமணைக் கொண்டைக்காரி, மற்றவளைத் தொடையில் இடித்தாள்.

''பார்வையைப் பார்த்தாயா? நான் முன்பே சொன்னேனே, நீ நம்பமாட்டேன் என்றாய்!'' என்று கெக்கலித்தாள் கூடைக் கொண்டைக்காரி.

''கண்களாலேயே அவளைத் தின்றுவிடுவார் போல் இருக்கிறதே!''

''ஜட்ஜுக்குப் பல் இல்லை, தின்பதற்கு. இவர் தின்னட்டுமே!''

இப்படிச் சொன்னவளின் தொடையில் குறும்பாகக் கிள்ளினாள் மற்றவள்.

''நீங்கள் இப்போது என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்'' என்றாள் கோமளம்.

''இது அதிகமே இல்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். உங்களுடைய கதை வெளிவரும்போதெல்லாம் நவரசம், ஐயாயிரம் பிரதிகள் அதிகமாக விற்பனை ஆகிறது'' என்று துணிந்து ஒரு பொய்யைச் சந்தானம் சொன்னதும் கோமளம், தன்னையே மறந்துவிட்டாள்.

புகழ்ச்சியிலும், விருந்தினர்களின் ஆரவாரத்திலும் மெய்சிலிர்த்தாள். தனக்குக் கிடைத்திருக்கும் இத்தனை புகழுக்கும், விளம்பரத்துக்கும் சந்தானம்தான் காரணம் என்னும் நன்றிப் பெருக்கில் மிகுந்த ஆர்வத்தோடு அவரைப் பார்த்தாள்.

சந்தானத்தின் பாதம், சற்றுப் பலமாக அழுத்தி வருடவே, திடுக்கிட்டுக் காலை இழுத்துக் கொண்டு கீழே குனிந்து பார்த்தாள். சந்தானத்தின் பாதங்கள் அவள் பாதங்களை விட்டு விலகி, ஏதும் அறியாத அப்பாவிபோல் ஆடாமல் அசையாமல் இருந்தன. தலை நிமிர்ந்த கோமளத்தைப் பார்த்து, ''ஸாரி'' என்று மிக மெதுவாக உதட்டளவில் முனகினார். அதைப் புரிந்து கொண்ட கோமளம், பார்வையாலேயே, ''பரவாயில்லை'' என்று மரியாதைக்காகச் சொல்லிக் கொண்டாள்.

ஓரக் கண்ணால் மீண்டும் ஒரு முறை அவளைக் கவனித்தார். அவளுடைய முகத்தில் வெறுப்போ, கோபமோ, எரிச்சலோ இல்லாததைக் கண்டதும், தம்முடைய திருட்டுத்தனத்தை அவள் தெரிந்து கொள்ளவில்லை என்பதை அறிந்து நிம்மதி அடைந்தார்.

அப்போது கீழே கார் வந்து நின்ற சத்தமும், அதைத்தொடர்ந்து கார்க் கதவு திறந்து அடைக்கப்பட்ட சத்தமும் கேட்டன. கோமளத்தின் முகத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே தோன்றின. ''வந்துவிட்டார் போல் இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே பரபரப்புடன் எழுந்தாள்.

''ஜட்ஜ் வந்துவிட்டாரா....? ரொம்ப சந்தோஷம்'' என்று கூறியபடியே கலெக்டர் எழுந்தார். அவர் எழுந்ததைக் கண்டதும், போலீஸ் அதிகாரியும் எழுந்தார்.

'' நீங்கள் இருங்கள். நான் போய் அழைத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு உற்சாகத்துடன் துள்ளி ஓடினாள் கோமளம். சந்தானத்துக்கு மட்டும் சற்று ஏமாற்றமாக இருந்தது.

(தொடரும்

ஆச்சரியமான சேமிப்புக்கு பிஜ்



நுரை கொழிக்கும், சட்டெனத் துலக்கும், கறைகள் போக்கும் பிஜ், ஒரு தனிச் சிறப்புள்ள, பல-பயன்கொண்ட துலக்கும் பவுடர். சேமிப்புக்கு சேமிப்பு; கூடவே, சமையலறைப் பாத்திரங்கள், கண்ணாடிப் பாண்டங்கள், தரை மற்றும் குளியலறைக்குக் கண்ணைப் பறிக்கும் பளபளப்பு!

பிஜ் கோத்ரெஜ் தயாரிப்பு

CMGS-60-182 TM



இரவுக்கு ஆயிரம் கண்கள்

ஆர். எஸ். மணி

டாக்டர் ராமா ராவின் இடது கரம் அவருடைய முகத்திலிருந்த மூக்குக் கண்ணாடியைக் கழற்றியது. வலது கரம் மேஜையின் மீதிருந்த 'ரிப்போர்ட்டை' இன்ஸ்பெக்டரின் முன்னால் நகர்த்தியது. இன்ஸ்பெக்டர் அதைப் படிக்க ஆரம்பித்தார்.

மூன்று நாட்களுக்கு முன்பு — 'பயங்கரக் கொலை' என்ற தலைப்பின் கீழ் 'பிரபல வியாபாரியான நந்தகோபால் என்பவர் அவருடைய வீட்டிலேயே கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்' என்று வெளிவந்திருந்த செய்தி பொதுமக்களிடம் மிகுந்த பரபரப்பை உண்டாக்கி யிருந்தது.

நந்தகோபால் கொலை சம்பந்தமாகப் பல பேர்களை விசாரித்தார் இன்ஸ்பெக்டர். கடைசியில் ரகுநாதன் என்ற ஒரு பணக்காரனைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்தார். ரகுநாதன் மீது சந்தேகப்படத்தான் முடிந்ததே தவிரக் குற்றத்தைச் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் ருசுப்படுத்த முடியவில்லை.

அதனால்தான் இன்ஸ்பெக்டர் டாக்டரின் ரிப்போர்ட்டை ஊடுருவிப் படிக்க ஆரம்பித்தார்.

''இந்தக் கொலை நீங்கள் பிரேதப்பரிசோதனை செய்த நேரத்திலிருந்து சுமார் எட்டு மணி நேரத்துக்கு முன்பு—அதாவது நள்ளிரவு நேரத்தில் நடந்திருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறீர்கள். அதே நள்ளிரவு நேரத்தில் ரகுநாதன் தன்னுடைய வீட்டில் இல்லை. இந்தக் கொலை நடப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பு ரகுநாதன் நந்த கோபாலைப் பழி வாங்கத் துடித்திருக்கிறான். அவன் பழக்கமாக உபயோகிக்கும் கைத்தடியில் உள்ள கத்தியினால் நந்தகோபாலைக் குத்திக் கொலை செய்திருக்கிறான். கத்தியைத் துடைத்த ரத்தக் கறை படிந்த கைக்குட்டை, அவனுடைய கைரேகைகள் முதலியன நந்த கோபாலின் அறையில் இருந்திருக்கின்றன. இவ்வளவு இருந்தும் ரகுநாதன் நிரபராதி என்று எப்படிக் கூறுகிறீர்கள்?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''குற்றவாளி திடீரென்று தாக்கியிருக்கிறான் என்று எழுதியிருக்கிறேனே, இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''— டாக்டர் ராமாராவ் இன்ஸ்பெக்டரை மடக்கினார். போலீஸ் இன்ஸ்பெக்டர் மௌனமாக இருந்தார்.

''குற்றவாளி அவனிடம் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திடீரென்று அவனைக் கொன்றிருக்கிறான்'' என்று டாக்டர் தம் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்.

''அதாவது நந்தகோபாலின், நண்பனோ அல்லது நண்பனைப் போல் நடித்தவனோ, இதைச் செய்திருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள்!''

''இதில் என்ன சந்தேகம்? விரோதியாக இருந்தால் அவனை அந்த நேரத்தில் தன் வீட்டில் அனுமதித்திருப்பானா?''

''அப்படியானால் ரகுநாதன் நந்தகோபாலின் நண்பனா? அல்லது நண்பனைப் போல் நடித்தவனா?''

டாக்டர் திடுக்கிட்டார். இந்தக் கேள்வியை அவர் விரும்பவில்லை. இன்ஸ்பெக்டர் அவரைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்து



விட்டு ரிப்போர்ட்டைத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார்.

''நந்தகோபாலின் அறையிலிருந்த உட்புறக் கதவின் அருகில் தொங்கிய திரைக்குப் பின்னுல் ரகுநாதன் மறைந்து நின்றிருக்கிறுன் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதே, அதைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?'' என்று ஆரம்பித்தார் டாக்டர்.

''கொலைசெய்துவிட்டுத் திரைக்குப் பின்னுல் போய் மறைந்து நின்றிருக்கிறுன் அவ்வளவுதான்.''

''கொலை நடப்பதற்கு முன்பு ரகுநாதன் ஏன் அந்தத் திரைக்குப் பின்னுல் போய் நின்றிருக்கக் கூடாது?''

''காரணம்?''

''அந்த அறையில் திடீரென்று வேறு யாராவது வந்திருக்கலாம் அல்லவா?''

டாக்டரின் வாதம் இன்ஸ்பெக்டரின் உறுதியை அசைக்க ஆரம்பித்தது.

''அது போகட்டும் — ரகுநாதன் பிரமை பிடித்தவன் போலிருக்கிறுன். அதுவும் நந்தகோபால் கொலை செய்யப்பட்ட அந்த நள்ளிரவு நேரத்தில் இருந்துதான் இப்படி இருக்கிறுன்! அவன் வேண்டுமென்று அப்படி நடிப்பதாக நான் நினைக்கிறேன்.''

''இல்லை! சிலருக்கு அதிர்ச்சியினுல் இந்த நிலைமை ஏற்படக் கூடும்...''

''நந்தகோபாலைக் கொலை செய்த அதிர்ச்சியாக ஏன் இருக்கக் கூடாது?''

''நந்தகோபால் கொலை செய்யப்படுவதைக் கண்கூடாகப் பார்த்ததும் காரணமாக இருக்கலாமல்லவா?''

இன்ஸ்பெக்டரின் பிடிவாதம் தளர்ந்தது. ரகுநாதனிடமிருந்து வாக்குமூலம் வாங்கினுல் தான் உண்மை வெளிப்படும் என்பது புலனுயது. ஆனுல் அவனை எப்படிப் பேச வைப்பது?

இருவரும் கலந்து ஆலோசித்தார்கள். மனோவசியத்தின் மூலம் ரகுநாதனைக் கட்டுப்படுத்தி அவனைப் பேசவைக்கலாம் என்கிற முடிவுக்கு வந்தனர். தனக்குத் தெரிந்த மெஸ்மரிஸ்டு ஒருவரை அழைத்து வருவதாகக் கூறினுர் டாக்டர். இன்ஸ்பெக்டர் அதற்குச் சம்மதித்தார். அந்த வழக்கில் விரைவில் வெற்றி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அப்போது தான் அவருக்கு ஏற்பட்டது.

* * *

நந்தகோபால் கொலை வழக்கில் பலர் மீது சந்தேகம் ஏற்பட்ட போதிலும் ரகுநாதனைக் கைது செய்ய வேண்டிய காரணம் என்ன?

இது பற்றி அவசியம் தெரிந்துகொண்டு தான் ஆகவேண்டும். ரகுநாதன் பிரபல வர்த்தகப் பிரமுகர்களுள் ஒருவன். அவன் மனைவி தேவகி பேரழகி; அதுமட்டும் அல்ல; நல்ல குணவதி. அவளது குடும்பம் அவனுக்கு நன்முய்த் தெரிந்ததுதான். அவர்கள் ஒருவரை யொருவர் விரும்பித்தான் மணந்து கொண்டனர். தேவகி எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகுவாள்; கள்ளங் கபடில்லாமல் பேசுவாள். மிகவும் சுதந்திரமாக இருப்பவள் தேவகி. ரகுநாதன் அவளை நன்முகப் புரிந்து கொண்டிருந்தான். ஆகையால் அவனுக்கு அவளிடம் துளிக்கூடச் சந்தேகம் ஏற்பட்டதில்லை.

ஒரு நாள் — நந்தகோபாலிடமிருந்து அவனுக்கு ஒரு கவர் வந்தது. திகைப்போடு அதைப் பிரித்தான். கவரிலிருந்து வெளிப்பட்ட புகைப்படம் ஒன்று அவனைத் திடுக்கிடச் செய்து விட்டது. தன் மனைவி பக்கத்தில் வேறு ஒருவன்! தேவகி நாகரிக நங்கை என்றும் ஆண்களுடன் சரிசமமாகப் பழகியவள் என்றும் அவன் அறிவான். ஆனுல் இந்த அளவுக்கு?



தேவகி நடந்தவைகளைக் கூறினாள். ஒரு சமயம் அவள் நந்தகோபாலின் பேச்சில் மகிழ்ந்தது, பார்வையில் மயங்கியது; உண்மையானவன் என்று நம்பி அவனுடன் உல்லாசமாகச் சுற்றி அலைந்தது — எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டாள்.

'அன்று திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. கார் பழுதாகிவிட்டது. டாக்சி கிடைக்கவில்லை. வேறு வழியின்றி நந்தகோபால் வீட்டில் அடைக்கலம் புக வேண்டியிருந்தது. என்னை அவன் உள்ளே வரவேற்று உட்கார வைத்து உபசாரம் செய்தான். தானும் சுதந்திரமாக என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். அதை நான் அப்பொழுது விளையாட்டாக எண்ணினேன். பிறகுதான் தெரிந்தது. அந்தக் காட்சியை இரகசியமான முறையில் அவன் போட்டோ பிடித்திருக்கிறான் என்று! அவன் ஒரு நயவஞ்சகன் என்றும் என்னிடமிருந்து பணம் பறிக்கத்தான் பண்புள்ளவன் போல் நடந்துகொண்டிருந்தான் என்றும் பிறகுதான் உணர்ந்தேன். அந்தச் சம்பவத்தோடு அவனுடைய உறவைத் துண்டித்துக் கொண்டு விட்டேன். கல்யாணமாவதற்கு முன்பு நடந்தவை இவை. இந்தப் போட்டோவைக் காண்பித்து அடிக்கடி என்னிடமிருந்து பணம் பறித்து வந்தான் அந்தப் பாதகன்! ஆனால் கல்யாணமான பிறகு உங்கள் உயர்ந்த குணத்தை உணர்ந்தபிறகு நான் அவனை விரட்டியடித்து விட்டேன். அதன் விளைவுதான் இது.''

வியாபார விஷயமாகத் தன்னைப் பணமோசடி செய்த அவன் மீது ஏற்கனவே மிருந்த கோபம் கொண்டிருந்தான் ரகுநாதன். அவன் தன் மனைவியையும் ஏமாற்றிப் பணம் பறித்து வந்திருக்கிறானே என்று எண்ணிய போது அவன் உள்ளம் குமுறியது. ஆத்திரமும் ஆவேசமும் கொண்ட அவன் நந்தகோபாலுக்குச் சரியானபடி புத்தி புகட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வழக்கமாகக் கையில் எடுத்துச் செல்லும் கத்தி பொருத்தப்பட்ட கைத்தடியுடன் புறப்பட்டான். மறுநாள் காலை நந்தகோபால் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான்.

நந்தகோபாலைக் கொலை செய்தது ரகுநாதன்தான் என்பதற்குப் போதுமான காரணங்கள் இருந்தன.

“இவர்தான் மிஸ்டர் பிரான்ஸிஸ் — பெரிய மெஸ்மரிஸ்டு.''

தம் பக்கத்தில் நின்றிருந்தவரை இன்ஸ்பெக்டருக்கு அறிமுகப்படுத்தினார் டாக்டர். நல்ல உயரம்; உயரத்துக்கேற்ற கம்பீரமான பார்வை; சிறிய தாடி; நீல நிற ஷர்ட்டு. பார்ப்பதற்குப் பயங்கரமாகத்தான் இருந்தார். இன்ஸ்பெக்டர் அவரை வரவேற்றுத் தம் முன்னால் உட்கார வைத்தார். கொலையைப் பற்றிச் சுருக்கமாக அவரிடம் சொன்னார். கைது செய்யப்பட்டிருக்கும் ரகுநாதனின் நிலையைப் பற்றியும் விவரித்தார். பிரான்ஸிஸ் ரகுநாதனைப் பார்க்க விரும்பினார். இன்ஸ்பெக்டர் அவனை அழைத்து வருமாறு உத்தரவிட்டார்.

பிரான்ஸிஸ் இடத்தை விட்டு எழுந்தார். 'பைப்'பைப் பற்களில் கடித்துக்கொண்டு, நிஜார்ப் பைகளில் இரண்டு கைகளையும் திணித்துக் கொண்டு ஒருமுறை ரகுநாதனைச் சுற்றி வந்தார். அலட்சியமாக நின்றிருந்த ரகுநாதனுக்குப் பிரான்ஸிஸின் விழிகளைப் பார்த்தவுடன் ஒருவித அச்சம் ஏற்பட்டது.

ரகுநாதனைப் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது பிரான்ஸிஸுக்கு.

மெஸ்மரிஸ்ட் ரகுநாதனை உற்றுப் பார்த்தார்; ஊடுருவிப் பார்த்தார். உதடுகள் மட்டும் முணுமுணுத்தன. தாழ்ந்திருந்த வலது கரம் மெல்ல உயர்ந்தது. ரகுநாதனின் விழிகளுக்கு நேராக நீண்டது. விரல்கள் விரிந்து குவிந்தன. அடிமேல் அடி வைத்து ரகுநாதனை நோக்கி நடந்தார் அவர். நீண்டிருந்த அவருடைய வலது கரம் ரகுநாதனை நெருங்கிக் கொண்டிருந்தது. மெஸ்மெரிஸ சக்திக்கு ரகுநாதன் கட்டுப்பட்டுவிட்டான் என்பதை அவனுடைய முகக் குறியிலிருந்து உணர்ந்தார் பிரான்ஸிஸ்.

''எழுந்திரு''.

எழுந்திருந்தான்.

''நட...''

நடந்தான்.

''நில்.''

நின்றான்.

''சரியாக நில்.''

சரியாக நின்றான்.

''என்னையே பார்த்துக் கொண்டிரு.''

இமை கொட்டாது அவரையே பார்த்தான். பிரான்ஸிஸ் இடது கையை அசைத்து இன்ஸ்பெக்டருக்குச் சைகை செய்தார்.

அன்றிரவு நடந்த சம்பவங்களை நினைவுபடுத்தி அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர். அவருடைய கேள்விகளுக்குச் சரியானபடி பதில் சொல்லிக் கொண்டே வந்தான் ரகுநாதன்.

அந்த விசாரணையின் மூலம் வெளியான விவரம் இதுதான்:

நந்தகோபாலைப் பயமுறுத்தி அவனை எச்சரிக்கை செய்துவிட்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அன்றிரவு அவனுடைய வீட்டுக்குச் சென்றிருக்கிறான் ரகுநாதன். ஆனால் நந்தகோபாலின் அலட்சியப் போக்கும் கேலிச் சிரிப்பும் ரகுநாதனின் கோபத்தைக் கிளறிவிட்டிருக்கின்றன. தன் செயல்களுக்கு மன்னிப்புக் கேட்காவிட்டால் அவனைக் குத்திக் கொன்றுவிடுவதாகக் கூறிக் கைத்தடியில் பொருத்தப்பட்டிருந்த கத்தியைக் காட்டியிருக்கிறான். அப்பொழுது, வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டிருக்கிறது. தன்னை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று சற்றுத் தூரத்தில் இருந்த திரைக்குப் பின்னால் போய் மறைந்து கொண்டிருக்கிறான் ரகு. அங்கு வந்தவனுக்கும் நந்தகோபாலுக்கும் ஏதோ பங்கு சம்பந்தமாகத் தர்க்கம் ஏற்பட்டிருக்கிறது. வழக்கம்போல் நந்தகோபால் அவனை அலட்சியம் செய்திருக்கிறான். வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிறான். இதனால் வெகுண்டு எழுந்து மேஜையின் மீது கிடந்த கைத்தடியில் உள்ள கத்தியினால் அவனைக் குத்திக் கொன்றுவிட்டு வந்தவன் வெளியேறியிருக்கிறான்.



''சாம்பு சார்! அவர் பாடுகிறது என்ன ராகம்னு தெரியல்லே! கொஞ்சம் கண்டுபிடிக்கச் சொல்ல முடியுமா?''

துப்பறியும் சாம்பு: ''கொஞ்ச நேரம் துப்பறிவதை மறந்து நிம்மதியா கச்சேரி கேட்கலாம்னு, இங்கேயும் எதையாவது கண்டுபிடின்னு கழுத்தறுக்கறேளே!''

மிகுந்த பிரயாசையுடன் இந்த வாக்கு மூலத்தை வாங்கியபோதிலும் குற்றவாளி யாரென்று புரியவில்லையே?

''அங்கு வந்தது யார்?''

ரகுநாதன் பேச முடியாமல் தவித்தான்.

''நிதானமாகயோசித்துச்சொல்லுங்கள்.''

ஏதோ பேச வாயெடுத்தான் ரகுநாதன். ஆனால் வார்த்தைகள் வெளியே வரவில்லை.

''சொல்லுங்கள்; தைரியமாகச் சொல்லுங்கள்—''

''அவன் — அவன் — எனக்கு வேண்டியவன் மிகவும் வேண்டியவன்—''

''யாராக இருந்தாலும் பரவாயில்லை — தைரியமாகச் சொல்லுங்கள் — பிளீஸ்!''

''அவன்தான் சேகர்!... சேகர்...'' தலை கழல, உடல் தடுமாறத் தடாலென்று தரையில் சாய்ந்து விட்டான் ரகுநாதன்.

சேகர்! —

ரகுநாதனின் சகோதரியின் கணவன் சேகரா குற்றவாளி? நல்லவனைப் போல்— கௌரவமானவனைப் போல் இருக்கும் அவனா கொலைகாரன்? ரகுநாதனின் நெருங்கிய உறவினர்களை இன்ஸ்பெக்டர் விசாரித்த போது அந்தச் சேகர் எத்தனை தந்திரமாகப் பேசினான்? எத்தனை குறுக்குக் கேள்விகள் கேட்டு அவரையே மடக்கினான்? ஆனால் பாவம், அந்த இரவு வேளையில் இரண்டு கண்கள் தான் கொலை செய்ததைப் பார்த்துக்கொண்டிருந்தன என்பதை அவன் எவ்வாறு அறிவான்?

* * *

இன்ஸ்பெக்டர் பிடிவாரண்டுடன் வந்திருப்பதை அறிந்ததும் சேகர் சற்றும் கவலைப்படவில்லை. சரளமாக இன்ஸ்பெக்டரிடம் பேசினான் அவன்.


''இன்ஸ்பெக்டர் ஸார்! நந்தகோபாலைப் பழிவாங்க வேண்டும் என்ற என் லட்சியம் நிறைவேறி விட்டது. ஏன் நான் உங்களைக் கண்டு பயப்பட வேண்டும்? நீங்கள் கண்டிப்பாக ஒரு நாள் என்னைக் கைது செய்ய வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சார், நான் கொள்ளை அடித்தவன். — ஆச்சரியப்படாதீர்கள்! அந்தக் கொள்ளைதான் என்னை இப்போது கொலைகாரனாக்கியிருக்கிறது. பாங்கர் மதன்லால் வீட்டில் எட்டு வருஷங்களுக்கு முன்பு பெரிய கொள்ளை நடந்ததே நினைவு இருக்கிறதா உங்களுக்கு? நானும் நந்தகோபாலும்தான் அதைச் செய்தோம். அந்தக் கொள்ளையை வெற்றிகரமாக நடப்பதற்கான திட்டங்களை தீட்டி, பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து, எந்த விதமான தடையும் இல்லாமல், வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தவன் நான்.. ஆனால் முடிவு? நான் அகப்பட்டுக் கொண்டேன். அவன் தப்பி விட்டான். சிறையில் நான் மூன்று வருடங்கள் இருந்தேன். நந்தகோபாலைப் பற்றி மூச்சு விடவில்லை. ஏன்?— விடுதலை பெற்று வந்தபிறகு என் பங்கு எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையினால் தான் — ஆனால், நந்தகோபால் இருக்கும் இடம் தெரியவில்லை. என் வாழ்க்கைப் பாதையைத் திருத்தி அமைத்துக்கொள்ள இங்கே வந்தேன். குடும்பத்தினன் ஆனேன். கௌரவமாகவும் வாழ ஆரம்பித்தேன்.

''ஒரு நாள் திடீரென்று நந்தகோபாலைச் சந்தித்தேன். என்னை அவன் யாரென்று புரிந்து கொள்ளாதவனைப் போல் நடித்தான். அவனுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்து இரண்டு முறை அவனைச் சந்தித்தேன். என் பங்கைக் கொடுக்குமாறு வேண்டினேன் — வேண்டினேன் — மன்றாடினேன் — ஆனால் அவன் மறுத்துவிட்டான்.

''அதை நான் அடியோடு மறந்திருக்கலாம் இன்ஸ்பெக்டர். ஆனால் நான் பட்ட துன்பங்கள் — எனக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அடிக்கடி நினைவுக்கு வந்து என்னைத் துடிக்க வைத்தன. அத்துடன் நந்தகோபாலின் படாடோபமான வாழ்க்கை என் உள்ளத்தில் பொறாமையை உண்டாக்கியிருந்தது. அன்று இரவு — இரண்டில் ஒன்று என்ற முடிவுடன் தான் நான் அவனுடைய வீட்டுக்குச் சென்றேன். அவனுடைய வழக்கமான பதில் என்னை மிருகமாக்கியது. அவன் வாழ்வை முடித்துவிட்டு வந்த சுவடு தெரியாமல் திரும்பி விட்டேன்.

''முன்பு நீங்கள் என்னை விசாரித்தபோது சாதுர்யமாகப் பேசி நான் உங்களைத் திணற அடித்தேன். ஆனால் இப்பொழுது நீங்கள் விலங்குடன் வந்து என்னைத் திணற அடித்து விட்டீர்கள். சாமர்த்தியத்தினால் சட்டத்தை ஏமாற்ற முடியாது. அது எப்பொழுதும் விழித்துக் கொண்டுதான் இருக்கிறது. பகல் நேரத்தில் யாராவது என்னைப் பார்த்துவிடப் போகிறார்களே என்றுதான் நான் இரவு நேரத்தைத் தேர்ந்தெடுத்தேன். ஆனால் இரவுக்கு ஆயிரம் கண்கள் என்பது சரியாகி விட்டது. இன்ஸ்பெக்டர் சார்! நான் என் கடமையை நிறைவேற்றி விட்டேன்; நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்—''

இன்ஸ்பெக்டர் தம் கடமையை நிறைவேற்றினர். சிறிது நேரத்துக்குப் பிறகு கையில் விலங்கு பூட்டப்பட்ட குற்றவாளியைச் சுமந்து கொண்டு விரைந்து சென்று கொண்டிருந்தது போலீஸ் வான்.



உடம்புவலியை எதிர்த்து ஸாரிடான்



உடம்புவலி உங்களைத் தாக்கும்போது, ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள். ஒன்றே ஒன்று போதும். ஸாரிடானின் தனிப்பட்ட கலவைமுறை மட்டுமே உங்களை உடம்புவலி, தலைவலி, மனச்சோர்வு மற்றும் வலிகளிலிருந்து மீட்கிறது. நிவாரணமளித்து, சோர்வை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. ரோஷின் சர்வதேச ஆராய்ச்சியின் விளைவு இங்கு செயல்படுகிறது.

உடம்புவலியைப் போக்குகிறது ஒரே ஒரு **ஸாரிடான்**

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற, திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடி கொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை, துணியும் நீலம் படிவதில்லை.




எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன்', 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன், சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்றாக அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.






ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 60 சதம் (தபால் செலவு தனி)



mcm dcm 1090